# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 029 வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 10, புதன் 25.12.2013

பக்கம் : 32

வன்னி : ரூபா.20

யாழ். : ரூபா.20

கொழும்பு : ரூபா.30




மப்பான வானிலை

29 C 24 C




பக்கம் 06

வெளியுறவுக் கொள்கையின் பலவீனமே எல்லை ஊடுருவல்களுக்குக் காரணம்



பக்கம் 07

எகிப்தில் குண்டு வெடிப்பு



பக்கம் 22

நியூட்டன், உடுப்பிட்டி யுத் அணிகள் அபார வெற்றி



பக்கம் 23

எட்டு ஓட்டங்களால் தவறிய உலக சாதனை







# அரசுடன் இப்போதைக்கு பேச்சுக்கு சாத்தியமில்லை

## கூட்டமைப்பு நேற்று வவுனியாவில் தீர்க்கமான முடிவு

## நாடாளுமன்ற, மாகாண உறுப்பினர்கள் ஏகோபித்த ஆதரவு

யாழ்ப்பாணம், டிசெ. 25

இலங்கை அரசுடன் இப்போதைக்கு பேச்சு நடத்துவதற்கு தாம் தயாரில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் கூட்டாகத் தீர்மானித்துள்ளனர். அத்துடன் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவையும் நிராகரிப்பதாக இதன்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 'ஜனாதிபதியைச் சந்திப்பது குறித்தும் கட்சியின் நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களே கூடி முடிவெடுப்பர்' என்று நேற்றைய கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்ட விசேட கலந்துரையாடல் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று முற்பகல் 10 மணியிலிருந்து மாலை 6 மணி வரை நடைபெற்றது.

நேற்றைய சந்திப்பின் போது, 'வரவு - செலவுத் திட்ட இறுதி நாள் விவாதத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோரை பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள் ளார்' என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடருக்கு முன்னர் ஜனாதிபதியை சந்தித்து பேசுவது குறித்து சக உறுப்பினர்களிடம் கருத்துகளைக் கேட்டறிந்தார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்.

இதன் போது ஒரு சில உறுப்பினர்கள் மாத்திரமே பேச்சுக்கு செல்ல வேண்டும் என்று வலியுறுத்தினர். ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடர் முன்பாக பேச்சுக்கு செல்லக் கூடாது என்றும், சர்வதேச மத்தியஸ்தம் இல்லாமல் பேச்சுக்குச் செல்லக் கூடாது என்றும் ஒரு தொகுதி உறுப்பினர்களும் தெரிவித்தனர்.

இறுதியில் இப்போதைக்கு பேச்சுக்கு செல்வதில்லை என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது

21 ஆம் பக்கம் பார்க்க

## இரணைமடுத் திட்டத்தை ஆராய சுயாதீனக் குழு

### நியமித்தார் வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், டிசெ. 25

இரணைமடுக் குடிதண்ணீர் திட்டம் தொடர்பில் ஆராய்வதற்காக வடக்கு முதலமைச்சரால் சுயாதீனமான நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவின் இறுதி அறிக்கையின் பிரகாரமே அந்தத் திட்டம் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

குறித்த திட்டத்தினூடாக, இரணைமடுக் குளத்தின் குடிதண்ணீரை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த வேலைத் திட்டத்தின் பணிகள் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

எனினும் "இரணைமடுக் குளத்து நீரை யாழ்ப் பாணத்துக்கு கொண்டு செல்வதால் எமது விவசாய நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படும். எனவே நாம் இந்தத் திட்டத்துக்கு ஒரு போதும் சம்மதிக்க மாட்டோம் " என்று கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சாவகச்சேரியில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுக்கும், வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வர

21 ஆம் பக்கம் பார்க்க



கிறிஸ்து பிறப்பு விழா திருப்பலி நேற்று நள்ளிரவு தேவாலங்களில் நடைபெற்றது. கிறிஸ்தவர்கள் நள்ளிரவு தேவாலயங்களுக்குச் சென்று பாலகன் யேசுவின் ஆசி வேண்டி பிரார்த்தனை யில் ஈடுபட்டனர்.

## தீர்வுக்காக ஒன்றுபடுங்கள்

### பேராயர் அழைப்பு

கொழும்பு, டிசெ. 25

தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான உண்மையான பேச்சுக்களை முன்னெடுக்க கட்சி பேதங்களைக் கடந்து அனைவரும் ஒன்றுபடுவார்களானால் அதற்கு ஆதரவு வழங்க தாமும் தயாரென வணக்கத்துக்குரிய கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கையின் பல அரசுகளின் ஆட்சியின் கீழ் சர்வகட்சிக்குழுக் கலந்துரையாடல்கள் இடம்பெற்ற போதிலும், தமிழ்த் தலைவர்களுடன் உண்மையான பேச்சுகளை நடத்த அந்த ஆட்சியாளர்கள் தைரியமில்லாதிருந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

"தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நடவடிக்கைகளைக் காலம் தாழ்த்து வதால் நாடு சர்வதேச ரீதியில் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றைப் பெற்றுகொள்வதற்கானதொரு எண்ணத்தை வைத்துக் கொண்டாவது அனைவரும் ஒன்றுபட வேண்டும் என நான் அனைத்துக் கட்சித் தலைவர்களிடமும் கோரிக்கை விடுக்கிறேன்.

அடுத்த வருடம் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்

21 ஆம் பக்கம் பார்க்க

## மாகாணசபைக்கான இடையூறுகள் பொங்கலோடு நீங்க வேண்டும்

### இல்லாவிட்டால் வேறுவிதமான நடவடிக்கை என்கிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், டிசெ. 25

வடக்கு மாகாணசபையை செயற்படுத்துவதில் ஏற்படுத்தப்படுகின்ற நிர்வாகரீதியான முட்டுக் கட்டைகள் எதிர்வரும் தைப்பொங்கலுக்கு முன்னதாக நீக்கப்படும். அவ்வாறு நீக்கப்படா விட்டால் வேறுவிதமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கு

21 ஆம் பக்கம் பார்க்க

## செய்தியாளரை தாக்கியோர் யசிந்தனின் உறவினர்களே

### மேலும் இருவர் நேற்றுக் கைது

கிளிநொச்சி, டிசெ. 25

உதயன் வன்னிப் பிராந்திய செய்தியாளர் கிருஷ்ணகுமாரை தாக்கியவர்களில் இருவர், நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் றெக்ஷயனின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைதாகியுள்ள யசிந்தனின் உறவினர்கள் என்று அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் அக்கராயன் பகுதியைச்சேர்ந்த ச.செந்தில்நாதன், தவராசா ஆகியோர் நேற்று கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

ஏற்கனவே கைது செய்யப்பட்



டுள்ள நந்தன் என்பவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் நேற்று மேற்குறித்த இரு வரையும் பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில்

21 ஆம் பக்கம் பார்க்க

## சமாதானத்தின் பிறப்பே நத்தார்

### வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ. 25

நத்தார் பண்டிகை எல்லா மக்கள் மத்தியிலும் சமாதானம்

21 ஆம் பக்கம் பார்க்க

## அரசின் போரழிவு மதிப்பீட்டை நிராகரித்தது கூட்டமைப்பு

### வவுனியாக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ. 25

இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட போர்க்கால இழப்பீடு தொடர்பான கணக்கெடுப்பு நடவடிக்கைகளை முற்றாக நிராகரிக்கிறோம். அதே வேளை, எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் உண்

21 ஆம் பக்கம் பார்க்க


# ஜனாதிபதியின் செயலாளர் ஜனவரியில் ஜெனீவாவுக்கு

## அரசின் நல்லிணக்கம் பற்றி விளக்கமளிக்க

கொழும்பு,டிசெ 25

ஐ.நா மனித உரிமைகள் சபையின் அடுத்த ஆண்டு மார்ச் அமர்வுக்கு முன்னர் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்கள் பற்றி அரசு விளக்கமளிக்கவுள்ளது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு பொறுப்பாகவுள்ள ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஜனவரியில் ஜெனீவா சென்று பல்வேறு நாடுகளின் நிரந்தரப் பிரதிநிதிகளுக்கு இது குறித்து விளக்கமளிப்பார்.



இலங்கையிலுள்ள இராஜதந்திர நிறுவங்களின் தலைவர்களுக்கும் இது தொடர்பான விளக்கமளிக்கப்படுமென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதில் பல சாதனைகள் உள்ளன. இவற்றுள் 12 ஆயிரம் விடுதலைப்புலிகளை சமூகத்துடன் இணைத்தமை மிகப் பெரிய சாதனையாகுமென அவர் கூறினார். (த)

# வரவு-செலவுத் திட்டத்தை எதிர்க்கும் உறுப்பினர்களின் பதவி பறிபோகும்

## பிரதேச சபை உறுப்பினர்களுக்கு சம்பந்தன் எச்சரிக்கை


யாழ்ப்பாணம், டிசெ. 25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பிரதேச சபைகளின் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்கும் கட்சிஉறுப்பினர்களின், பிரதேச சபை.உறுப்பினர் பதவி பறிக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் செயலாளர் மாவை. சேனாதிராஜா இருவரும் தெரிவித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சிச் சபைகளில் சிலவற்றின் வரவு - செலவுத் திட்டம் தொடர்ச்சியாகத் தோற்கடிக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட பிரதேச சபைகளின் உறுப்பினர்களை நேரடியாகச் சந்தித்து. வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்க வேண்டாம் என்று செயலாளர் மாவை. சேனாதிராசா தெரிவித்த பின்னரும் தோற்கடிப்புக்கள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியமான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் நேற்று இடம் பெற்றது. இதன் மதியபோசனத்தின்போது, யாழ்ப்பாணத்தில் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்ட வலி.கிழக்கு, வல்வெட்டித்துறை நகர சபைகளின் தவிசாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேரடியாகச் சென்று தலைவர் சம்பந்தன், செயலாளர் மாவை.சேனாதிராசா ஆகியோரைச் சந்தித்தனர்.

'எமது கட்சியின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சிச் சபைகளின் வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்கும் நடவடிக்கைகளுக்கு யாரும் ஆதரவளிக்கக் கூடாது என்று உறுப்பினர்களைக் கடிதம் மூலமாக கேட்டிருந்தோம். இவ்வாறு வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்கும் சபை உறுப்பினர்கள் கட்சி உறுப்புரிமை மற்றும் பிரதேச சபை உறுப்பினர் பதவி ஆகியவற்றில் இருந்தும் நீக்கப்படுவார்கள் என்று தலைவர் சம்பந்தன், செயலாளர் மாவை. சேனாதிராசா இருவரும் உறுதியளித்துள்ளனர்' என்று வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.உதயகுமார் தெரிவித்தார். (த-5-402)



# மது விற்பனை நிலையங்கள் இன்று மூடப்படும்

கொழும்பு,டிசெ 25

கிறிஸ்மஸ் தினமான இன்று புதன்கிழமை நாட்டிலுள்ள சகல மதுபானச் சாலைகளும் மூடப்படும் என்று மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் வசந்த ஹப்பு ஆராய்ச்சிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் அவர் வழங்கிய உத்தரவுக்கு அமையவே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலப்பகுதியில் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு 24 மணித்தியால சோதனை நடவடிக்கை முன்னெடுக்கவுள்ளதாகப் பொலிஸார் அறிவித்துள்ளனர். (த)

# சுகாதார அமைச்சு அலுவலகம் முன் நாளை கவனவீர்ப்புப் போராட்டம்

## சுகாதாரத் தொண்டர்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் நேற்றும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதேவேளை நாளை தொடக்கம் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை பண்ணையில் உள்ள சுகாதார அமைச்சு அலுவலகம் முன்பாக முன்னெடுக் கப்படவுள்ளதாகவும் அவர்கள் தெரி வித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை தொடக்கம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை முன்பாக சுகாதாரத் தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

"குடும்ப நல தாதிய உத்தியோகத்தர்களுக்கு உதவியாளர்கள் என்றே நாம் நியமனம் செய்யப்பட்டோம். எனினும் குடும்ப நல தாதியர்களுக்குப் பற்றாக்குறை காரணமாக அவர்களின் 70 வீதமான பணிகளை நாங்களே செய்து வருகிறோம். இத்தனை வருடங்களாக நாம் செய்து வந்த பணிகளை தொடர்ந்து செய்ய கல்வித்தகைமை மேலதிகமாகத் தேவையில்லை. நாம் தற்போது முன்னெடுத்து வரும் பணியை தொடர்ந்து செய்வதாக இருந்தாலும் சரி, வெற்றிடங்கள் நிலவும் யாழ்.போதனா வைத்திய சாலையில் என்றாலும் சரி எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்.

தவிர சுமார் 30 தொண்டர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மூன்று மாதங்களாக வழங்கப்படவில்லை" என்று தொண்டர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, "குளோபல் பண்ட்" அமைப்பே தொண்டர்களுக்கான கொடுப்பனவை வழங்கி வருகிறது. தொண்டர்கள் சிலரது வங்கிக் கணக்கு இலக்கம் மாறுபட்டதனாலேயே கொடுப்பனவு தாமதமாகியது - என்றார்.

குறிப்பிட்ட அளவிலான எண்ணிக்கையுடைய தொண்டர்களே நேற்றுக் கவனவீர்ப்பில் ஈடுபட்ட போதும் ஏனையோர் தொடர்ந்தும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# பட்டதாரிப் பயிலுநர்கள் நேற்று தென்மராட்சியில் போராட்டம்

## நிரந்தர நியமனம் வழங்கக் கோரி

யாழ்ப்பாணம், டிசெ. 25

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பட்டதாரிப் பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் தமக்கான நிரந்தர நியமனம் இன்னமும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, பிரதேச செயலகத்தில் நேற்றையதினம் கவனவீர்ப்புப் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

இவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை வழங்கப்படுமென்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் வேலையற்ற பட்டதாரிகள் அரச சேவையில் உள்ளீர்ப்பு செய்யப்பட்டனர். இவர்கள் பட்டதாரிப் பயிலுநர்கள் என்ற அடிப்டையில் கடமையாற்றினர். ஆறு மாதங்களில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்ற உறுதிமொழியை நம்பி இவர்கள் கடமையாற்றிய போதும் 18 மாதங்களின் பின்னரே அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்திலுள்ள பட்டதாரிப் பயிலுநர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் கடந்த 15 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 263 பட்டதாரிப் பயிலுநர்கள் வரை கடமையாற்றும் போதும் ஆயிரத்து 83 பேருக்கே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

இந்த நிரந்தர நியமனத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த எவருக்கும் நியமனக் கடிதம் வழங்கப்படவில்லை. இது தொடர்பில் பட்டதாரிப் பயிலுநர்கள் மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, விரைவில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. தொடர்ச்சியாக இவ்வாறான தொரு பதிலே வழங்கப்பட்டு வந்திருந்தது. இந்த நிலையிலேயே பட்டதாரிப் பயிலுநர்கள் திடீரெனக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் குதித்தனர்.

ஏனையோருக்கு நியமனம் வழங்கிய பின்னர் தமக்கு வழங்கப்படும் போது, விரும்பிய நிலையத்தைத் தேர்வு செய்ய முடியாது எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

நேற்றுக் காலையிலிருந்து பட்டதாரிப் பயிலுநர்களால் இந்தப் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. போராட்டத்தின் முடிவில் அரச அதிபருக்கான மனுவொன்று பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, பட்டதாரிப் பயிலுநர்களின் போராட்டம் தொடர்பில் தனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், அவர்கள் அனைவருக்கும் மற்றும் ஏனைய சில பிரதேச செயலகங்களில் வழங்கத் தவறியவர்களுக்கும் எதிர்வரும் திங்கட்கிழமை கட்டாயம் நியமனம் வழங்கப்படும் என்று தெரிவித்தார். (த-5)

# வீட்டுக்காரரின் அசிரத்தை பறிபோனது ரூ. 70 ஆயிரம்

வலி.வடக்கு, டிசெ. 25

அதிகாலை கணவனும் மனைவியும் பக்கத்திலுள்ள ஆலயத்துக்குச் சென்ற சமயம் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த திருடன் வீட்டுக்குள் புகுந்து அங்கு பாதுகாப்பாக வைத்திருந்த 70 ஆயிரம் ரூபாவை திருடிக்கொண்டு தலைமறைவாகிவிட்டான்.

இந்த விசித்திரமான திருட்டு தாவடி பாடசாலை வீதியில் இடம் பெற்றுள்ளது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:-

தாவடியைச் சேர்ந்த குடும்பஸ்தர் அருகாமையில் உள்ள விநாயகர் ஆலயத்தில் அதிகாலை நடைபெறும் பூசையில் கலந்து கொள்வதற்காக தனது மனைவியை அழைத்துச் செல்வது வழக்கம். சம்பவதினம் அதிகாலை 5 மணியளவில் வழமை போல் வீட்டைப் பூட்டிக் கதவில் திறப்பை விட்டுவிட்டு மனைவியை அழைத்துக்கொண்டு ஆலயத்துக்குச் சென்றுள்ளார்.

அவ்விடத்தில் மறைந்திருந்த திருடன் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கதவைத் திறந்து உள்ளே சென்று அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 70 ஆயிரம் ரூபாவைச் சுருட்டிக் கொண்டு சென்றுவிட்டான்.

ஆலயத்திலிருந்து சில நிமிடங்களில் திரும்பிவந்தபோது பூட்டிய கதவு திறந்திருப்பதைக் கண்டு அதிர்ச்சிக்குள்ளான வீட்டுக்காரர் உள்ளே சென்று பார்த்தபோது பெட்டியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 70 ஆயிரம் ரூபா திருடப்பட்டது தெரியவந்தது.

இத்திருட்டு பற்றி சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (ஒ-115)

# சாரதிகளை கண்காணிக்க விசேட வேலைத் திட்டம்

கொழும்பு,டிசெ 25

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்வதற்கான விசேட வேலைத் திட்டம் ஒன்று முன் எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டம் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

# பளை பிரதேச சபையின் பட்ஜெட் நிறைவேறியது

பளை டிசெ. 25

பளை பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டப் பொழிவுகள் சபை உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேறியது.

நேற்றுமுன்தினம் பிரதேச சபை மண்டபத்தில் இடம் பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஆளுங்கட்சியின் 6 உறுப்பினர்களும் எதிர்க்கட்சியின் இரண்டு உறுப்பினர்களும் தலைவரால் முன்மொழியப்பட்ட வரவு செலவுத் திட்ட மொழிவுகளை ஏகமனதாக ஆதரித்ததாக சபைத் தலைவர் ப.பொ. அன்ரன் தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டுக்கான முன்மொழிவுகள் தொடர்பாக அனைத்து உறுப்பினர்களுடனும் மூன்று நாள்கள் ஆராயப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் பொழிப்புகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# வடக்கில் 2 புதிய திணைக்களங்களுக்கு ஆளுநர் ஆதரவு

வடக்கு மாகாணசபை இரண்டு புதிய திணைக்களங்களை உருவாக்குவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளுக்குத் தேவையான, ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்குமாறு நிதியமைச்சிடம் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ.சந்திரசிறி கோரிக்கை விடுத்துள்ளார்.

வீடமைப்பு மற்றும் போக்குவரத்துத் திணைக்களங்களைப் புதிதாக உருவாக்கும் யோசனையை வடக்கு மாகாண சபையின் வரவு -செலவுத் திட்டத்தில், முதலமைச்சர் விக்னேஸ்வரன் முன்மொழிந்திருந்தார்.

இது அரசமைப்புக்கு முரணானது என்று ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி, ஊடகங்களில் தெரிவித்த கருத்து சர்ச்சையை உருவாக்கியிருந்தது. இதையடுத்து, ஆளுநருக்கும், மாகாண சபைக்கும் இடையிலான பனிப்போர் தீவிரம்பெற்றது.

இந்த நிலையில், வடக்கு மாகாணசபையின் வரவு -செலவுத்திட்டம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அதற்கு ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி கடந்த வார இறுதியில் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

அத்துடன், வடக்கு மாகாண சபையினால் கோரப்பட்டுள்ள, போக்குவரத்து மற்றும் வீடமைப்புத் திணைக்களங்களை உருவாக்குவதற்கான ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்குமாறு நிதி அமைச்சின் கீழ் செயற்படும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு, வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி எழுத்து மூலம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார். இரு திணைக்களங்களையும் உருவாக்குவதற்காகவும், இதற்கான ஆளணி அனுமதியைப் பெற்று நியமிப்பதற்கும் உதவி வழங்குமாறு அவர் கோரியுள்ளார்.

இதேவேளை, மாகாண சபையினால் கோரப்படும் இரு திணைக்களங்களை உருவாக்குவது தொடர்பான, அதற்கான நியதிச் சட்டங்களை உருவாக்குவது குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வடக்கு மாகாண சபைக்கு ஆளுநர் ஆலோசனைகளை வழங்கியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## சாரதிக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, டிசெ.25

வயோதிபரை மோதிய பஸ்ஸின் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

நேற்று முன்தினம் சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் சைக்கிளில் சென்ற வயோதிபரை மோதிய இ.போ.ச. வின் மன்னார் சாலை சாரதியான நைனா முகமட் ஹனீஸ் என்பவரை சாவகச்சேரி பொலிஸார் நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர்.

சாரதியை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (வ-9)

## சமுர்த்தி வங்கிக்கு கட்டடங்கள்

கிளிநொச்சி, டிசெ.25

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச செயலக பிரிவில் இரண்டு சமுர்த்தி வங்கிக்கான கட்டடங்கள் திறந்து வைக்கப் படவுள்ளன.

எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி நகர் சமுர்த்தி வங்கிக் கட்டடமும் மு.ப.10 மணிக்கு ஸ்கந்தபுரம் சமுர்த்தி வங்கிக் கட்டடமும் திறந்து வைக்கப்படவுள்ளன.

கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனும் கலந்துகொள்வர். (வ-9)

# மக்களின் வாழ்வாதார உதவிக்கு ஆளுநர் அனுமதி வழங்கவில்லை

*மாதாந்தக் கூட்டத்தில் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்,டிசெ.25

சபை உறுப்பினர்களால் அங்கீகரித்து தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2013 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் தெரிவிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார உதவி மற்றும் சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி, விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்கென ஒதுக்கப்பட்ட நிதிக்கு ஆளுநர் அங்கீகாரம் வழங்கவில்லை.

இதன்மூலம் மக்களின் தேவைக்கு உதவவேண்டிய திட்டங்களை நிறைவேற்றவிடாது முடக்கி வைக்கிறார் ஆளுநர் என நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.வசந்தகுமார் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சபையில் மாதாந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

வாழ்வாதார உதவிகளுக்கு ரூபா 3 மில்லியனும் சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்கு 2 மில்லியனும் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கு ஒரு மில்லியனும் ஒதுக்கப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டில் இதுபோன்று ஒதுக்கப்பட்ட நிதியூடாக மக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த ஆண்டில் குறிப்பிட்டளவுக்கான அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து பல தடவை மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் ஆளுநரின் அனுமதியைப் பெற நடவடிக்கை எடுத்த போதும் அவர்களிடமிருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை.

எனவே மீண்டும் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டதற்கு அமைய வாழ்வாதார மற்றும் சனசமூக நிலையங்கள் விளையாட்டுத் துறைக்கான அபிவிருத்தித் திட்டங்கள் கோரப்பட்டன.

எனினும் அதற்கான அனுமதி இதுவரை கிடைக்கவில்லை. சபையின் செயற்பாடுகளை முடக்கும் ஒரு நடவடிக்கையாக இது அமைகிறது - என்றார். (வ-7)

## தனியார் காணிகளிலுள்ள பாதீனியத்தை அழிக்குக

*உரிமையாளர்களுக்கு நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் வலியுறுத்தல்*

யாழ்ப்பாணம், டிசெ.25

தனியாருக்குச் சொந்தமான காணிகள், தோட்டங்களில் காணப்படும் பாதீனியத்தை அவற்றின் உரிமை யாளர்கள் அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண் டும் என்று நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

பாதீனியத்தால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைக் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டிய உரிமையாளர்கள் அவற்றை ஒழிக்க நடவடிக்கை எடுக்காதுவிடின் அவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவர்.

வீதிகளிலும் பொது இடங்களிலும் காணப்படும் இந்தச் செடிகளை அழிப்பதற்கான நடைமுறைகளை பிரதேச சபை தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (வ-7)

"-"

**பாதீனியத்தால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டிய உரிமையாளர்கள் அவற்றை ஒழிக்க நடவடிக்கை எடுக்காதுவிடின் அவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவர்.**



தமக்கு நிரந்தர நியமனம் கோரி தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் பணிப் புறக்கணிப்பில் நேற்று ஈடுபட்டனர்.

## இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம்

வரணி, டிசெ.25

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வெற்றிடமாக உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் பதவிகள் மூன்றுக்கு வடக்கு கிழக்கை வதிவிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் மற்றும் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட பட்டம் ஒன்றை பெற்றிருக்க வேண் டும்.

அத்துடன் அரச நிறுவனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட வணிக நிறுவனம், இளைஞர்சேவை அபிவிருத்தி சமூக அபிவிருத்தி கூட்டுறவுச் செயற்பாடுகள், கிராமிய அபிவிருத்தி சம்பந்தமான துறைகளில் குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்கள் தலைவர், பணிப்பாளர் நாயகம் ஸ்ரீலங்கா யூத் மஹரகம என்னும் விலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-122)

## வசதிகளற்ற நிலையில் சிறுவர் இல்லம்

முல்லைத்தீவு, டிசெ.25

முத்து ஐயன்கட்டு கனகரத்தினபுரம் புனித பூமி சிறுவர் இல்லம் கட்டட வசதி, மின்சார வசதி என்பன இல்லாத நிலையில் இயங்கி வருகின்றது.

இந்த இல்லத்தில் தாய் தந்தையரை இழந்த சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களுக்குரிய கல்வியும் இந்த இல்லத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது 99 சிறுவர்கள் இங்கு தங்கியுள்ளனர்.

மேலும் பல சிறுவர்கள் இந்த இல்லத்தில் இணைக்கப்படவுள்ளனர்.

ஆனால் இங்கு போதிய கட்டட வசதிகளோ அல்லது மின்சார வசதியோ இல்லை. இதனால் இங்கு தங்கியுள்ள சிறார்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த இல்லம் அமைந்துள்ள கிராமம் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது.

இங்கு வசிக்கும் மக்களும் மிகவும் வறிய நிலையிலும் அடிப்படை வசதிகள் யாவும் பூர்த்தி செய்யப்படாத நிலையிலுமே வாழ்ந்து வருகின்றனர். புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் போதிய நிதி உதவிகளை வழங்கினால் இந்தச் சிறுவர் இல்லத்துக்கான சகல தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டு விடுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (க-500)

# சுயதொழிலில் ஈடுபடும் மகளிருக்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படும்

*பிரதேச அபிவிருத்தி வங்கியின் வடக்கு பொது முகாமையாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்,டிசெ.25

சுயதொழில் முயற்சிகளை மேற்கொண்டுவரும் பெண்களின் தொழில் முயற்சிக்காக இரண்டரை இலட்சம் ரூபா கடனை வட்டி மற்றும் அரச பிணை இல்லாமல் வழங்குவதற்கு பிரதேச அபிவிருத்தி வங்கி தயாராகவுள்ளது என்று வடக்கு மற்றும் வடமத்திய பிரதேச பொது முகாமையாளர் சேனரத்ன பண்டார தெரிவித்தார்.

பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்.கிளையின் ஏற்பாட்டில் ஒளிவிழா நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை வங்கியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:

இன, மத பேதமின்றி ஒற்றுமையுடன் எமது சமுதாயம் வாழவேண்டும் என்பதே அனைவருடைய எதிர்பார்ப்பாகவும் உள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் பிரதேச அபிவிருத்தி வங்கி தனது வங்கிச் சேவையை வழங்கி வருகிறது. வடமாகாணத்தில் குறைந்த காலத்தில் யாழ்ப்பாணம், சுன்னாகம் உட்பட 6 கிளைகளில் அதிகமான வாடிக்கையாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். அடுத்த வருடம் முற்பகுதியில் சாவகச்சேரியிலும் ஏனைய இடங்களிலும், புதிய கிளைகளைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடக்கு பிரதேசத்தில் குழு அடிப்படையில் அதிகமான பெண்கள் வாடிக்கையாளர்களாக இணைந்து பயன்பெற்று வருகின்றனர்.

அத்துடன் பிரதேச அபிவிருத்தி வங்கியின் விசேட திட்டமாக சுய தொழில்களை மேற்கொண்டுவரும் பெண்களது சுயதொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்காக வட்டி, அரச பிணைகள் இல்லாத கடனை வழங்குவதற்கு பிரதேச அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது.

ஏற்கனவே தொழில் முயற்சிகளை மேற்கொள்ளும் பெண்கள் இந்தக் கடன் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். எதிர்வரும் காலங்களில் புதிய புதிய சேவைகளை பிரதேச அபிவிருத்தி வங்கி வழங்கவுள்ளது. வங்கியின் சேவையுடன் வாடிக்கையாளர்கள் தம்மை இணைத்து அதற்கான பயனைப் பெற்றுக் கொள்ளலாம்-என்றும் தெரிவித்தார். (வ-14)

"-"

**வடமாகாணத்தில் குறைந்த காலத்தில் யாழ்ப்பாணம், சுன்னாகம் உட்பட 6 கிளைகளில் அதிகமான வாடிக்கையாளர்கள் இணைக் கப்பட்டுள்ளனர்.**

## குறித்த நேரத்துக்கு முன்பாக புறப்படும் இரவுநேர இறுதி பஸ்

*கொடிகாமம்-பருத்தித்துறை மார்க்கத்தில்*

நெல்லியடி, டிசெ.25

கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி புறப்படும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் இறுதி நேரத்துக்கு முன்பாகவே புறப்படுவதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி புறப்படும் பஸ் நேரம் இரவு 8 மணியாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் ஞாயிற்றுக்கிழமை 8 மணிக்கு முன்னர் புறப்பட்டுச் சென்றதால் பயணிகள் ஏமாற்றமடைந்து முச்சக்கர வண்டிகளில் அதிக பணம் கொடுத்து வீடு வந்து சேர்ந்ததாகவும் ... பிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பருத்தித்துறைச்சாலை முகாமையாளரிடம் கேட்டபோது இறுதி பஸ் புறப்படும் நேரம் 8 மணி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் புறப்பட்டிருந்தால் அது தொடர்பாக தாம் விசாரணை மேற்கொள்வதாகவும் பருத்தித்துறை சாலை முகாமையாளர் கே.கந்தசாமி தெரிவித்தார்.

வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தரும் பயணிகள் இறுதி பஸ் இல்லாததால் மிகுந்த அசௌகரியத்தையும், பாதுகாப்பு இன்மை, அதிக பணச் செலவு போன்ற பல இடையூறுகளுக்கு முகம் கொடுப்பதாகவும் இது தொடர்பாக சாரதிகள் புரிந்துணர்வுடன் சேவையை ஆற்றுமாறும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-422)

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

திருகோணமலை,டிசெ 25

திருகோணமலை சிறையில் உள்ள 32 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 6ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

எல்லை மீறி மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி 4 படகுகளுடன் முல்லைத்தீவு கடற்பரப்பில் வைத்து மேற்படி மீனவர்கள் 32 பேரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களின் படகுகள் நான்கும் டொக்யாட் கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் மீனவர்களை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை இவர்கள் மீண்டும் திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். நீதிவான் யு.எல்.எம். அஸ்ஹர் இந்த மீனவர்கள் 32 பேரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த)

## பெறுபேறு மீளாய்வுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ. 25

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்ய எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் எனப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அண்மையில் வெளியான இப்பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்யவிரும்பும் மாணவர்கள் பாடசாலைகள் ஊடாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாகவும் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-8)

# 8 வருடங்களில் ரூபா 600 மட்டுமே சம்பள அதிகரிப்பு

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்து 8 வருடங்கள் கடந் துள்ள நிலையிலும், அரச ஊழியர்களின் மாதாந்த சம்பளம் வெறும் 600 ரூபா வால் மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது. சம்பள உயர்வு வேண்டுமாயின் அரச ஊழியர்கள் தொழிற் சங்க நடவடிக்கைகளில் நிச்சயமாக ஈடுபட்டே யாகவேண்டும். இல்லாவிட்டால் அடுத்த வருடம் இதைவிட வும் துன்ப மிக்க தாய் அமையும்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.கவின் தேசியத் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற அரச சேவைகள் தேசிய அச்சு சேவைகள் சங் கத்தின் 46ஆவது ஆண்டுபூர்த்தி நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளி யிட்ட அவர், மேலும் தெரிவித்துள் ளவை வருமாறு.

தொழில்துறை அமைச் சராக இருந்த தற்போதைய நிதி அமைச்சரான ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ, அடுத் தாண் டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் தமக்கு சம்பள அதிகரிப்பை மேற்கொள்வார் என அரச ஊழியர்கள், தனியார் ஊழியர்கள், தோட்டத்தொழிலாளர்கள் எதிர்ப்பார்த்தனர். ஆனால் எவருக்குமே சம்பளஉயர்வுமேற் கொள்ளப்படவில்லை.

கடந்த 2012ஆம் ஆண்டில் அரச சேவையாளர்களுக்கு ஆயிரத்து 200 ரூபா சம்பள அதிகரிப்பைமேற் கொண்டு கடந்த வருட ஏப்ரல் மாதம் அரசு மின் கட்டணத்தை அதிகரித்து. நாட்டு மக்களின் ஒருபைக்குள் ஆயிரம்ரூபாவைப் போட்டு. மறு பைக்குள் இருந்து இரண்டாயிரம் ரூபாவை அரசு களவாடுகின்றது.

8 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் மக்களுக்கு மானியம் வழங்காத அரசு, இனி மேலும் மானியம் வழங்காது என் பதை நான் சுட்டிக்காட்டுகின்றேன்.

எனவே, தொழிலாளர்கள் தமது உரிமைகளை வென் றெடுக்க வேண்டுமாயின், அனைத்து தொழிற் சங்கங்களும் ஒன்றிணைந்து வீதிக்கு இறங்கிப் போராட வேண்டும். அதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்க நாம் தயாராகவே உள்ளோம். - எனத் தெரிவித்துள்ளார். (த-12)

# எதிர்காலத்தை வெல்வதற்கு இந் நாளில் உறுதி பூணுவோம்

## வடக்கு மாகாண உறுப்பினர் அய்யூப்

யாழ்ப்பாணம்,டிசெ.25

விலைவாசி வானை எட்டியுள்ள இந்த காலத்தில் பண்டிகைகளை கொண்டாடுவதற்கான எந்த ஏதுக்களும் இல்லை. என்றாலும் இனிவரும் காலங்களை வளமாக்க இந்த வருடத்தில் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுவோம்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு வட மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் அய்யூப் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

புனித நத்தார் பண்டிகையைகொண்டாடும் அனைத்து கிறிஸ்தவ நல்லுள்ளங்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது நாட்டில் இன்றைய சூழலில் இவ்வாறான ஒரு தினத்தைசிறந்த முறை யில் கொண்டாட வாய்ப்பிருக்கிறதா என்பது பெரும் வினாவாகும். வாழ்க்கைச் செலவு வானை முட்டும் அளவுக்கு உயர்ந்திருக்கும் தருணத்தில் நாட்டில் ஒரு சாராருக்கு மட்டுமே அல்லது அதிகாரத்தை முழுமையாக தன் கையில் வைத்திருக்கும் சிலருக்கே இப் பண்டிகை சிறப்பாக அமையும். இன்னுமொரு சாரார் அடுத்த வேளை உணவுக்கே கஸ்டப்படும் நிலையிலேயே இன்றைய நாள் கடக்கிறது.

இந்த நிலை மாறி அனைவரும் சமமாக வாழ இந்த நன்னாளில் பிரார்த்திப்போமாக என்றுள்ளது. (த-10,400)

**வேலைக்கு ஆள்கள் தேவை**

கொக்குவில் பகுதியில் இயங்கும் புத்தகசாலை ஒன்றிற்கு A/L படித்த பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்பு: 077 2367848

**யாழில் இயங்கும் பிரபல காகிதாதி நிறுவனமொன்றுக்கு வேலையாள்கள் தேவை**

* Stock Maintaining
ஓரளவு Computer அறிவுள்ள A/L படித்த இரு பெண்கள்
* Book Shop அனுபவமுள்ள 25-40 வயதுக்கு இடைப்பட்ட ஆண்கள்

தொடர்பு:- 077 9257406, 077 8730114

## கண்ணீர் அஞ்சலி



எமது ஸ்தாபனத்தின் ஆலோசகராகவும் நிறுவன வளர்ச்சியில் முக்கிய பங்களிப் பாளராகவும் அயராது உழைத்த

**சுப்பையா பொன்னம்பலம்**

(முன்னாள் முருகானந்தா ஸ்ரோர்ஸ், அடம்பன் பங்காளர்)

அவர்களது இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்றாகும் இவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன் இவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

துரை வீதி இணுவில்.

உரிமையாளரும், ஊழியர்களும், அண்ணா கோப்பி நிறுவனம்.

## மரண அறிவித்தல்



**சுப்பையா பொன்னம்பலம்**

(முன்னாள் உரிமையாளர், முருகானந்தா ஸ்ரோர்ஸ் அடம்பன்)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பொன்னம்பலம் நேற்று (24.12.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ரத்தினபூபதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கச்சியம்மா, இராசம்மா, வைத்திலிங்கம் மற்றும் தருமலிங்கம் (இந்தியா), காலஞ்சென்ற குமாரசாமி (கனடா) மற்றும் நாகம்மா, சீனியம்மா, பத்மாதேவி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் இராசகோபாலசிங்கம் (லண்டன்), அன்னலட்சுமி, சந்திரவதனா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பொன்மலர்ச்செல்வி, பொன்தாமரைச்செல்வி, பொன்சிவசோதி (சுவிஸ்), பொன்மோகனச்செல்வி, பொன்மதிச்செல்வி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாதம், புஸ்பராசா (ஆசிரியர், முல்/ பாரதி வித்தியாலயம்), சயந்தி(சுவிஸ்), ஜனார்த்தனன் (ஸ்ரீலங்கா ரெலிகொம், யாழ்ப்பாணம்), கிருஸ்ணகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும்,யோகலட்சுமி (லண்டன்), பிரகானன், பிரகர்ஷிகா, சிவனுயா, சிவார்த்தி, சிவாதணி, சிவறூபி, சிவசுதன் (சுவிஸ்), கிசோரன், கிருசாணு, நயனி, கிஷாந், கஜந் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், றொக்சியின் (லண்டன்) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25/12/2013) புதன்கிழமை பி.ப. 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்கா தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி:- 021 321 4040, 021 224 1515, 0041442723463

தகவல்: பொன்சிவசோதி (மகன்)

## மரண அறிவித்தல்

**திருமதி அன்னலட்சுமி தவராசா (சங்கானை)**

அராலி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி தவராசா நேற்று (24.12.2013) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் திருமேனி தவராசாவின் அன்பு மனைவியும், சசிகுமார், மதிவதனி, ரமேஸ்குமார், சுரேஸ் குமார், தயாளகுமார், டல்சி ஆகியோரின் அன்புத் தாயும், துரைராசா, மகேஸ்வரி காலஞ்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரியதர் சினியின் அன்பு மாமியும், சபினாஸின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2013) புதன் கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வீதி, சங்கானை.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**மாதர் மாப்பாணர்**



கோப்பாயைப் பிறப்பிடமாகவும், உழவனூர் தம்பிராசபுரத்தை வசிப்பிட மாகவும் கொண்ட மாதர் மாப்பாணர் கடந்த (20.12.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் புஸ்பராணி (ஜேர்மனி) பங்கராணி காலஞ்சென்ற அரியராசன், அரியபாலன் (ஜேர்மனி), வசந்தகுமாரி, சாந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும் கந்தசாமி, நடராசா, கோவிந்த சாமி, சிறிகாந்தன் (சிறி), பவளராணி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் றஜனி (ஜேர்மனி), நிர்மலா, கரன் (பிரான்ஸ்), நகுலேஸ்வரன், சுரேந்திரன், குமார், கவிதா, தர்சினி, பிரியதர்சினி, நிரோஜன், விதா, சர்மிலன், தாட்சாயினி, சரணிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2013) புதன்கிழமை ந.ப. 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விசுவமடு 12 ஆம் கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உழவனூர், தம்பிராசபுரம்.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நடமாடும் வியாபாரிகளால் நிரந்தர வர்த்தகர் பாதிப்பு

வலி.தென்மேற்கு, டிசெ.25
பண்டிகை நாள்களை முன்னிட்டு மானிப்பாய் நகருக்கு படையெடுக்கும் நடமாடும் வியாபாரிகளால் நிரந்தர வியாபாரிகளுக்கு பல வழிகளாலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டியுள்ள மானிப்பாய் கோயில்பற்று வர்த்தகர் சங்கத் தலைவர், நிரந்தர வியாபாரிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நடமாடும் வியாபாரிகளுக்குத் தனியான இடத்தை ஒதுக்கிக் கொடுக்குமாறு பொலிஸாரிடம் கோரியுள்ளார்.

மானிப்பாய் பொலிஸாருக்கும் வர்த்தகர்களுக்குமான கலந்துரையாடல் மானிப்பாய் கலாசாரமண்டபத்தில் நடைபெற்றது. நாட்டில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் கொள்ளை, வழிப்பறி, திருட்டு போன்ற குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது குறித்தும் மக்களின் ஒத்துழைப்பு குறித்தும் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

கலந்துரையாடலில் கலந்து கொண்ட மானிப்பாய் கோயில் பற்று வர்த்தகர் சங்கத் தலைவர் வர்த்தகர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைப்பாடு குறித்துத் தெரிவிக்கையில்;

பண்டிகைக்காலங்களை முன்னிட்டு மானிப்பாய் பட்டினத்துக்குப் படையெடுக்கும் நடமாடும் வியாபாரிகள் வீதியோரங்களில் வைத்து வியாபாரத்தில் ஈடுபடுவதால் நிரந்தர வியாபாரிகளுக்குப் பெரியளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வங்கியில் கடன் எடுத்து, வட்டிக்குப் பணம் வாங்கி, வாடகைக்குக் கடையெடுத்து, சம்பளத்துக்கு வேலையாள்களை வைத்து வியாபாரத்தில் ஈடுபடும் நிரந்தர வியாபாரிகள், வியாபாரம் இன்மையால் பெற்ற கடன்களைத் திரும்பச் செலுத்த முடியாமல் திண்டாடுகின்றார்கள் - என்றார். (வ-115)




யாழ்.நகரின் ஆஸ்பத்திரி வீதியின் நடைபாதையில் மீண்டும் வீதியோர வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (வ-14)

## யானைத் தந்த முத்துகளுடன் மூவர் கைது

தெல்லிப்பழை, டிசெ.25
ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான யானைத் தந்தத்தின் முத்துக்களை விற்பனை செய்ய முற்பட்ட 3 இளைஞர்கள் தெல்லிப்பழை பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மல்லாகம் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக குறித்த 3 இளைஞர்களும் யானைத் தந்தத்தின் முத்துக்களை விற்பனை செய்ய முயற்சித்துக் கொண்டிருந்த வேளை வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் தெல்லிப்பழை பொலிஸார் அந்த இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். பின்னர் இளைஞர்களை முத்துக்களுடன் கைது செய்தனர்.

குறித்த இளைஞர்கள் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் கந்தளாய்ப் பகுதியில் இருந்து முத்துக் களை வாங்கியதாகவும் ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்திருப்பதாக பொலிஸார் கூறினர். (த-86,14)

## தனியார் கல்வி நிலையங்கள் வகுப்புக்கள் நடத்தக் கட்டுப்பாடு


*கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச சபை பகுதிகளில்*

நெல்லியடி, டிசெ.25
கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் வெள்ளி, ஞாயிறு ஆகிய கிழமைகளில் மு.ப. 10 மணிக்கு முன்னரும் மாலை 6 மணிக்குப் பின்னரும் வகுப்புக்கள் நடத்தக் கூடாது என்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளதாக கரவெட்டி தெற்கு, மேற்குப் பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு அறிவித்துள்ளார்.

இந்தக் கட்டுப்பாடு தரம் ஒன்று முதல் தரம் 11 வரை நடைமுறைக்குக்கொண்டுவர வேண்டும் என்றும் மீறுவோருக்கு தனியார் கல்வி நிறுவனத்துக்குரிய உரிமம் வழங்கப்பட மாட்டாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-422)

## டெங்கால் உயிராபத்தை விளைவிக்கும் இடங்கள்

**அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டனர்**



டெங்கு நோய்த் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு இடம்

யாழ்ப்பாணம், டிசெ.25
டெங்கு நோய்த் தாக்கத்தால் உயிராபத்து ஏற்படக்கூடிய இடங்களை நல்லூர்ப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், நல்லூர்ப் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

கடந்த வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது ஆனந்த குமாரசுவாமி விடுதிக் கழிவு நீர்நிரப்பும் தொகுதி, கொக்குவில் சந்தி, கோண்டாவில் சந்தி வாய்க்கால்கள், யாழ்.மாநகரசபையின் கோண்டாவில் நீர் வழங்கல் பகுதிக்காணி, கோண்டாவில் காரைக்கால் மயானம் போன்ற பகுதிகள் டெங்கு நோய்த் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பகுதிகளாக இனம் காணப்பட்டுள்ளன.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாநகரசபை, நல்லூர்ப் பிரதேச சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதிஅபிவிருத்தித்திணைக்களம், யாழ்.பல் கலைக் கழகம் ஆகியவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக நல்லூர்ப்பிரதேசசெயலகம் தெரிவித்துள்ளது. (வ-7)

## நள்ளிரவில் நடமாடிய மூவருக்கு பிணை

தென்மராட்சி, டிசெ.25
மீசாலைப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நள்ளிரவு வேளையில் நடமாடிய கரவெட்டியைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து ஞாயிற்றுக்கிழமை இரவு குறித்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் மூன்று இளைஞர் களையும் கைது செய்து நேற்று நீதிமன்றில் முற்படுத் தினர்.

மூங்கில் மரம் வெட்டுவதற்காக வந்ததாக இளைஞர்களின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்றில் இளைஞர்களின் பெற்றோரும் சமுகமளித்ததால் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்லுமாறு உத்தரவிடப்பட்டது.

(ஜ-9)

## அச்சுவேலிப் பேட்டையில் துரிதகதியில் கட்டுமானம்

யாழ்ப்பாணம், டிசெ.25
அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் உட்கட்டுமான வேலைகள் துரிதமாக இடம் பெற்று வருகின்றன.

மொத்த நிலப்பரப்பில் 25 ஏக்கருக்கான கட்டுமானப் பணிகளுடன் மின்சாரம், குடிதண்ணீர், கழிவு வாய்க்கால் மற்றும் உள்ளக-வெளியக வீதி புனரமைப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அடுத்த வருடம் மே மாதமளவில் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் தொழில் முயற்சியாளர்கள் பணியில் ஈடுபடலாம் என்று தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை தொழில் முயற்சியாளர்களுக்கு காணித் துண்டங்களை வழங்குவதற்காக நேர்முகத்தேர்வில் தோற்றிய அனைவருக்கும் (காட்டுக் கந்தோர் கைத்தொழில் அபி. சபை) காணி உறுதிப்பத்திரம் வழங்க பாரம்பரிய சிறுகைத் தொழில் அமைச்சர் நடவடிக் கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (வ-41)

## நியமனங்கள் தொடர்பில் பிரச்சினைகளா? நேரடியாக என்னுடன் தொடர்பு கொள்க

*யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 25
பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால், யாழ். மாவட்ட பட்டதாரிப் பயிலுநர்களுக்கு வழங்கப்பட்ட நியமனங்களில் ஏதாவது பிரச்சினை இருப்பின் யாழ்.மாவட்டச் செயலகத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

பட்டதாரிப் பயிலுநர்கள் ஆயிரத்து 83 பேருக்கு கடந்த வாரம் யாழ்.மாவட்டத்தில் நிரந்தர நியமனங்கள் வழங்கப் பட்டன. பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சாலேயே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு வழங்கப்பட்ட நியமனங்களில் பல்வேறு பிழைகள் இருப்பதாக பட்டதாரிப் பயிலுநர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். குறிப்பாக மனித வலு அமைச்சில் நியமிக்கப் பட்டுள்ளீர்கள் என்று தமிழ் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அவ்வாறான தொரு அமைச்சே இல்லாத நிலையில், இல்லாத அமைச்சுக்கு நியமிக்கப்பட்டுள்ள தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சிங்கள மொழிக் கடிதத்தில் மனித வளத் திணைக் களம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான தவறுகள் இருப்பதால் பட்டதாரிப் பயிலுநர்கள்செய்வதறியாது உள்ளனர். இந்த விடயம் தொடர்பில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, அவ்வாறு பிரச்சினைகள் இருப்பவர்களை என்னிடம்வரச்சொல்லுங்கள். பட்டதாரிப் பயிலுநர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள நியமனத்தில் ஏதாவது பிரச்சினை இருந்தால் நேரடியாக இங்கு வந்து தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.

இதேவேளை பட்டதாரிப் பயிலுநர்கள் தமது நிரந்தர நியமனக் கடிதத்தை ஏன் கொழும்பிலுள்ள அமைச்சுக்கு சென்று பெற்று கொள்ளுமாறு கேட்கப்படுகின்றதே என்று கேட்ட போது, அவர்களது நன்மைக்காவே அவ்வாறு செய்யப்பட்டுள்ளதாக பதிலளித்தார். (வ-5)

> பட்டதாரிப் பயிலுநர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள நியமனத் தில் ஏதாவது பிரச்சினை இருந்தால் நேரடியாக இங்கு வந்து தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும்
>
> *மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம்*




கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச சபையால் நெல்லியடி சந்தியில் வைக்கப்பட்டுள்ள "இவ்விடத் தில் வாகனம் நிறுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது" என்ற அறிவுறுத்தல் வீதிப் பலகையை மறைக்கும் வகையில் நெல்லியடி தனியார் மினிபஸ்களின் நேரக்கணிப்பாளர் கடிகாரத்தை தொங்க விட்டிருப்பதைக் காணலாம். (ஒ-422)

# வெளியுறவுக் கொள்கையின் பலவீனமே எல்லை ஊடுருவல்களுக்குக் காரணம்

## கடுமையாகச் சாடுகின்றது பாரதிய ஜனதாக் கட்சி

புதுடில்லி, டிசெ.25

இந்திய எல்லையில் தொடரும் சீன இராணுவத்தின் ஊடுருவல்களுக்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் பலவீனமான வெளியுறவு கொள்கையே காரணம் என்று குற்றஞ்சாட்டியுள்ளது பாரதிய ஜனதா கட்சி.

காஷ்மீரின் லடாக் பிரதேசத்தில் 20க்கும் மேற்பட்ட சீன இராணுவத்தினர் கடந்த ஒரு வார காலமாக முகாம் அமைத்துத் தங்கியுள்ளனர் என்று வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அந்தக் கட்சி இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுகுறித்து அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள் பலவீனமாக இருப்பதே சீனா மற்றும் பாகிஸ்தான் இராணுவங்களின் அத்துமீறலுக்கு காரணம். இந்திய மத்திய அரசு இந்த அத்துமீறலுக்கு ஒருபோதும் கவலைப்பட்டதே இல்லை.

சில நாள்களுக்கு முன்னர் இந்திய எல்லைப் பகுதிகளில் சீன இராணுவம் அத்துமீறி இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 5 பேரைப் பிடித்து சென்றது. பின்னர் இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்து அவர்களை விடுவித்த சீனா தற்போது மீண்டும் லடாக் பகுதியில் அத்துமீறியுள்ளது. இவற்றுக்கெல்லாம் காரணம் இந்தியாவின் பலவீனமான வெளியுறவுக் கொள்கையே" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதேவேளை, லடாக் பகுதியில் ஊடுருவல் இடம்பெற்றுள்ளது என்ற தகவலை இந்திய பாதுகாப்பு அமைச்சகம் மறுத்துள்ளது. எனினும் அந்தப் பகுதியில் சுமார் 10 கூடாரங்கள் சீன நாட்டுக் கொடிகளுடன் காணப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.(ற)

# பொலிஸ் பாதுகாப்பை நிராகரித்தார் கெஜ்ரிவால்

புதுடெல்லி, டிசெ.25

புதுடில்லியின் முதலமைச்சராகப் பதவியேற்கவுள்ள ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் பொலிஸ் பாதுகாப்பை நிராகரித்துள்ளார்.

டில்லியில் காங்கிரஸ் ஆதரவுடன் ஆம் ஆத்மி கட்சி ஆட்சி அமைக்கவுள்ளது. முதலமைச்சராக அந்தக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் நாளை பதவி ஏற்றுக் கொள்கிறார்.

ராம் லீலா மைதானத்தில் மக்கள் முன்னிலையில் முதலமைச்சராக கெஜ்ரிவால் பதவியேற்றுக் கொள்வதையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து உயரதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், புதிய முதலமைச்சராகப் பதவியேற்க உள்ள கெஜ்ரிவால், பொலிஸ் பாதுகாப்பை நிராகரித்துள்ளார். அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள அவர் "எனக்கு எந்தவித பாதுகாப்பும் வேண்டாம். கடவுள்தான் தமக்கு மிகப்பெரிய பாதுகாப்பு" என்று தெரிவித்துள்ளார். (ற)

# வாக்களித்த மக்களுக்கு ஆத்மி செய்வது துரோகம்

## பா.ஜ.க. கூறுகின்றது

புதுடில்லி, டிசெ.25

ஆம் ஆத்மி கட்சி, காங்கிரஸ் ஆதரவுடன் புதுடில்லியில் ஆட்சியமைக்க முடிவு செய்திருப்பது வாக்களித்த மக்களுக்குச் செய்யும் துரோகமாகும் என்று தெரிவித்துள்ளது பாரதிய ஜனதாக் கட்சி.

இதுகுறித்து அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"ஆம் ஆத்மி கட்சி ஊழலை எதிர்ப்பதாக சபதம் செய்திருந்தது. காங்கிரஸ் கட்சி ஊழல்களில் ஈடுபடுவதாகக் கூறி அந்தக் கட்சிக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியது. ஆனால் தற்போது ஆட்சி அமைப்பதற்காக அந்தக் கட்சியுடனேயே சமரசம் செய்து கொண்டுள்ளது.

அந்தக் கட்சியின் கோஷத்தை நம்பி வாக்களித்த மக்களுக்கு துரோகம் செய்து விட்டது. காங்கிரஸ் கட்சிக்கு எதிராகத்தான் மக்கள் வாக்களித்தார்கள். ஆனால் தற்போது ஆம் ஆத்மி அந்தக் கட்சியையும் இணைத்துத்தான் ஆட்சியமைக்கின்றது. ஊழலில் திளைக்கும் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து, ஊழலை ஒழிப்பதற்குக் களமிறங்குகின்றது ஆம் ஆத்மி கட்சி. அதைச் சிறப்பாக மேற்கொள்ள எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# 14 ஆண்டுகளில் பின்னர் இந்தியா- பாக். சந்திப்பு

புதுடில்லி, டிசெ.25

14 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியா-பாக்கிஸ்தான் இராணுவ அதிகாரிகள் எல்லை தாண்டும் ஊடுரு வலை தடுப்பது குறித்து நேற்றுமுன்தினம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்பு குறித்து பாகிஸ்தானை சேர்ந்த ராணுவ உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில்,

"எல்லையில் பதற்றத்தை தணித்து சுமூகத் தீர்வு காணவே நாங்கள் விரும்புகிறோம். ஐ.நா.வின் இராணுவக் கண்காணிப்பாளர்களை எல்லைப் பகுதியில் நியமிக்கலாம் . இந்தப் பேச்சுகளில் நல்ல முடிவு ஒன்று ஏற்படும்" என்று தெரிவித்துள்ளார்.

1999ஆம் ஆண்டில் நடந்த கார்கில் போருக்குப் பின்னர் இருநாட்டு இராணுவ உயர் அதிகாரிகளும் சுமார் 14 ஆண்டுகளுக்கு பிறகு நேரடியாக சந்தித்துள்ளனர். (ற)

# எம்.ஜி.ஆருக்கு அஞ்சலி செலுத்தினார் ஜெயலலிதா

சென்னை, டிசெ.25

அ.தி.மு.க., நிறுவுநரும், முன்னாள் தமிழக முதலமைச்சருமான எம்.ஜி.ஆரின் நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

அதை முன்னிட்டு சென்னையில் மெரீனா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவிடத்திற்கு சென்ற தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார்.

அவருடன் அமைச்சர்கள், கட்சி பிரமுகர்கள் பலரும் அஞ்சலி செலுத்தினர். (ற)

# காங்கிரஸ் தலைவர்கள் மீது விரைவில் நடவடிக்கை

புதுடில்லி, டிசெ.25

புதுடில்லியில் காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் ஆட்சியமைத்தாலும் அந்தக் கட்சி யைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் ஊழல் செய்திருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது ஆம் ஆத்மி கட்சி.

இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஆம் ஆத்தி கட்சியின் மூத்த தலைவர் யோகேந்திர யாதவ்.

"காங்கிரஸ் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்த தயங்க மாட்டோம். அதற்காக ஆட்சி பறிபோனாலும் பரவாயில்லை. காங்கிரஸின் ஆதரவை மட்டுமே பெற்றிருக்கிறோம் இதனை கூட்டணி என கூறக் கூடாது" என்று தெரிவித்துள்ளார்.

காங்கிரஸின் ஆதரவு குறித்து பேசிய ஆம் ஆத்மி கட்சியின் மற்றொரு பிரமுகரான பிரசாந்த் பூஷண்,

"அரவிந்த் கெஜ்ரிவாலின் அரசு 5 ஆண்டுகள் நீடிக்கும் என்பதற்கு உறுதிகூற முடியாது" என்று தெரிவித்துள்ளார். (ற)


# மரண அறிவித்தல்

## திருமதி சிவலோஜினி சுரேஸ்குமார்



கலைவாணி வீதி, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுரேஸ்குமார் சிவலோஜினி நேற்று (24.12.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுரேஸ்குமாரின் (உரிமையாளர், செல்வா எலக்றிக்கல்ஸ், திருநெல்வேலி) பாசமிகு மனைவியும், பிரணவி (யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டை தரம் 3 மாணவி), மஹிஷா (யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை முன் பள்ளி மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆ.த. ஜெயராஜா (ஓய்வுபெற்ற அதிபர்)- பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், தயாபரன், வித்தியாவதி ஆகியோரின் அன்புச்சகோதரியும், செ.செல்வரத்தினம் (ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர்)- அன்னபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், கந்தசாமி -கனகேஸ்வரி, நாகேஸ்வரி-வைரமுத்து ஆகியோரின் பெறாமகளும், சாந்தகுமார், திவாகர், ஜெனிபஜீன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2013) புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பண்டத்தரிப்பு விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ.சுரேஸ்குமார் (கணவர்)
உரிமையாளர் -செல்வா எலக்றிக்கல்ஸ்,
திருநெல்வேலி, 077 711 3884.

கலைவாணி வீதி,
சித்தன்கேணி.

(42833)(3.0ம்)


# மக்களின் துணையோடு தேர்தலைச் சந்திப்போம்

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கூறுகின்றார்

சென்னை, டிசெ.25

மக்கள் துணையோடு காங்கிரஸ் கட்சி நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்கும் என்று தெரிவித்துள்ளார் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

2014ஆம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலை ஆண்டவன் துணையுடனும், மக்களின் துணையோடும் சந்திப்போம். கூட்டணியில் இருந்து யார் பிரிந்து சென்றாலும், வெறுத்துச் சென்றாலும் காங்கிரஸ் கட்சியை யாராலும் ஆட்டவோ, அசைத்து விடவோ முடியாது. கூட்டணி என்பது தேர்தல் நேரத்தில் அறிவிக்க கூடிய ஒன்று. இன்னமும் தேர்தலுக்கு 4 மாதங்கள் இருக்கின்றன. உரிய வேளையில் கூட்டணி குறித்து அறிவிப்போம்.



எந்த கட்சியும் இதுவரை கூட்டணி குறித்து அறிவிக்கவில்லை. மத்திய அமைச்சர் ஜெயந்தி நடராஜனை தொடர்ந்து, ஜெயராம் ரமேஷ் உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள், அமைச்சர் பதவிகளை விட்டு விலகி கட்சி பணிக்குசெல்லதிட்டமிட்டுள்ளனர்.

தமிழக மீனவர் பிரச்சினை தொடர்பாக இலங்கை, இந்தியா இரு நாடுகளும் பேச்சு நடத்தத் தயாராக இருக்கின்றன. இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் மற்றும் விசைப் படகுகளை மீட்க மத்திய, மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## சிரியாவில் கார்க்குண்டு தாக்குதல்: 8 பேர் சாவு




அலப்போ, டிசெ.25

சிரியாவின் ஹோம்ஸ் பகுதியில் நிகழ்த்தப்பட்ட கார் வெடிகுண்டு தாக்குதலில் 6 குழந்தைகள் உட்பட 8 பேர் உயிரிழந்துள்ளனர். பாடசாலை ஒன்றின் அருகே இந்தக் குண்டு வெடிப்பு நடத்துள்ளது என்றும், சம்பவத்தின் போது மாணவர்கள் வகுப்பறையில் இருந்தனர் என்றும் சிரியா நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிரியாவில் இயங்கிவரும் பிரிட்டனைச் சேர்ந்த மனித உரிமைகள் அமைப்பும் இந்தத் தாக்குதலை உறுதி செய்துள்ளது. இதேபோன்று கிளர்ச்சியாளர்கள் பிடியில் உள்ள பகுதிகளில் அரசுப் படைகள் தொடர்ந்தும் தாக்குதல் நடத்தி வருகின்றன. அலெப்போவில் ராணுவத்தினர் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் சிக்கி குழந்தைகள் உட்பட 42 பேர் உயிரிழந்தனர். (ற)

# எகிப்தில் குண்டு வெடிப்பு

## 14 பேர் சாவு; 120 பேர் காயம்




கெய்ரோ, டிசெ.25

எகிப்தின் டெல்டா பகுதியில் நடத்தப்பட்ட கார்க்குண்டு வெடிப்பில் 14 பேர் உயிரிழந்துள்ளனர். 120க்கும் அதிகமானவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. டெல்டா பகுதியில் உள்ள மன்சோராவில் நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல், அங்குள்ள பொலிஸ் தலைமையகத்தை இலக்கு வைத்தே நடத்தப்பட்டுள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த தாக்குதலில் உயிரிழந்தவர்களில் பொலிஸாரும், பொதுமக்களும் அடங்குகின்றனர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பொதுமக்கள் என்றும், அவர்களில் பலரின் நிலை மோசமாக உள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ற)

## ஏகே-47 இன் தந்தை காலமானார்



மொஸ்கோ, டிசெ.25

ஏ.கே.-47 என்ற தன்னியக்கத் துப்பாக்கியை வடிவமைத்த மிகைல் கலாஷ்னிகோவ் தனது 94 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

ரஷ்ய இராணுவத்தில் லெப்டினண்ட் ஜெனரலாகப் பதவி வகித்த மிகைல் கலாஷ்னிகோவ் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் 1946 ஆம் ஆண்டில் இருந்து 1948 ஆம் ஆண்டு வரை மிகக் கடுமையாக உழைத்து ஏ.கே.-47 துப்பாக்கியை வடிவமைத்தார். 1949ஆம் ஆண்டு இந்தத் துப்பாக்கி ரஷ்ய இராணுவத்தில் சேர்க்கப்பட்டது.

இந்தத் துப்பாக்கியே இன்று உலகளவில் அதிகம் பயன்படுத்தப்படும் துப்பாக்கியாக மாறியுள்ளது. ஆனால் அதைக் கண்டுபிடித்த கலாஷ்னிகோவ், "எனது கண்டுபிடிப்பை சமூக விரோத சக்திகள் தவறாக ப

கிறபோது, எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது" என்று தெரிவித்திருந்தார்.

இவர் ஏ.கே. 47 மட்டுமில்லாமல், ஏ.கே. 74 என்ற மற்றொரு ரகத் துப்பாக்கியையும் கண்டுபிடித்துள்ள துள்ளார்.

பல்வேறு விருதுகளைப் பெற்ற அவர் இரத்தக் கசிவு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார். இந்த நிலையில் மொஸ்கோ அருகே உள்ள அவரது சொந்த ஊரான இஸெவ் ஸ்க் என்னுமிடத்தில் நேற்றுமுன்தினம் காலமானார். (ற)

## நாகரிகமான உறவுகளை கியூபா எதிர்பார்க்கின்றது

*அமெரிக்காவுக்கு அழைப்பு விடுத்தார் அந்த நாட்டு ஜனாதிபதி ரவூல் கஸ்ட்ரோ*


ஹவானா, டிசெ.25

அமெரிக்காவுடன் நாகரிகமான நல்லுறவுகளை மேற்கொள்வதற்குத் நாம் விரும்புகின்றோம் என்று தெரிவித்துள்ளார் கியூப ஜனாதிபதி ரவூல் கஸ்ட்ரோ.

கியூபாவுடனான வேறுபாடுகளை அமெரிக்கா புரிந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ள ரவூல் கஸ்ட்ரோ, கியூபாவில் ஆட்சி மாற்றம் வேண்டும் என்ற நிலைப்பாட்டை அமெரிக்கா மாற்றிக் கொள்ள வேண்டும். அமெரிக்காவின் அரசியல், சமூக கட்டமைப்புகளில் மாற்றம் ஏற்பட வேண்டும் என கியூபா வலியுறுத்தவில்லை என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்

கியூபநாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கியூபா மற்றும் அமெரிக்கா இடையே கடந்த 55 ஆண்டுகளாகத் தூதரக மற்றும் வர்த்தக ரீதியான உறவுகள் இல்லாத நிலையில் காஸ்ட்ரோ இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார். முன்னதாக தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் அஞ்சலி நிகழ்வில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கியூப ஜனாதிபதி ரவூல் கஸ்ட்ரோவுடன் கைக்குலுக்கிய நிகழ்வு சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. (ற)



புற்றுநோயினால் இறந்து கொண்டிருக்கும் இளைஞர் ஒருவர் தன்னுடைய அன்பு நாய்க்கு பிரியாவிடை கொடுக்கும் புகைப்படமொன்று இணையத்தளங்களில் வெளியாகி அனைவரையும் நெகிழ வைத்துள்ளது. புற்றுநோயினால் இறந்து கொண்டு இருக்கும் 21 வயதான மைக் பெற்றோஸிநோ தான் சிறுவயது முதல் வளர்த்து வந்த அன்பான நாய்க்குட்டிக்கு இறுதி பிரியாவிடை கூறுவதற்கு மருத்துவர்களால் அண்மையில் அனுமதிக்கப்பட்டார். அமெரிக்கா மசாசூசெட்ஸ் பொது மருத்துவமனையில் நடந்த இச்சம்பவம் அங்கிருந்த அனைவரையும் நெகிழ வைப்பதாக இருந்தது.

## தேர்தல் சட்டங்களில் சீர்திருத்தம் தேவை

*தாய்லாந்துப் போராட்டக்காரர்கள் வலியுறுத்துகின்றனர்*

பாங்ஹொக், டிசெ.25

தாய்லாந்தில் அரசுக்கு எதிரான போராட்டம் தொடரும் நிலையில், தேர்தல் நடைமுறைகளில் சீர்திருத்தம் கொண்டு வர வேண்டும் என போராட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பொதுத் தேர்தலில் வேட்பாளர்கள் பங்கேற்பதைத் தடுக்கும் வகையில், வேட்பு மனுத் தாக்கல் செய்யும் கட்டடத்தை ஆயிரக்கணக்கான அரசு எதிர்ப்பாளர்கள் சுற்றி வளைத் துள்ளனர். தேர்தலுக்கு முன்னரே மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ள போராட்டக்காரர்கள், தேர்தல் திகதியைத் தள்ளி வைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளனர்.

முன்னதாக, தாய்லாந்தின் பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்தது. தாய்லாந்தில் பிரதமர் இங்லக் ஷினவாத்ராவைப் பதவி விலகக்கோரி ஒரு மாதத்துக்கு மேலாக போராட்டம் நடைபெற்று வருகிறமை குறிப்பிடத்தக்கது. (ற)

## கிளர்ச்சியாளரை ஒடுக்க தென்சூடானில் நடவடிக்கை

லண்டன், டிசெ.25

தெற்கு சூடானில் கிளர்ச்சியாளர்களை ஒடுக்க இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த நாட்டு ஜனாதிபதி சல்வா கிர் தெரிவித்துள்ளார்.


நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவி வரும் வன்முறையால் நாட்டில் பதற்றமான சூழல் நிலவுகிறது. கிளர்ச்சியாளர்கள் பிடியில் உள்ள போர் நகரில் வன்முறை காரணமாக அதிகமான மக்கள் ஐநா வளாகத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர். இந்தநிலையில் போர் நகரை மீட்டெடுக்கும் விதமாக இராணுவ நடவடிக்கைக்கு ஜனாதிபதி சல்வா கிர் உத்தரவிட்டுள்ளார்.

கிளர்ச்சியாளர்களை ஒடுக்கும் நடவடிக்கைக்கு இராணுவம் தயார் நிலையில் உள்ளதாகவும், அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் நாட்டில் இருந்து வெளியேறிய பின்னர் நடவடிக்கை தொடங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக தொடர்ந்து வரும் மோதல்கள் உள்நாட்டுப் போர் உருவாகும் சூழலை அதிகரித்திருப்பதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. இந்த நிலையில் பென்டிக் நகரையும் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி விட்டனர் என்று கூறப்படுகின்றது.

ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டார் என்று முன்னாள் துணை ஜனாதிபதி ரியாக் மாச்சர் மீது ஜனாதிபதி சல்வா கிர் குற்றம்சாட்டியதைத் தொடர்ந்தே தெற்கு சூடானில் வன்முறை வெடித்தது. (ற)

## பிலிப்பைன்ஸுக்கான உதவியை அதிகரிக்கக் கோருகிறார் மூன்



நியூயோர்க், டிசெ.25

ஹையான் புயலால் பாதிக்கப்பட்ட பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு அளிக்கப்பட்டு வரும் நிவாரண உதவிகளை மேலும் அதிகரிக்க வேண்டும் என ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் கேட்டுக் கொண்டுள்ளார்.

பிலிப்பைன்ஸில் புயலால் [illegible]க்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்ட பான் கீ மூன், ஐ.நா. மற்றும் அதன் உறுப்பு நாடுகள், பிலிப்பைன்ஸ் மீட்பு பணிகளுக்காக பல கோடி டொலர் மதிப்பில் ஓராண்டு திட்டம் ஒன்றை செயல்படுத்தியுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸில் கடந்த நவம்பர் மாதம் 8ஆம் திகதி தாக்கிய ஹையான் புயலில் 6 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். லட்சக்கணக்கானோர் உடைமைகளை இழந்துள்ளனர். (ற)

## மாணிக்கக் கல் குழியில் சிக்குண்ட இருவர் சாவு

கொழும்பு,டிசெ 25

இரத்தினபுரி அங்கம்மன பிரதேசத்தில் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுப்பட்டிருந்த இரண்டு பேர் மண்ணில் புதையுண்ட நிலையில் உயிரிழந்தனர்.

30 அடி ஆழமான நிலப்பகுதியில், ஆறுபேர் அகழ்வுப் பணியில் ஈடுப்பட்டிருந்த நிலையில், மண் சரிவு ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இந்த அனர்த்தம் இடம்பெற்ற நிலையில், நான்கு பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். மேலும் இருவரை மீட்கும் பணி தொடர்ந்தும் மேற்கொள்ளப் பட்டது.

எனினும், நேற்று அதிகாலை இவர்கள் இருவரும் சடலமாக மீட்கப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (த)

# ‘பட்ஜெட்’ விவாத நேரத்தில் அமெரிக்கா சென்றார் பஸில்

வரவு - செலவுத் திட்ட விவாதம் முடியும் வரையில் ஆளுங் கட்சியின் அமைச்சர்கள், உறுப்பினர்கள் வெளிநாடு செல்லக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ அமெரிக்கா சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 4 ஆம் திகதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீதான விவாதம் இடம்பெற்றதைத் தொடர்ந்து அவர் அமெரிக்கா சென்றுள்ளதாகவும், எதிர்வரும் 26 ஆம் திகதியே நாடு திரும்புவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 21 ஆம் திகதி நாடாளுமன்றில் வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் இவற்றையெல்லாம் புறந்தள்ளி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார்.

மேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளராக பஸில் ராஜபக்ஷ தனது மனைவியை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட போதும், அதற்கு ஜனாதிபதி சம்மதிக்காத நிலையிலேயே அவர் அமெரிக்காவுக்கு புறப்பட்டுச் சென்றதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது மகனை அடுத்த ஜனாதிபதியாக்குவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார். இதனால் பஸில் ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் சிகிச்சைக்காகவே பஸில் அமெரிக்கா சென்றதாக அவரது அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-5)

## போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய எம்.பிமார் யார்?

*மங்களவிடம் சோபித தேரர் கேள்வி*

கொழும்பு,டிசெ.25

போதைப் பொருள் மற்றும் கடத்தல்களுடன் தொடர்புடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரென்பதை மங்கள சமரவீர சபைக்குத் தெரியப் படுத்த வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளனர்.

போதைப் பொருள் பாவனை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவின் கருத்துக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது :- போதைப்பொருளுடன் தொடர்புடையவர்களும் கடத்தல்களுடன் சம்பந்தப்பட்டவர்களும் நாடாளு மன்ற உறுப்பினர்களாக உள்ளனர் எனக் கூறும் மங்கள சமரவீர, அது யாரென்பதையும் சபைக்குத் தெரியப் படுத்த வேண்டும்.

அவ்வாறு தெரியப்படுத்தத் தவறும் பட்சத்தில் மங்கள சமரவீரவை கைது செய்து விசாரணைக்கு உட் படுத்த வேண்டும் - என்றார். (த-10)

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.25

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள் ளன. பாடசாலை அதிபர்களால் அனுப்பி வைக்கப்பட்ட பெறு பேறுகள் வருமாறு:-

**விக்னேஸ்வரா கல்லூரி - கரவெட்டி**

**கணிதம்**

திருநாவுக்கரசு கஜகரன்-3ஏ, எழிலரசி கந்தசாமி-ஏ2பி, பிரமிளா திருச்செல்வராசா-3சி, செல்வமனோகரன் நிரூந்தன்-2சிஎஸ்.

**உயிரியல்**

அழகேஸ்வரன் ராஜ்கரன்-ஏ2பி, சத்தியா தேவராஜா-2பிசி, கௌதமி கதிர்வேலு-பி2சி, செல்வமனோகரன் திங்கரன்-3சி.

**வர்த்தகம்**

அன்ரனி இராசநாயகம் தேவகமால்-2ஏசி, தேன்மொழி கருணாகரன்-ஏ2சி.

**கலை**

சிந்துஜா தவராசா-ஏபிசி, லக்சிகா நற்குணம்-2பிசி, அருணிகா நல்லதம்பி-ஏ2பி, தேவிகா நல்லதம்பி-ஏபிசி, செல்வகுமார் விதுர்சன்- 2பிசி, செவ்வந்தி தர்மரட்ணம்-ஏ2பி.

**மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**

**உயிரியல்**

க.புஸ்பவேணி-பி2சி, அ.கீர்த்திகா-2சிஎஸ், ம.கார்த்தீபன்-2சிஎஸ்.

**கணிதம்**

பா.தர்சனா-சி2எஸ்.

**வர்த்தகம்**

அ.கிருபரூபன்-2பிசி, க.கலீபன்-ஏ2சி, இ.கஜீபன்-பி2சி.

**கலைபிரிவு**

பா.நிலானி-2ஏபி, த.கஜந்தினி-2ஏபி, யோ.கீர்த் திகன்-ஏ2பி, இ.தமிழினி- 2ஏசி, இ.சங்கீதா-ஏ2பி, பா.பிருந்தாயினி-ஏபிசி, இ.மாதங்கி-ஏபிசி, இ.பிந்துஜா-ஏபிசி, க.கபிலன்- 3பி, வ.சதுர்சன்-3பி, ப.விபுசா-ஏ2சி, த.பிரியங்கா-ஏ2சி, பே.நிசோதரன்-ஏ2சி, ச.சத்தியா-ஏ2சி.

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

**வர்த்தகப் பிரிவு**

வி.சர்மிளி-ஏ2பி, ச.சயோரன் -2பிசி, இ.தனுஜா-2பிஎஸ்.

**கலைப்பிரிவு**

ட.சுகன்யா-2ஏசி, ஞா.பிரசாந்தினி-ஏபிசி, ச.சுகன்யா- ஏ2சி, ந.தர்சிகா-ஏ2சி, ர.அஸ் வினி-3பி, ஜெ.ஜெயலதன்-2பிசி, அ.தினேஸ் குமார்- பி2சி, ர.திலக்ஸன்-பி2சி, கு.திலோஜன்-3சி, த.கஜேந்தஜனி-3சி, சு.பகிர்தினி-3சி, நி.சுக னியா-3சி, க.தர்மிகா-3சி

**யாழ்.கனகரத்தினம் ம.ம.வி**

**வர்த்தகப் பிரிவு**

சின்னத்துரை மதீசன்-2ஏபி, வீரகுமார் நிலக் ஷன்- ஏபிசி, கண்ணையா கலைச் செல்வன்- 2பிசி.

**கலைப்பிரிவு**

தர்சினி விக்கினேஸ்வரன்-ஏபிசி, துவா ரகா இராசநாதன்- ஏ2சி, வஸ்மியா இர விச்சந்திரன்-ஏ2சி. (ந)

## டெங்கு நோய்த் தாக்கம் இலங்கையில் தீவிரம்

*ரிட்ஜ்வே வைத்தியர் தகவல்*

கொழும்பு,டிசெ.25

டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரது உடலில் ஏற்படும் இரத்தக் கசிவுத் தன்மை கடந்த ஆண்டை விட இந்த வருடத்தில் அதிகரித்திருப்பதாக ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளரான வைத்தியர் ரத்னசிறி ஏ.ஹேவகே தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக டெங்கு இரத்தக் கசிவு நோய்க்கு உள்ளாகியுள்ள நோயாளர்களைக் காப்பாற்றுவதற்கு வைத்தியர்கள் கடுமையான முயற்சி எடுக்க வேண்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில் டெங்கு இரத்தக் கசிவு வைரஸானது தெளிவாக வெளித்தெரியும் தீவிரத்தைக் காட்டியுள்ளதாகவும் இதனால் அந்த வைரஸில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் 3,722 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதோடு இந்த ஆண்டின் கடந்த 15 ஆம் திகதி வரையான காலத்தில் 3,328 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

அதேபோன்று கடந்த ஆண்டில் டெங்கு இரத்தக் கசிவு நோயால் 490 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டில் 470 பேர் இரத்தக் கசிவுக்காகச் சிகிச்சை பெற்றுள்ளனர். (ஐ-22)



# கண்ணகிநகர் கொலைச் சந்தேக நபருக்கு விளக்கமறியல்

*சிவில் உடையில் வருவோர் மிரட்டுவதாக கொலையுண்டவரின் உறவினர்கள் தெரிவிப்பு*

கிளிநொச்சி, டிசெ.25

கிளிநொச்சி கண்ணகி நகர்ப் பகுதியில் தொழிலாளி ஒருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் ஆறாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி கண்ணகி நகர்ப் பகுதியில் உள்ள மரக்காலை ஒன்றில் கடமையாற்றி வந்த ஒருவர் கடந்த 7 ஆம் திகதி இரவு அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

பிரமந்தனாறு 16 ஆம் வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த சந்திரன் சின்னச்சாமி (வயது-50) என்பவரே கொலை செய்யப்பட்டவராவார். இவரது கொலையுடன் தொடர்புடையதாகச் சந்தேகத்தின் பேரில் கிளிநொச்சிப் பொலிஸார் ஐந்து பேரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டனர். இவர்களில் ஒருவரைக் கடந்த 9 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். இதனையடுத்து குறித்த சந்தேக நபரை நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் குறித்த சந்தேக நபர் மீண்டும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் முன்னிலைப் படுத்தப்பட்டார். கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட தடி உள்ளிட்ட நான்கு சான்றுப் பொருள்களும் மன்றில் ஒப்படைக்கப்பட்டன. இதையடுத்து சந்தேக நபரை எதிர்வரும் ஆறாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஏற்கெனவே கைது செய்யப்பட்டவர்களிலும் தமக்குச் சந்தேகம் இருப்பதாகவும், சிவில் உடையில் வரும் சிலர் தம்மை அச்சுறுத்தி வருவதாகவும், சிங்கள மொழியில் தொலைபேசியில் அச்சுறுத்தி கப்பம் கோரி மிரட்டுவதாகவும் கொலையுண்டவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

## கவிஞர்களுக்கு விருதுகள்

தேசிய ஒற்றுமைக்கான கவிஞர்களின் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 24 ஆவது விருது வழங்கும் நிகழ்வில் வன்னியைச் சேர்ந்த இரு இளம் கவிஞர்களின் நூல்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய ஒற்றுமைக்காக இலங்கைக் கவிஞர்களின் சம்மேளனத்தின் 24 ஆவது விருது வழங்கும் நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி கொழும்பு-07இல் அமைந்துள்ள மகாவலி கேந்திர நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கடந்த காலப் பதிவுகளை வெளிப்படுத்தும் வகையில் வெளியிடப்பட்ட இரு கவிதை நூல்களுக்கான விருதுகள் இங்கு வழங்கப்பட்டுள்ளன.


வன்னியூர் சு.செந்தூரன் எழுதிய "நில வைத் தேடும் வானம்" என்ற நூலுக்கும், யோ.புரட்சி எழுதிய "இடம் பெயர்ந்த ஊரில் இடம் பெயராத நாய்" என்ற நூலுக்கும் இந்த விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.

சம்மேளனத்தினால் வருடாந்தம் வழங்கப்பட்டுவரும் 'காவிய பிரதீப' விருதே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது. (க-6)




## முல்லைத்தீவு கடைகளில் மருந்தடிக்கப்பட்ட பழங்கள்

*மக்களுக்கு பெரும் பாதிப்பு*



முல்லைத்தீவு, டிசெ.25

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரசாயன மருந்து தெளிக்கப்பட்டு பழுக்க வைக்கப்பட்ட மாம்பழம், வாழைப்பழம் என்பன விற்பனை செய்யப்படுவதால் தாம் பல்வேறு நோய்ப் பாதிப்புக்கு உள்ளாவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

தற்போது வன்னிப் பகுதியில் மாங்காய்கள் வர்த்தகர்களால் கொள்வனவு செய்யப்பட்டு மூன்று நாள்களில் பழமாக விற்பனைக்கு வருகின்றன. மாங்காய்கள் இரசாயன மருந்து தெளிக்கப்பட்டு பழமாக மாற்றப்படுகின்றன.

இதேநிலைதான் வாழைப் பழங்களுக்கும் ஏற்படுகின்றது. தற்போது விஞ்ஞானம் வளர்ச்சி பெற்று புதிய கண்டுபிடிப்புக்கள் உருவாக்கப்படுவதால் மக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர். இரசாயன உரங்களால் பழுக்க வைக்கும் மருந்துகளால் நோய்கள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

# மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் வெடிபொருள்

*அச்சத்தில் உறைந்துள்ள மக்கள்*

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் உள்ள சிவநகர், கோம்பாவில் பகுதிகளில் வெடி பொருள்கள் காணப்படுவதால் இந்தப்பகுதி மக்கள் அச்சத்துடன் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

இறுதிப் போர் நடைபெற்ற பகுதிகளான புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள மேற்படி இடங்களில் குடியமர்ந்த மக்கள் தமது காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் பொருட்டு துப்புரவுப் பணிகளில் ஈடுபடும் போது மிக ஆபத்தான நிலையில் வெடி பொருள்கள் காணப்படுகின்றன.

> "–" சிவநகர்ப் பகுதியில் காணி யைத் துப்புரவு செய்தபோது அங்கு வெடிகுண்டு ஒன்று காணப்பட்டது. தற்போது பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியவில்லை.

சிவநகர்ப் பகுதியில் ஒருவர் காணியைத் துப்புரவு செய்த போது அங்கு வெடிகுண்டு ஒன்று காணப்பட்டது. இதனால் காணியைத் துப்புரவு செய்வதை அவர் நிறுத்தியுள்ளார். தற் போது பயிர்ச் செய்கையை மேற் கொள்ள முடியாத நிலைக்கு அவர் தள்ளப்பட்டுள்ளதுடன் அச்சத்துடனும் காணப்படுகின்றார்.

இதேபோன்று புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் உள்ள காணி ஒன்றைத் துப்புரவு செய்யும் போது வெடிக்கும் நிலையில் அதிசக்தி வாய்ந்த இரு எறிகணைகள் காணப்பட்டதால் அப்பகுதி மக்கள் மத்தியில் அச்சநிலை காணப்படுகின்றது.

இவ்வாறு மக்கள் மீள்குடியமர்ந்த பகுதிகளில் மிக ஆபத்தான நிலையில் வெடிபொருள்கள் காணப்படுவதால் இந்தப் பகுதி மக்கள் தாம் உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாழ வேண்டிய நிலையில் உள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (க-6)

# பஸ் தரிப்பிடம் அமைக்கப்படாததால் அவலங்களுக்கு உள்ளாகும் பயணிகள்

மாங்குளம், டிசெ.25

மாங்குளத்தில் இதுவரை பஸ் தரிப்பிடம் அமைக்கப்படாததால் பயணிகள் மர நிழலின் கீழ் ஒதுங்கி நிற்பதைக் காண முடிகின்றது.

மாங்குளத்தின் கிழக்குப் பக்கத்தில் முல்லைத்தீவு செல்லும் வீதி அமைந்துள்ளது. மேற்குப் பக்கமாக துணுக்காய் வெள்ளாங்குளம் வீதி காணப்படுகின்றது. இங்கு பல்வேறு அபிவிருத்திகள் இடம்பெறுகின்ற போதிலும்பஸ்தரிப்பிடம் அமைக்கப்படவில்லை. இதனால் பயணிகள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

மேலும் இங்கு மலசல கூட வசதிகள் இல்லாததால் இயற்கை உபாதைகளைக் கழிக்க பயணிகள் மரங்களின் மறைவையும் உடைந்த கட்டடங்களையும் நாடுகின்றனர். தற்போது பருவ மழை ஆரம்பித்துள்ளதால் பயணிகளின் நிலை பரிதாபகரமாக மாறியுள்ளது. முல்லைத்தீவு செல்லும் வீதியில் ஒலுமடு, கரிப்பட்ட முறிப்பு, ஒட்டுசுட்டான், முள்ளியவளை ஆகிய இடங்களில் பஸ் தரிப்பிடங்கள் அமைக்கப்படவில்லை. இதனைப் போன்று துணுக்காய் செல்லும் வீதியிலும் பஸ்தரிப்பிடங்கள் அமைக்கப்படவில்லை. எனவே மாங்குளம் உட்பட முக்கியமான அனைத்து இடங்களிலும்பஸ்தரிப்பிடங்களை அமைக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-415)

> "–" பல்வேறு அபிவிருத்திகள் இடம்பெறுகின்ற போதிலும் பஸ்தரிப்பிடம் அமைக்கப்படவில்லை.



# வர்த்தக நிலையத்தை உடைத்துத் திருட்டு

*மாற்றுத் திறனாளிக்குச் சொந்தமானது*

புதுக்குடியிருப்பு, டிசெ.25

புதுக்குடியிருப்பில் மாற்றுத் திறனாளி ஒருவரால் நடத்தப்படும் வர்த்தக நிலையத்தில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு கைவேலி கணேசா வித்தியாலயத்துக்கு அருகில் ஒரு காலை இழந்த மாற்றுத் திறனாளி ஒருவர் நடத்தி வரும் வர்த்தக நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை கதவு உடைக்கப்பட்டு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னரும் இரு தடவைகள் இதே வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டிருந்தன.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஒரு காலை இழந்த மாற்றுத் திறனாளியான ஜே.அல்லிராசா என்பவரின் கடையிலேயே திருடர்கள் இவ்வாறு தொடர்ச்சியாகத் தங்களின் கைவரிசையைக் காட்டி வருகின்றனர். (க-6)

## வெள்ளம் தேங்கி நிற்பதால் புதையும் வாகனங்கள்



துணுக்காய், டிசெ.25

துணுக்காய் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கொல்களத்துக்கு செல்லும் பிரதான வீதியில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் கழிவுகளை ஏற்றிச் செல்லும் உழவு இயந்திரங்கள் புதையுண்டு வருகின்றன.

மல்லாவி நகரப் பகுதியில் காணப்படும் கழிவுகளை பிரதேச சபையினர் தினமும் அகற்றி வருகின்றனர். கொல்களம் அமைந்த பகுதியூடாக தினமும் கழிவுகள் எடுத்துச் செல்லப்படுகின்றன. வாகனங்கள் செல்லும் இந்த வீதியில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் அவை அடிக்கடி புதையுண்டு நிற்பதைக் காண முடிகின்றது. (க-415)

## ஏழ்மை கல்விக்குத் தடையல்ல

முல்லைத்தீவு, டிசெ.25

குடும்ப வறுமை, வசதியீனங்கள் ஆகியவற்றுக்கு மத்தியிலும் அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் பிரகாரம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 6 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார் மாணவியொருவர்.

முல்லைத்தீவு மாவட்டம் கனகரத்தினபுரம் கிராமத்தைச் சேர்ந்த முத்துஐயன்கட்டு வலதுகரை மகாவித்தியாலய மாணவியான இராசசேகரம் தர்மிதா என்ற மாணவியே இவ்வாறு சாதித்துக் காட்டியுள்ளார். (க-500)



## கசிப்பு விற்பனைக்குத் தண்டம்

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பகுதியில் கசிப்பையும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா, உபகரணங்கள் ஆகியவற்றையும் தம்முடன் வைத்திருந்த ஐந்து பேருக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், கெருடமடு உள்ளிட்ட பகுதிகளில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இந்த நிலையில் குறித்த பகுதிகளில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது இந்த ஐந்து பேரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் கடந்த 17ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் ஐவருக்கும் மொத் தமாக 2 லட்சத்து 50 ஆயி ரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (க-6)



அட்டாளைச்சேனை பிரதேச சபையின் புதிய கட்டடம் 4 கோடி 50 லட்சம் ரூபா நிதியில் பாவங்காய் வீதியில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.எம்.நஸீர், அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்ஸில், உதவித் தவிசாளர் ஏ.எல்.அமானுல்லா, அட்டா ளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.எஸ்.எம்.உவைஸ் அக்க ரைப்பற்று கல்முனை சாரணிய மாவட்ட உதவி ஆணையாளர் எஸ்.எல்.முனாஸ் உள்ளிட்டோர் நேற்றுமுன்தினம் கட்டடப் பணிகளை பார்வையிட்டனர்.

## ஓடத் துறையைக் கடக்க நீண்ட நேரம் காத்திருப்பு

மட்டக்களப்பு, டிசெ.25

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைக்கும் எழுவான்கரைக்குமான பிரதான போக்குவரத்து மார்க்கங்களில் ஒன்றாகக் காணப்படும் மண்டூர் - குருமண்வெளி ஓடத்துறையைக் கடப்பதற்கு இயந்திரப் படகையே மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இங்கு ஓர் இயந்திரப்படகு மாத்திரம் சேவையில் ஈடுபடுவதால் அரச மற்றும் அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், விவசாயிகள் எனப் பலரும் நீண்ட நேரம் காத்திருந்து இந்தப் பாதையில் பயணிக்க வேண்டியுள்ளது.

இதனிடையே மண்டூர் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் ஊடாக மட்டக்களப்பு மாவட்ட ஜனாதிபதி இணைப்பாளரிடம் மண்டூர் - குருமண்வெளி ஓடத்து றைக்கு பாலம் அமைத்துத் தருமாறு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட் டுள்ளது.

மண்டூர் - குருமண்வெளி ஓடத்துறையூடாப் பயணம் செய்யும்மக்கள் இன்னல்களை எதிர்நோக்குவதாகவும் இதனால் மக்கள் தமது பிரயாணத்தை குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே மேற் கொள்ளக் கூடியதாக இருப் பதாகவும் இந்த ஓடத்துறை ஊடாக இரவு நேரங்களில் பயணம் செய்ய முடியாதுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (வ-315)

# கல்முனை 'பட்ஜெட்' ஒத்திவைப்பு; சபை உறுப்பினர்கள் கொந்தளிப்பு

### *நிலைமையைக் கட்டுப்படுத்தியது பொலிஸ்*

கல்முனை, டிசெ.25

கல்முனை மாநகர சபையின் முதல்வர் நிசாம் காரியப்பரால் 2014ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டம் நேற்று முன் தினம் சமர்ப்பிக் கப்படவிருந்தது. எனினும் திடீ ரென சபை அமர்வு ஒத்தி வைக்கப் பட்டதை ஆட்சேபித்து ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் 10 பேர் சேர்ந்து எதிர்ப்பு நடவடிக்கை யில் ஈடுபட்டனர்.



மேற்படி சபை அமர்வு திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில் திடீரென கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பிற்பகல் 2.25 மணிக்கு டுவிட்டர் குறுந்தகவல் மூலம் அறிவிக்கப்பட்டது.

இதனை ஆட்சேபித்த உறுப்பினர்கள் இது எவ்வகையில் ஜனநாயகமாகும் என கேள்வி எழுப்பி வரவு- செலவுத்திட்ட முன்மொழிவின் பிரதிகளைக் கிழித்தெறிந்தனர்.

வரவு- செலவுத்திட்டம் தோற்கடிக்கப்படலாம் எனக் கருதியே சபை அமர்வை பிற்போட்டுள்ளார்கள், வரவு -செலவுத்திட்டத்தை ஆதரிப்பதும் எதிர்ப்பதும் உறுப்பினர்களின் உரிமையாகும். வரவு- செலவுத்திட்டம் மக்களுக்கு நன்மை பயக்குமாயின் நாம் ஆதரிப்போம் எனக் கோஷமிட்டனர்.

அதேவேளை பிற்பகல் 3 மணியளவில் அங்கு வருகை தந்த முதல்வர் நிசாம் காரியப்பர் நேற்று முன்தினம் தொடக்கம் அமர்வு ஏழு நாள்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவித்து அனைவரும் கலைந்து செல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

இதன்போது முதல்வர் நிசாம் காரியப்பரின் ஆதரவாளர்கள் சிலரும் மாநகர சபை உறுப்பினர்கள் சிலரும் இணைந்து ஆட்சே பித்த உறுப்பினர்களை தூசித்ததோடு பிரதேச வாத ஆயு தத்தை கையில் எடுத்தனர். அவர்களின் வார்த்தைகள் நெறிதவறின.

இதனால் நிலைமை மோசமடைந்து கலவரம் ஏற்படும் நிலை ஏற்பட்டது இதனைத் தொடர்ந்து பொலிஸார் விரைந்து வந்து மக்களைக் கலைத்து சுமுக நிலையை ஏற்படுத்தினர். (வ)

## மட்டக்களப்பில் ஆணின் சடலம் மீட்பு

ஏறாவூர், டிசெ.25

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள புலியவெளி என்ற பகுதிக் காட்டுக் குள்ளிருந்து நேற்று முன்தினம் மாலை ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கிராமத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சுயந்தன் (வயது 23) என்பவரின் சடலமே அது என்று உறவினர்களால் அடை யாளம் காட்டப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.எம். றியாஸ் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டதுடன் சாட்சியங்களைப் பதிவு செய்து பிரேத பரிசோதனை நடத்து மாறு பொலிஸாருக்கு உத்தர விட்டார்.

சடலம் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு பிரேதபரிசோதனைக்காக எடுத்து வரப்பட்டுள்ளது. (வ-187)

**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

வவுனியாக்கிளை. 0242226747, 0243243265

**பட்டப்படிப்பு (இளமாணி) கற்கைநெறிகள்**

(உயர்தரத்தில் மூன்று பாடங்களிலும் சித்தி (3S) பெற்றவர்கள் இலகுவாக பட்டதாரி ஆகலாம்)

**B.A-** வரலாறு, அரசியல், சமூகவிஞ்ஞானம், பொருளியல், தமிழ் இலக்கியம், பொதுநிர்வாகம், English Literature , Social Work, JMC ,B.Lit (Tamil)

**B.SC-** Maths,Computer Science, Visual Communication, Hotel Management and Catering mgt, Psychology

**B.Com** -Computer Application, Information Technology

**B.B.A, B.C.A**

மேற்படி பாடங்களில் ஒன்றை சிறப்புப் பாடமாக கற்க முடியும். 2014 ஆம் ஆண்டுக்கான பதிவுகள் இப்போது இடம் பெறுகின்றன.

**Note:** தற்போது உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ள எல்லா மாவட்ட மாணவர்களுக்கும் பட்டப்படிப்புக்கள் பற்றிய ஆலோசனை வழிகாட்டல்கள் இலவசமாக வழங்கப்படும்

**பட்டப்பின் படிப்பு (முதுமாணி)**

**M.A** - தமிழ்,ஆங்கிலம்,வரலாறு,சமூகவியல், அரசியல்,பொருளியல், பொதுநிர்வாகம்,காந்தியம், சமய தத்துவங்கள், Criminology &Police Administration, Labor Management, English &Linguistics, Tourism Management (English) ,Tourism Management (French),Human Rights,Women's Studies,Social Work,Advertisement & Pub. Relation Journalism & Mass Communication

**M.Sc** - Mathematics, Chemistry, Physics, Computer Science, Psychology , Hotel Management, Tourism & Hospitality Management Electronics & Communication

**M. Com** - General, Marketing, Finance,Computer Application, Banking, Co-Operati

**M.B.A ,MCA**

**ENGLISH ACADEMY**

No:5,Station Rd,karapankadu,Vavuniya. 0242226747, 0243243265

வெளிநாடு செல்வோருக்கான மொழிப்பயிற்சி வகுப்புகள் குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில் பயின்று பரீட்சையில் உயர் சித்தி பெற உத்தரவாதம் அளிக்கிறோம்

- IELTS
- A1, B1
- Spoken English
- French
- Deutsch

B.Murali.MSc (U.K)

உயர்கல்வி தொடர்வோர், வேலை செய்வோர், பரீட்சை எழுதிய மணவர்களுக்கான மொழி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

+ Sinhala Class + Spoken English

(43562)(2.8.3)




**சட்டமாணிக் கருத்தரங்கு-2013/2014**

**இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமாணி (LL.B)**

**அனுமதிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு**

8 ஆவது வருடத்தில்

**எதிர்பார்ப்பு வினாக்களும் விடைகளும்**

விரிவுரைகள்: சட்டத்தரணி எம்.ஐ. உவைசுர் ரஹ்மான் (LL.B)

காலம் :டிசெம்பர் 28,29,2013
நேரம் :காலை 8.30-4.30
இடம் :யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி-குமாரசுவாமி மண்டபம்
கட்டணம் :தினம் ஒன்றுக்கு 600/=
பதிவுகள் :மண்டப வாயிலில்

(42760)(4.8.3)

தொடர்பு: 077 935 1923, 077 776 1477

# ஜனாதிபதியின் நல்லிணக்க அழைப்பு தேர்தல் குண்டா? ஜெனிவா பொறியா?

*சந்தேகம் எழுப்புகிறார் ஊவா மாகாண சபை உறுப்பினர் வேலாயுதம்*



கொழும்பு.டிசெ.25

"நல்லிணக்கப் பேச்சுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள அழைப்பானது ஜெனிவாக் கூட்டத்தொடரில் ஏற்படும் சர்வதேச நெருக்கடிகளை சமாளிப்பதற்கான ஒரு வியூகமா? அல்லது மாகாணசபைத் தேர்தலைக் குறி வைத்து வீசப்பட்டுள்ள தேர்தல் குண்டா? "

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் .தவிசாளரும் ஊவா மாகாண சபை உறுப்பினருமான கே.வேலாயுதம்.

13 ஆவதுச் திருத்தம் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை போன்றவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்தத் தயங்கும் இந்த அரசின் நல்லிணக்க அழைப்பை எவ்வாறு நம்புவது என்ற சந்தேகமும் தமிழர் மத்தியில் எழுந் துள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்திக்கு உள்நாட்டுக்குள்ளேயே தீர்வொன்றைக் காண்பதற்கு அரசுடன் கை கோர்க்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள அழைப்புத்தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ஐ.தே.கவின் பிரதித் தவிசாளர் வேலாயுதம் மேற் கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிதியமைச்சுக்கான குழுநிலை விவாதத்தில் நிதியமைச்சர் என்ற வகையில் பதிலளித்து உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நல்லிணக்கத்துக்காக ஐக்கிய இலங்கைக்குள் தீர்வொன்றைக் காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விடுத்துள்ள அழைப்பை நான் வரவேற்கின்றேன். ஆனால், அத்தகைய பேச்சுகள் நேர்மையாகவும் நீதியாகவும் தமிழர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். மாறாக காலத்தைக் கடத்தும் தொடர் நாடகமாக அது இருக்கக் கூடாது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதற்கு கடந்த காலங்களில் பல்வேறு மட்டங்களில் பேச்சுகள் இடம் பெற்றிருந்தாலும் தமிழர்களின் பிரச்சினைக்கு விடிவு ஏற்படாத நிலையே இன்றும் காணப்படுகின்றது. அதுமட்டுமல்ல தமிழர்களை ஒடுக்கும் செயல்களும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. குறிப்பாக போருக்குப் பிறகு இந்த நிலை மிகவும் மோசடைந்துள் ளது. தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படக்கூடாது என்று கூடக் கட்டளை பிறப்பிக்கப்படுகின்றது. மதஸ்தலங்கள் தாக்கப் படுகின்றன. இவ்வாறான செயல்கள் இடம்பெறும்போது நாம் எப்படி நல்லிணக்கத்தைப் பற்றி பேசுவது?

தமிழர்களுக்கு அரசியல் அதிகாரங்களை வழங்குமாறும் 13 ஆம் திருத்தம் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறும் இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், கனடா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் இலங்கையைத் தொடர்ச்சியாக வலியுறுத்தின. அப்போதெல்லாம் இனவாதிகளை தூண்டிவிட்டு சர்வதேசத்தை வசைபாடிய இந்த அரசுக்கு தற்போது திடீர் ஞானம் பிறந்திருப்பது புரியாத புதிராகவே இருக்கின்றது.

எனவே, தமிழர் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதிக்கு திடீரென ஏற்பட்டுள்ள இந்த ஞானமானது மார்ச்சில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலுக்கான குண்டா? அல்லது ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அனைத்துலக சமூக நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கான பொறியா? என்று சந்தேகம் எழுகின்றது. அரசின் கடந்த கால அராஜக செயற்பாடுகளே எமக்கு இந்தச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன- என்றார். (ஒ-சி)

## விறகு சேகரிக்க சென்ற இளைஞன் உயிரிழப்பு

கொழும்பு.டிசெ.25

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ மேல்பிரிவு தோட்டத்தில் விறகு சேகரிக்கச் சென்ற இளைஞன் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று காலை 9.30 மணி அளவில் இடம் பெற்றுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ தேயிலைத் தொழிற்சாலையில் பணிபுரியும் 25 வயதான இவர், இரவு வேலையை முடித்து கொண்டு நேற்றுக் காலை விறகு சேகரிக்க சென்ற போதே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த இளைஞனின் நெற்றிப் பகுதியில் இடது புறத்தில் காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பொகவந்தலாவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## ஊடகங்களால் என்னை கொலை செய்ய முடியாது

*லக்ஸ்மன் ஹூலுகல்ல தெரிவிப்பு*

கொழும்பு.டிசெ.25


நஞ்சருந்தி தற்கொலை செய்து கொள்ள முயன்றதாக ஊடகங்களில் வெளியான செய்தியை தேசிய பாதுகாப்பு ஊடக நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹூலுகல்ல, நிராகரித்துள்ளார்.

நஞ்சருந்தி தற்கொலைக்கு முயன்ற நிலையில் லக்ஸ்மன் ஹூலுகல்ல கொழும்பில் லங்கா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் ஊடகங்கள் பலவற்றில் செய்திகள் வெளியாகின.

எனினும், தாம் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை என்றும், நலமுடன் வீட்டில் இருப்பதாகவும் அவர், கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் நேற்றுமுன்தினம் இரவு தெரிவித்துள்ளார்.


"ஊடகங்களால் என்னைக் கொல்ல முடியாது. நான் ஊடகங்களுக்கு மேலாக இருக்கிறேன். இதுவும் கூட ஊடகங்களின் இன்னொருசாகசம். நான் நஞ்சருந்தியிருந்தால் இந்த நேரம் இறந்திருப்பேன்" என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

நேற்றுமுன்தினம் எந்த வொரு தேவைக்காகவும் எந்த மருத்துவமனைக்காவது சென்றீர்களா என்று அவரிடம் கேள்வி எழுப்பிய போது, தனது பயணம் குறித்து ஊடகங்களிடம் தெரிவிக்க வேண்டியதில்லை என்று பதிலளித் துள்ளார். மருத்துவமனைக்கு சென்றேனா அல்லது வேறெங்காவது சென்றேனா என்றெல் லாம் ஊடகங்களிடம் கூறிக் கொண்டிருக்க வேண்டியதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.



ஜி.சீ.ஈ உயர்தர பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அலரி மாளிகையில் வைத்து தலா ஒரு இலட்சம் ரூபா காசோலையையும், பரிசில்களையும் வழங்கியுள்ளார்.

## எட்டியாந்தோட்டை நகர கடைத்தொகுதியில் தீ



கொழும்பு.டிசெ.25

எட்டியாந்தோட்டை நகரில் பஸ் நிலையத்துக்கு பின்னால் உள்ள கடைத் தொகுதியில் நேற்று ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் பல கடைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

கடைகளிலுள்ள அனைத்துப் பொருள்களும் தீயில் கருகியுள்ளன. தீயணைப்புப் படையினரால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள போதும் எட்டியாந்தோட்டையில் பதற்றநிலை தொடர்கின்றது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனினும், சேதவிவரம் இதுவரை வெளியிடப்படவில்லை.

## ஜனாதிபதியின் உதவியுடன் யானைக்குட்டி பெற்றுத்தருவதாகக் கூறி பண மோசடி

கொழும்பு.டிசெ 25

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உதவியோடு மியன்மார் நாட்டில் இருந்து குட்டி யானை ஒன்றைக் கொண்டு வந்து தருவதாக தெரிவித்து பணம் மோசடி செய்த ஒருவரை பொலிஸார்கைது செய்துள்ளனர்.

கொழும்பின் புறநகர் பகுதியான தலவத்துகொட பிரதேசத்தில் வசித்து வரும் மஹிந்த கலப்பத்தி என்பவரே இந்த சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் கைது செய்யப் பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் உதவியுடன் மியன்மார் நாட்டில் இருந்து குட்டி யானையை கொண்டு வந்து தருவதாக கூறி, இந்த நபர் மினுவங்கொட பிரதேசத்தை சேர்ந்த ஒருவரிடம் 33 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார் என விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இவரிடம் விசாரணைகளை நடத்திய விசேட பொலிஸ் விசாரணை பிரிவினர், இவர் யானைக் குட்டிகளை தருவதாக கூறி பணத்தை பெற்று மோசடி செய்யும் நபர் எனக் கண்டறிந்துள்ளனர். இப்படியான மோசடியாளர்களிடம் சிக்க வேண்டாம் என பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வீதியில் தபால் பொதிகள்; விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு.டிசெ 25

வீதியில் கிடந்த தபால் பொதி கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மத்திய தபால் பரிமாற்ற நிலையத்திலிருந்து விநியோ கத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட மூன்று தபால் பொதிகள் இடைநடுவே வீதி யில் வீழ்ந்து கிடந்தமை தொடர்பிலேயே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தபால் மாஅதிபர் ரோஹன அபயதீர குறிப்பிட்டார்.

ஹங்வெல்ல பகுதியில் வீழ்ந்து கிடந்த மூன்று தபால் பொதிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் நேற்று அதிகாலை தபால் பொதிகளை விநியோகிப்பதற்கு சென்ற வானிலிருந்து அந்தத் தபால் பொதிகள் வீழ்ந்திருக்கலாம் எனப் பொலிஸார் கூறினர்.

## தேர்தல் ஆணையாளருக்கு கூடுதல் அதிகாரம் தேவை

*சர்வதேச அமைப்பு கோரிக்கை*

தேர்தல் ஆணையாளருக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்என 'ட்ரான்ஸ்பெரன்சி இன்டர் நெசனல்' அமைப்பு கோரியுள்ளது.

தேர்தலுடன் தொடர்புடையவன் முறைகள் மற்றும் குற்றச்செயல்களை தடுத்த நிறுத்தக்கூடிய வகையில் தேர்தல் ஆணையாளருக்கு அதிகளவு அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென அது வலியுறுத்தியுள்ளது. தேர்தல் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்கு தேர்தல் நீதிவான் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண் டுமெனவும் அந்த அமைப்புக் கோரியுள்ளது.

பொதுச்சொத்து துஷ்பிரயோகத்திற்கு எதிராக சட்ட மா அதிபரினால் மட்டுமே தற்போதைக்கு வழக்குத் தொடரமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. தேர்தல் சட்ட மீறல்களை தடுத்து நிறுத்த தேர்தல் நீதிவான் ஒருவரை நியமிக்க வேண்டுமெனவும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தற்போது தேர்தல் ஆணையாளருக்கு போதியளவு அதிகாரங்கள் கிடை யாது.

சுயாதீனமானதும் நீதியானதுமான முறையில் தேர்தலை நடத்துவதற்கு 14 பரிந்துரைகளை 'ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நெசனல்' சமர்ப்பித்துள்ளது.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மனிதப் புதைகுழி மையமாக மாற்றப்பட்டுள்ள தமிழர் பிரதேசம்

மன்னார், திருக்கேதீஸ்வரம் பகுதியில் பெரிய மனிதப் புதைகுழி ஒன்று இருப்பதாகச் சந்தேகிக் கப்படுகிறது. ஏற்கெனவே அங்கு கண்டுபிடிக்கப்பட்ட பதினொரு மண்டையோடுகள் மற்றும் எலும்புக் கூடுகளுக்கும் மேலதிக எண்ணிக்கையில் அவை கண்டுபிடிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது, நம்பப்படுகிறது.

தோண்டப்பட்டு வரும் குழியின் அருகாகச் செல் லும் வீதியின் கீழேயும் மனித எச்சங்கள் காணப்படு வதாகவும், குறிப்பிட்ட வீதியைக் கிளறி எச்சங்களை மீட்க வேண்டிய நிலை உருவாகி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட மண்டை ஓடுகளில் கடுமையான காயங்கள் இருந்த தடயங்கள் காணப்படுவதாகவும் நம்பப்படுகிறது.

போர் நடைபெற்ற காலத்தில் படையினரால் கடத் தப்பட்டுக் காணாமற் போனோரின் எலும்புக் கூடுகளே மீட்கப்பட்டிருக்கக் கூடும் என்றும் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

1990 ஆம் ஆண்டு தொடக்கம் 1995 ஆம் ஆண்டு வரையான காலத்தில் குறிப்பிட்ட பிரதேசம் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததாகவும், அதன் பின்னர் தொடர்ந்து இராணுவத்தினரின் கட்டுப் பாட்டில் இருந்ததாகவும் நம்பப்படுகிறது.

அது மட்டுமன்றி, கடத்தப்பட்டுக் காணாமற் போன வர்களே எலும்புக் கூடுகளாக மீட்கப்படுவதாகவும் சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன.

திருக்கேதீஸ்வரம் பகுதியில், இராணுவ முகாம் அமைந்திருந்த பகுதியிலேயே, போர்க் காலத்தில் அரச படையினரால் கடத்தப்பட்டு, காணாமற்போன தமிழர் களே, இப்போது எலும்புக் கூடுகளாக மீட்கப்படுகிறார் கள் என்று தவிர்க்க முடியாத சந்தேகம் எழுவதும் இயல்பே.

அது மட்டுமன்றி, போர் நடைபெற்ற வேளை யிலும், அது முடிவுற்ற பின்னரும் கடத்தப்பட்டு காணா மற்போன தமிழ் மக்களே இப்போது எலும்புக் கூடு களாக மீட்கப்படுகிறார்கள் என்ற சந்தேகமும்-

அதனால் தமிழர்கள் மத்தியில் மனக்கலக்கமும், தாளாத சோகமும்-எழுவது இயல்பே.

அது தவிர்க்க முடியாததும் தாளாத சோகத்தையும் ஆறாத மன வடுவையும் ஏற்படுத்த வல்லதும் ஆகும்.

தமிழ் மக்களில் குறிப்பாகத் தமிழ் இளைஞர்களில் காணாமற் போனவர்கள் குறித்து, போர் முடிவுற்று ஐந்து வருடங்கள் கழியும் நிலையிலும், எந்தவித தக வலும் இல்லை. அது குறித்து விசாரணை நடத்தும் சிந்தனையும் அரசிடம் இல்லை.

இத்தகைய ஒரு நிலையில், வடக்கு, கிழக்கின் புதைகுழிகள் குறித்தோ காணாமற் போனவர்கள் குறித்தோ இந்த நாட்டு அரசு நேர்மையான (Genuine) விசாரணை எதனையும் நடத்தும் என்று கிஞ்சித்தும் எதிர்பார்க்க முடியாது.

காணாமற் போனவர்கள், காணாமற் போகச் செய் யப்பட்டவர்கள் என்ற வகையறாக்களில் ஆயிரம் ஆயிரம் தமிழ் உறவுகள் குறித்த தகவல்களை வெளி யிடாமல், அரசு மூடுமந்திரமாக வைத்திருக்கிறது.

அனைத்துலக மனித உரிமைகளில் அடங்கும் இவற்றுக்கு அனைத்துலக மட்ட விசாரணை ஒன்று தேவை என்பதனை இந்த மூடுமந்திர நிலை தோற்று வித்துள்ளது. அவ்வளவே.....

மலையகம், மாத்தளையில் ஆஸ்பத்திரி ஒன்றை நிர்மாணிப்பதற்காக, அத்திபாரப் பணிகள் முன்னெடுக் கப்பட்டவேளை, சுமார் 150 பேருக்குரிய மனித எச் சங்கள் மேலெழுந்தன என்பதும் இங்கு ஞாபகத்துக்கு உரியதாகும். குறிப்பிடத்தக்கது ஆகும்.

# தமிழர் வழி இனிமேல் தனி வழி

ராஜராஜன்

பல்வேறு அனுபவங்களின் அடிப்படையில் வைத்துப் பார்க்கும் போது, இலங்கை யின் பூர்வீகத் தமிழ் மக்கள் எவரை யும் நம்பாது தனிவழியில் செல்ல வேண்டியதொரு நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். இதில் பூர்வீகம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டதற்குக் கார ணம் இல்லாமல் இல்லை. இலங் கைத் தமிழர்கள் என்று அழைக்கும் போது இங்கு பூர்வீகமாக வாழ்ந்த தமிழர்களும், அந்நியர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டு மலையகப் பகுதிகளில் குடியேற்றப்பட்ட மலையகத் தமிழர் களும் அடங்குவர்.

பூர்வீகமாக வாழ்ந்த தமிழர்களின் தாயகப் பிரதேசங்களாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அடையாளம் காட்டப்பட்டுள்ளன. இது இலங்கை யின் மொத்த நிலப்பரப்பில் பெரு மளவு பகுதியை உள்ளடக்கியுள்ளது. வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின் றது. கிழக்கு மாகாணம் திருகோண மலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

### நெருங்கிக் காணப்பட்ட தமிழ் - முஸ்லிம் உறவு

வடக்கு மாகாணம் தமிழ் மக்களை மிக அதிக அளவில் கொண்டுள்ளது. குறைந்த அளவில் முஸ்லிம் மக்க ளும் வசிக்கின்றனர். ஏனைய இனத் தவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய தொகையினராகக் காணப்படுகின் றனர்.

இந்த நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னர் கிழக்கு மாகாணமும் தமிழ் மக்களையே மிக அதிக அளவில் கொண்டிருந்தது. தமிழர்களுக்கு அடுத்ததாக முஸ்லிம் மக்கள் வாழ்ந் தனர். இந்த இரு இனத்த வர்களும் தமிழ் மொழியையே தமது தாய் மொழி யாகக் கொண்டிருந்ததால் ஒற்றுமை யாக வாழ்ந்து வந்தனர். அப்போதைய அரசியல்வாதிகள் 'பிட் டும் தேங்காய்ப் பூவும்' போன்று கிழக்கில் தமிழர்க ளும், முஸ்லிம்களும் இணைந்து வாழ் கின்றனர் எனக் கூறுவர். அந்தள வுக்கு இந்த இரண்டு இனத்தவர்க ளும் பாசத்துடன் இணைந்து வாழ்ந்து வந்தனர்.

அரசியலைப் பொறுத்த வரையில் கிழக்கில் வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மக் கள் வடபகுதி அரசியல் கட்சிகளையே அப்போது சார்ந்து நின்றனர். தந்தை செல்வநாயகத்துக்கு அங்கு பெரும் மதிப்புக் காணப்பட்டது. தமிழர்களும், முஸ்லிம்களும் அந்நியர்கள் அல்ல. அவர்கள் மதத்தால் வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுபட்டவர்கள் என்ற செல்வாவின் கருத்துக்களை அங்குள்ள வர்கள் ஏற்று அவ்வாறே நடக்கவும் தலைப்பட்டனர்.

அப்போதெல்லாம் தென்னிலங்கைக் கட்சிகளின் ஆதிக்கம் கிழக்கில் அவ் வளவு காணப்படவில்லை. சிங்கள மக்கள் வாழும் பகுதிகளிலும், சில முஸ்லிம் பிரதேசங்களிலும் அவை தலையெடுத்திருந்தன.

### கிழக்கின் சிங்களக் குடியேற்றம் தமிழர் தலைவிதியை மாற்றியது

இந்த நிலையில் கிழக்கு மாகாணத் தில் அரசினால் திட்டமிடப்பட்ட வகை யில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்ப டுத்தப்பட்டன. இந்த நாட்டின் முதலா வது பிரதமரான டி. எஸ். சேன நாயக்க இதற்குப் பிள்ளையார் சுழி இட்டார். இதுவே கிழக்குத் தமிழர்க ளின் தலைவிதியை மாற்றும் முதலா வது சுழியாகவும் அமைந்தது. இன்று அவர்கள் அதன் விளைவுகளை எதிர் கொண்டு வருகின்றனர். சுதந்திரத் துக்கு முன்னர் பெரும்பான்மையினத் தவர்களாக வாழ்ந்த தமிழ் மக்கள் இன்று தமது நிலங்களை இழந்து, உரிமைகளை இழந்து சிறுபான்மை யினராக மாறி ஏதிலிகளாக வாழும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பெரும்பான்மையினக் கட்சிகளின் பால் ஈர்க்கப்பட்ட முஸ்லிம் தலைவர் கள் பதவிச் சுகத்தை அனுபவிக்க வேண்டுமென்ற நினைப்புடன் செயற் பட்டதால் தமிழ், முஸ்லிம் இனங்களுக் கிடையில் நிலவிய உறவில் விரிசல்க ளும் தோன்ற ஆரம்பித்தன. சில தமிழ்த் தலைவர்களும் பெரும்பான்மை யினக் கட்சிகளிடம் சோரம் போன தையும் மறுக்க முடியாது. ஆனால் வடபகுதி அரசியலை கிழக்கிலிருந்து முற்றாகத் துடைத்தெறிவதற்கு எவரா லும் முடியவில்லை.

வடபகுதியில் தமிழர்களின் கரங்களி லேயே அரசியல் நிலவரம் தங்கியி ருந்தது. பெரும்பான்மைக் கட்சிகளால் இங்கு தலையெடுக்க முடியவில்லை.

### தமிழ் மக்களிடையே நெருங்கிய ஒற்றுமை

ஆனால் போரின்போதும், போருக்குப் பின்னரும் வடக்கு, கிழக்குப் பிரதேசங் களில் வாழ்கின்ற தமிழ் மக்களிடையே அதிக நெருக்கம் ஏற்பட்டதை அவதா னிக்க முடிகின்றது. போரினால் மோச மாகப் பாதிக்கப்பட்டவர்கள் என்பதா லும், போரின் பின்னரும் பல்வேறு வகையிலும் இடர்களுக்குள் தள்ளப் பட்டு வருபவர்கள் என்பதாலும் இந்த நிலை ஏற்பட்டதாகச் சிலர் கூறி வரு கின்ற போதிலும் ஒரே இனத்தவர்கள் என்ற ரீதியில் பன்னெடுங்காலமாக நிலவி வந்த உறவுதான் இதுவென் பதை எவரும் மறுக்க முடியாது. அதிலும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது முஸ்லிம் கட்சிகள் தமிழர் தரப்பினரை ஏமாற்றியதும், வடமாகாண சபைத் தேர்தலில் தமி ழர்கள் சார்ந்த கட்சி அமோக வெற் றியீட்டிய போதிலும் மாகாண சபைக் குரிய அதிகாரங்கள் அவர்களுக்கு வழங் கப்படாமையும், போதிய நிதி வழங்கப் படாமையும் இந்தப் பிணைப்பை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

> போரின் போதும், போருக்குப் பின்ன ரும் இவர்கள் இலங்கைத் தமிழர்களுக்கு காத்திரமான உதவி களை வழங்க வில்லை என்பது தான் உண்மை நிலையாகும்.

இந்த நிலையில்தான் தமிழர்கள் தீர்க் கமான முடிவொன்றை எட்டவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இயல்பாகவே இவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் முற்றாக நசுக்கப்பட்டுள்ள இன்றைய சூழ்நிலை யில் இவர்கள் அவற்றைப் பெறுவதற் கான முற்சிகளில் ஈடுபடாது தூக்கத்தில் ஆழ்ந்திருந்தால் மீளவே முடியாத நிலைக்கு தமிழர்கள் தள்ளப்பட்டு விடுவர் என்பதில் ஐயமே இல்லை.

ஆனால் அதற்கான துணிவும், பலமும் தமிழர்களிடம் உள்ளதா என்பதுதான் கேள்விக் குறியாக மாறியுள்ளது.

### யாரையும் நம்பத் தயாரில்லை

கடந்த காலங்களில் தமிழர்கள் அகிம்சை வழியிலும், ஆயுதங்களின் உதவியுட னும் போராடிப் பார்த்துவிட்டனர். ஆனால் அழிவுகள்தான் மிஞ்சின. ஆரம்பத்தில் உதவி செய்யவென வந்த வர்கள் பின்னர் உபத்திரவமாக மாறி விட்டனர். எவரையும் நம்ப முடியாத தொரு அவல நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டது. எட்டப்பர்களும், காக்கை வன்னியர்களும் தமிழர் தரப்பிலேயே காணப்பட்டனர். இவர்களாலேயே மிக அதிகமான பாதிப்புக்கள் ஏற்பட்டன.

இந்தநிலையில் ஏனையவர்களை நம்பியிருப்பதில் அர்த்தம் இல்லை யென்றுதான் கூற வேண்டும். தமிழ் இனத்தவர் என்ற வகையில் கருதப்பட்டா லும் மலையகத் தமிழர்கள் பல்வேறு வகைகளிலும் மாறுபட்ட சூழலில் வசித்து வருகின்றனர். பூகோள ரீதியில் பெரும் பான்மையினத்தவர்களால் சூழப்பட்ட நிலையில் இவர்கள் வாழ்கின்றனர். இதனால் எப்போதுமே பெரும்பான்மை யினரை அனுசரித்துப்போக வேண்டிய தேவை இவர்களுக்கு உண்டு. மலை யகத் தலைவர்கள் ஆட்சியில் இருப்ப வர்களுடன் இணங்கிப் போவதையே விரும்புகின்றனர். இதனால் பல்வேறு வரப்பிரசாதங்கள் இவர்களுக்குக் கிடைக் கின்றன. இந்த நிலையில் சாதாரண மலையக மக்கள் தொடர்பாக இவர்கள் பெரிதும் அலட்டிக் கொள்வதில்லை. இந்த நிலையில் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களின் அவலநிலை தொடர்பாக இவர்கள் அக்கறை செலுத்துவார்களென எதிர்பார்க்க முடியாது. ஓரிரு மலையகத் தைச் சேர்ந்த தலைவர்கள் அவ்வப்போது குரல் எழுப்புவதைத் தவிர அவர்களால் வேறொன்றும் செய்துவிடமுடியாது என்ப துதான் உண்மை நிலையாகும்.

இன்னுமொரு தமிழ் பேசுகின்ற இனமா கிய முஸ்லிம்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் வடக்குக், கிழக்கில் மட்டுமல் லாது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரந்து வாழ்கின்றனர். ஆளும் தரப் பினருடன் இணங்கிப் போவதையே முஸ்லிம் தலைவர்கள் விரும்புகின்ற னர். இவ்வாறு சில முஸ்லிம் தலை வர்களின் சுயநல அரசியலால் ஒட்டு மொத்த முஸ்லிம் மக்களும் உள்ளூர விருப்பம் இருந்தாலும் தமிழரோடு ஒன்றுபடாது விலகியே நிற்கின்றனர். கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது முஸ்லிம் அரசியல்வாதிகளின் சுயரூபம் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்து விட்டது.

### தமிழர்வழி தனிவழி

ஆகவே தமிழ் பேசுபவர்கள் என்ற வகையில் இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்து வரும் தமிழ்மக்கள் இந்த இரு சாராரையும் தமக்கு உதவுவார்களென இனியும் எண்ணியிருப்பதில் அர்த்தமே இல்லை.

மேலும் வெளிநாடுகளின் கைகளையும் எதிர்பார்த்துக் கொண்டு இருப்பதில் பயனில்லை. போரின் போதும், போருக் குப் பின்னரும் சர்வதேசம் இலங்கைத் தமிழர்களுக்கு காத்திரமான உதவி களை வழங்கவில்லை என்பதுதான் உண்மை நிலையாகும். ஏதோ மனித உரிமைகள் , சர்வதேச விசாரணை என காலம் கடந்து செல்கின்றதே தவிர தமிழர் களின் இன்னல்கள் குறைந்தபாடில்லை. எனவே வடக்குக் கிழக்கைச் சேர்ந்த தமிழர்கள் தாம் இழந்தவற்றைத் திரும்ப வும் பெறுவதற்கு ஒன்றிணைய வேண் டிய காலம் இப்போது கனிந்திருக்கின்றது. தேவையற்ற அழிவுகளுக்கு இடம்கொடுக் காது ஜனநாயக வழியில் தமது உரி மைகளுக்காகப் போராட வேண்டிய ஓர் இறுதிக் கட்டத்தை அவர்கள் அடைந்துள் ளனர். ஆனால் தாம் செல்ல வேண்டியது தனி வழி என்பதை அவர்கள் மனதில் கொள்ள வேண்டும்.

# உற்சாகமே வெற்றிக்கான திறவுகோல்



பயம் அதிகமாகும்பொழுது ஒரு சிலருக்கு உற்சாகம் வரும். ஒரு சிலருக்கு கவலைகளும், பயங்களும் மென்மேலும் அதிகமாகும். உற்சாகம் உள்ளவர்களுக்கு வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். கவலைகள் அதிகமாக உள்ளவர்களுக்கு வாழ்க்கை துன்பத்தின் பாதையிலேயே செல்லும்
எமது மகிழ்ச்சி, எம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கும் மகிழ்ச்சியைத் தரும். எமது கவலை உடன் இருப்பவர்களுக்கும் கவலையையும், தளர்வையும் ஏற்படுத்தும். ஒரு மனிதனிடம் இருந்து பரவும் தொற்று நோயைப் போன்றது இது. எம்மிடமிருந்து தொற்றுவது நன்மைகளும், மகிழ்ச்சியாகவும் மட்டுமே இருக்க வேண்டும்.

பள்ளி செல்லும் வயதில் வெள்ளிக்கிழமை மாலையில் ஏற்பட ஆரம்பிக்கும் உற்சாகம் திங்கட்கிழமை காலையில் மறைந்து விடுகிறது. இதுவே உயர்கல்வி கற்கும் பொழுது விடுமுறைகளில் உற்சாகம் குறைந்து கல்லூரி நாள்களில் உற்சாகம் அதிகரிக்கிறது. வேலை தேடும் காலங்களில் மிகுந்த ஆவலுடன் நேர்முகத்தேர்வுக்குச் செல்லும் நாள்களும், முதல் நாள் வேலைக்கு செல்லும் நாளும் உற்சாகம் மிகுந்தது.

உற்சாகங்கள் வயதுக்கு தகுந்தவாறும், சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறும் மாறுகிறது. ஆனாலும் ஒரு சில நாள்களைத் தவிர பெரும்பாலும் மனம் உற்சாகத்துடன் நம்மை இயங்க வைப்பதில்லை. சூழ்நிலைகள்தான் உற்சாகத்தை தருகின்றனவே தவிர, எமது மனது தானாக உற்சாகத்தை உருவாக்குவதில்லை. மனிதன் பிறந்தது முதல் ஏதோ ஒன்றைத்தேடி அலைவதற்கே வாழும் காலம் சரியாகிவிடுகிறது. எப் போதும் இருக்கும் இந்தத் தேடலில் உற்சாகத்தை உறங்கவைத்து விடுகிறோம். தேடல் எந்த அளவுக்கு அவசியமோ, அதே போன்று உற் சாகமும் அவசியம். உற்சாகம் இருந்தால் தான் தேடல் நிறைவு பெறும்.

உற்சாகம் என்பது ஏதோ ஒன்றைச் சார்ந்தது அல்ல, ஒன்றிலிருந்து மற்றொன்று என விரியும் சங்கிலித் தொடரின் இறுதியே உற்சாகமா கும். மனம்தான் உற்சாகம் என்று பலரும் நினைக்கின்றனர். மனம் ஒரு முக்கிய காரணியாக இருந்தாலும் அதன் தொடர்ச்சியாக உடல் நலம், எண்ணங்கள், செயற்பாடுகள் என தொடரும் அது ஒரு சங்கிலித் தொடர்.

### சத்தான உணவுகள்

உடல் நலத்துடனும், சுறுசுறுப்புடனும் இருக்க வேண்டும். உடல் நலத்துக்குச் சத்தான உணவுகள் அவசியம். சத்தில்லாத உணவுகள் உடலின் செயற்பாட்டை மந்தமாக்குகின்றன. மந்தமான உடல், சிந்தனை யிலும் மந்தத்தை உருவாக்குகிறது. சத்தான சரிவிகித உணவு உடல் நலத்தையும், சுறுசுறுப்பையும் தருகிறது.

### உடற்பயிற்சி

உடற்பயிற்சி என்றவுடன் மணிக்கணக்காகச் செய்யும் உடற்பயிற்சி என்றோ, எடைகளை தூக்கி கடுமையாகச் செய்யும் உடற்பயிற்சி என்றோ நினைக்க வேண்டாம், கால் மணி நேரப் பயிற்சியே போதும். உடற்பயிற்சியே செய்யாமல் இருக்கும் நிலையில் 15 நிமிடம் என்பது போதுமானது. 15 நிமிடத்தில் என்ன செய்வது? கைகள், கால்கள், தலை, இடுப்பு, முதுகு, விரல்கள் என உடலின் அனைத்துப் பாகங்களையும் சோம்பல் முறிக்கும் பயிற்சியைப் செய்யுங்கள்.

### நடை பழகுங்கள்

எங்களுக்குத் தான் நடக்கத் தெரியுமே என்கிறீர்களா? நடக்கத் தெரியும் என்றாலும் நாம் நடப்பதற்கு ஆவல் கொள்வது இல்லை, அதுவும் குறிப்பாக காலை நேரத்தில். காலையில் அதிக தூரம் நடக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ஒரு 15 நிமிடம் நடந்தாலே போதும். காலை நேரத்தில் உற்சாகமாக செயல்படும் ஒவ்வோருவரின் உற்சாகமும் நம்மையும் தொற்றிக் கொள்ளும்.

### இயற்கையை ரசியுங்கள்

இயற்கையை ரசிக்கத் தொலை தூரத்தில் உள்ள சுற்றுலாத் தலங் களுக்குச் செல்ல வேண்டியதில்லை. நகரத்தில் வாழ்ந்தாலும், கிராமத்தில் வாழ்ந்தாலும் ஒவ்வொரு நாளையும் இயற்கையின் துணையோடுதான் கழிக்கிறோம். ஆனால் அதை நாம் உணர்வதில்லை என்பது உண்மையிலும் உண்மை. காலை நேரத்தின் பனியையும், தென்றலையும், வெயிலையும், அமைதியையும்.வீதியின் அழகையும் உணர்வதற்கு ஒரு சில நிமிடங்கள் போதும்.

நகர வாழ்க்கையில் இரவில் நிலவை, நட்சத்திரங்களை எத்தனை பேர் பார்த்திருப்போம். ஒரு மூன்று நிமிடம் ஒதுக்கி வானத்தை ஆராயுங்கள். அது கொடுக்கும் அடுத்த நாளுக்கான உற்சாகத்தை.

### இருக்கும் இடத்தில் மனதைச் செலுத்துங்கள்

தண்ணீரானது அது இருக்கும் பாத்திரத்துக்கு ஏற்ப தன்னை நிலை நிறுத்திக்கொள்கிறது. அது போன்று பள்ளியில், கல்லூரியில் இருக்கும் போது பாடங்களை பற்றியும், விளையாட்டு மைதானத்தில் விளையாட்டிலும், சாப்பிடும் பொழுது சாப்பாட்டிலும், படுக்கையில் தூக்கத்தையும் மட்டுமே நினையுங்கள். சிந்தனைகள் இருக்கும் இடத்திற்கு சம்பந்தமில்லாமல் விலகிச் செல்லும்பொழுது பதட்டங்களும், கவலைகளும் அதிகமாக வாய்ப்பிருக்கிறது. எனவே மனதைத் திசை திருப்பிக்கொண்டு செல்லாதீர்கள்.

### நேர்த்தன்மையாக எண்ணுங்கள்

இந்த உலகம் நன்மைகளாலும், தீமைகளாலும் நிரம்பி இருக்கிறது. நமக்குத் தேவையானவற்றை நாம் தான் தேடிப் பெற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். வசந்த காலமும், இலையுதிர் காலமும், பனிக் காலமும், மழைக்காலமும், வேனிற் காலமும் நிரந்தரமாக இருப்பதில்லை. வருடம் முழுவதும் மாறி மாறி வருகின்றன. அதே போன்று தான் பிரச்சனைகளும், மகிழ்ச்சியும். பிரச்சனைகளை எண்ணி அதிகம் கவலை கொள்வது, அடுத்தடுத்த செயல்பாடுகளுக்குத் தடைகளை ஏற்படுத்துமே தவிர, உற்சாகத்தை தராது. இவற்றைக் கடந்து விடலாம் அல்லது இது கடந்து போகும் என்று எந்த நிலையிலும் நினையுங்கள்.

நம்மை நாமே மாற்ற முயன்றாலும், மாற்றம் ஒரே நாளில் நிகழ்ந்துவிட வாய்ப்புகள் குறைவு. பருகப் பருகப் பாலும் புளிக்கும் என்பது பழமொழி; எனவே தினந்தோறும் நிகழ்வுகளை தனதாக்கிக் கொண்டால் தான் நீடித்த உற்சாகம் தனதாகும்.

# மறப்பதும் ஒரு கலைதான்

மதுமிதா

பிறப்பில் தொடங்கும் வாழ்வின் ஓட்டம் இறப்பைச் சென்றடைந்திடும் வரையில் சுமுகமாகச் செல்ல உறக்கத்தைப் போல் மறதியும் அத்தியாவசியத் தேவையாய் இருக்கிறது. சில நேரங்களில் சாவு தவிர்க்க இயலாததென அறிந்திருந்தாலும், நெருங்கிய உறவின் இழப்பு மன வேதனையை அதிகரித்து மனச்சிதைவை ஏற்படுத்தும் அள வில் கொடியதாகவே இருக்கும். அந்தச் சமயங்களில் மறதியே உயிரை வாழ வைத்திடத் தேவையான அருமருந்தாக உள்ளது.


சிறுவயதில் படித்த வாய்ப்பாடு, திருக்குறள் முதற்கொண்டு உறவினர் நண்பர்களின் பெயர்கள் வரையிலும் நினைவு கொள்ளப்பட வேண்டியவைகளின் அட்டவணையின் எண்ணிக்கை அதிகம்தான். அதுவும் எப்போதும் நினைவுகொள்ள வேண்டியதில்லை. அந்தந்த சந்தர்ப்பம் வருகையில் உடன் நினைவு கூர்ந்தால் போதும். கணினியில் எழுதிச் சேமித்து பாதுகாத்துவைத்து தேவையான நேரத்தில் அதிலிருந்து எடுத்து உபயோகிப்பதுபோல் மூளையின் அறைகளில் நினைவுகளை அதற்குண்டான அறைகளில் சேமித்து வைத்து விடவேண்டும். தேவையானவற்றை மட்டுமே தேவையான நேரத்தில் எடுத்து நினைவு கொள்ள வேண்டும். இதில் உள்ள தொல்லை என்னவென்றால், கணினி நமது கட்டுப்பாட்டில் உள்ள வரையில் நமது தேவையைச் சிறப்பாய் செயற்படுத்தும். வைரஸ் தாக்கினால் மட்டுமே தன்னிச்சையாய்ச் செயற்படும். மனமோ எப்போதும் தன்னிச்சையாய் செயற்பட்டுவிடும். அதனாலேயே மறக்கும் கலையை வளர்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயத் தேவை உள்ளது.

மறதி என்பது சில நேரங்களில் வரம். சில நேரங்களில் சாபம். எதனை மறக்க வேண்டுமோ அதனை அடிக்கொருமுறை நினைவு கூர்வதும், எதனை நினைவுகொள்ள வேண்டுமோ, அதனை மறந்து விடுவதும் மனிதர்களின் உடன்பிறந்த குணம். இரண்டு மாதங்களுக்கு முன்பு முதல் வெள்ளியன்று மாலை வெளியில் செல்கையில் உடுத்திய உடையின் நிறம் என்ன? மூன்று வாரங்களுக்கு முன்பு காலையில் உண்ட உணவு என்ன? என்பது எத்தனை பேருக்கு நினைவில் இருக்கும். அதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய தேவையும் இல்லை. ஆனால் முப்பது வருடங்களுக்கு முன்பு எங்கோ எதற்கோ நண்பர்களுக்குள் அல்லது உறவினரிடையே நடந்த ஒருசிறு சர்ச்சையை முப்பது வருடங்களுக்கும் மேலாகச் சுமந்து கொண்டு நிம்மதி இழந்து குடும்ப நிம்மதியையும் சேர்த்தழித்து அலைபவர்கள் எத்தனை பேர். இதுவும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய தேவை இல்லைத்தான். இதனையும் மறந்திருந்தால் வலியைச் சுமக்காதிருந் திருந்தால் எம்மில் பலரின் வாழ்க்கை எத்தனை இயல்பாய் இரசிக்கப் பட்டிருக்கலாம்.

தனி மனித சோகம் சிறிதுசிறிதாய் மறக்கப்பட வேண்டிய ஒன்று. செயலிழக்கச் செய்யும் நினைவுகளை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திப் பார்ப்பது தவிர்க்கப்படவேண்டும். பிடிக்காத திரைப்படப் பாடல்களை அல்லது காட்சிகளை என்றும் நாம் நினைவு கூர்வதில்லை. பிடித்த பாடல்களையோ காட்சிகளையோ திரும்பத் திரும்பக் காண விளைகிறோம். அதுபோல் துன்புறுத்தும் நினைவுகளை மறந்து இதம் சேர்க்கும் நினைவுகளை மட்டுமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். வாழ்வுஇனிதாய்இருக்கும்.

சமூகக் கட்டுப்பாடு (சமூகத்தின் மீதான அக்கறை) இப்போதெல்லாம் மறக்கப்பட்டு விட்டது. குழந்தைகள் மாடிப்படிகளில் திபுதிபுவென ஓடி இறங்கினால் முன்பெல்லாம் யார் வீட்டுக் குழந்தையாயினும் வயதில் பெரியவர்கள் வித்தியாசம் பாராது என்ன வேலையிருந்தாலும் நின்று அவர்களை நிறுத்தி மெதுவாகப் போ என்று சொல்வார்கள். குழந்தைகளும் அவர்கள் பேச்சுக்கு மரியாதையுடனும் பணிவுடனும் கட்டுப்படுவர். அது போல் வீதியில் குடிகாரக் கணவன் மனைவியை இழுத்து வைத்து அடித்துக் கொண்டிருந்தால் யாராக இருந்தா லும் நின்று இது தவறு என்று தடுத்து நிறுத்துவார்கள்.. அந்த அளவுக்குச் சமூக அக்கறை இருந்தது.

ஓர் அறிவியல் அறிஞர் பரி சோதனைச் சாலையில் நேரம் காலம் பாராது ஆராய்ச்சி செய்வார். பல அறிவியல் கண்டுபிடிப்புச் சாதனங்களை உலகுக்கு அளித்த மாமேதை. அவர் கதவைத் திறந்து வெளியே வருகையில்அவரது வளர்ப் புப் பூனை அவரைக் காண வேகமாய் குதித்தோடி வந்தது. அதன் அன்பை அறிந்து அது எப்போதெல்லாம் அவரைக் காணவிரும்புகிறதோ அப்போது தடையில்லாமல் அவரது அறைக்கு வந்து செல்லும்வகையில் கதவில் ஒரு துளையிட எண்ணினார். அப்போது அந்தப் பூனையின் குட்டியும் ஓடோடி வந்தது. உடன் பூனையும் அதன் குட்டியும் கதவு வழியே அவரின் ஆராய்ச்சி அறைக்கு வர சிறியதுளை ஒன்று பெரிய துளை ஒன்று என கதவில் இரு துளைகள் போடப் பட்டன. பெரிய துளை வழியே பூனைக் குட்டியும்வர முடியும் என்பது அந்த மாமேதைக்கு நினைவுக்கு வராத அளவில் மறதி.



எல்லா மதங்களும் போதிப்பது அன்பையே. இலக்கு ஒன்று. மார்க்கங்கள் தான் வேறு. எனினும் வசதியாக எல்லாம் மறந்து அன்பினைத் துறந்து அழிவுக்கு வித்திடுகிறோம்.

வாழு வாழவிடு என்பது போல் மறப்போம் மன்னிப்போம் என்பதும் உயர்ந்த விஷயம் தான். எதனை மறப்பது எதனை நினைவு கொள்வது என்பதில் தான் வேறுபாடு. எதனை எப்படி மறக்க வேண்டும் எதனை எப்போது நினைவு கொள்ள வேண்டும் என்ற கலை கைவந்துவிட்டால் வாழ்வில் துயரேது?

கற்போம் கற்பிப்போம் மறக்கும் கலையினை. வாழ்வோம் வாழவைப் போம் மொத்த உலகினை.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்**: வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிட்டும். தாயாரின் உடல் நிலை சீராகும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

**இடபம்**: மனச்சாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட வேண்டுமென நினைப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள்.

**மிதுனம்**: உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்** : வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். நட்பு வட்டம் விரிவடையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**சிங்கம்**: உணர்ச்சி வேகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வீட்டிலும், வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுமே என்ற பயம் வரும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலை பார்க்க வேண்டி வரும்.

**கன்னி**: குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் ஏற்படும். திட்டமிடாத செலவுகளை போராடிச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**துலாம்**: எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். வியாபாரத்தில் திடீர் இலாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்**: பழைய கடன் தீரும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**தனுசு**: அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**மகரம்**: சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும். மற்றவர்களுக்காக பரிந்து பேசப் போய் நீங்கள் சிக்கிக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**கும்பம்**: இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பற்று, வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள்.

**மீனம்**: எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் அனுபவம் உள்ள வேலையாள்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**நாளை**

மார்கழி-11
வியாழக்கிழமை 26.12.2013
திதி: நவமி பி.இ.03.03 வரை
நட்சத்திரம்:
அத்தம் பி.ப.04.36 வரை
சுபநேரம்:
07.57- 09.27 வரை
இராகுகாலம்:01.57 -03.27 வரை

தருவது வித்தியா

# துறவியும் இல்லறத்தானும்



### விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

துறவியின் செயல்களில் இல்லறத்தான் தலையிடக் கூடாது. பணக்காரர்களிடம் துறவிக்கு எந்த வேலையும் இல்லை; ஏழைகளிடமே உள்ளது. துறவி, ஏழைகளை அன்புடனும் கருணையுடனும் பராமரித்துத் தம் ஆற்றல் முழுவதையும் செலுத்தி மகிழ்வுடன் அவர்களுக்குப் பணிபுரிய வேண்டும். பணக்காரர்களுக்கு மரியாதைகாட்டி, அவர்களது உதவியை எதிர்பார்ப்பதே நம் நாட்டுத் துறவிகள் சமூகத்தில் நஞ்சாகிவிட்டது. உண்மைத் துறவிகள் இதிலிருந்து மிகுந்த எச்சரிக்கையுடன் விலகி நிற்க வேண்டும். இத்தகைய வாழ்க்கை, விலைமகளின் வாழ்க்கையைப் போன்றதே. இது உலகத்தையே துறந்துவிட்டதாகச் சொல்லும் துறவிகளுக்குச் சற்றும் ஏற்றதல்ல. பெண்ணாசை, பொன்னாசைகளில் மூழ்கி இருக்கும் ஒருவன், இவற்றை முற்றிலும் துறப்பதையே இலட்சியமாகக் கொண்ட ஒருவருக்கு அன்பராவது எப்படி? பெண்ணாசை, பொன்னாசை சிறிதுமில்லாதவர்களையே தம்மிடம் அனுப்புமாறு ஶ்ரீராமகிருஷ்ணர் அழுதழுது உலக அன்னையை வேண்டுவார். "உலகப் பற்றுமிக்கவர்களுடன் பேசினால் என் உதடுகள் எரிகின்றன" என்று கூறுவார் அவர். உலகப் பற்றுமிக்கவர்களும் மனத் தூய்மையற்றவர்களும் தொடுவதைக் கூட தம்மால் தாங்க முடிவதில்லை,' என்று அடிக்கடி கூறுவார். துறவி வேந்தராகிய ஶ்ரீராமகிருஷ்ணரைப் பற்றி உலகப் பற்றுடையவர்கள் கூற முடியாது. அவர்கள் முற்றிலும் உண்மையானவர்களல்ல. அவர்களுக்கு ஏதாவது ஒரு சுயநலம் இருந்தே தீரும். இறைவன் இல்வாழ்வானாக அவதாரம் செய்தாலும், அவரது சிந்தையும் செயலும் முற்றிலும் உண்மையாக இருக்கும் என்று என்னால் நம்ப முடியாது. இல்வாழ்வான் ஒருவன் மதத் தலைவனாக மாறினால், மதக் கொள்கை என்ற போர்வையில் தன் சுயநலப் பூர்த்தியையே நோக்கமாகக் கொள்வான். இதன் பலனாக அந்தச் சமயம் அடி முதல் நுனி வரை அழுகிப் போகும். இல்லறத்தார்கள் ஆசாரியர்களாக இருந்த எல்லா மதங்களின் கதியும் இதுவே. துறவு இல்லையெனில் மதம் ஒருபோதும் நிலைக்காது.



## 86 மணிநேரம் தூங்காமல் 500 கி.மீ. ஓடி உலக சாதனை படைத்தார் நியூஸிலாந்துப் பெண்

நியூஸிலாந்தைச் சேர்ந்த 47 வயது பெண் ஒருவர் தூங்காமல் 500 கி.மீ. தூரம் ஓடி புதிய சாதனை படைத்துள்ளார். நியூஸிலாந்தின் வாய்கடோ பகுதியைச் சேர்ந்தவர் கிம் ஆலன் (வயது-47). நான்கு குழந்தைகளின் தாயான ஆலன், கடந்த 19 ஆம் திகதி காலை 6 மணிக்கு ஆக்லேண்டில் இருந்து ஓடத் தொடங்கினார். அவர் தொடர்ந்து 86 மணிநேரம் தூங்காமல் ஓடி கடந்த திங்கட்கிழமை இரவு 8.35 மணிக்கு 500 கி.மீ. தூரத்தைக் கடந்துள்ளார். இதன் மூலம் தூங்காமல் அதிக தூரம் ஓடிய பெண் என்ற புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார். இதற்கு முன்பு அமெரிக்காவைச் சேர்ந்த பாம் ரீட் என்ற பெண் கடந்த 2005 ஆம் ஆண்டில் 80 மணிநேரத்தில் 486 கி.மீ. ஓடியதுதான் உலக சாதனை யாக இருந்தது. தொண்டு அமைப்பு ஒன்றுக்கு நிதி திரட்டவே கிம் தூங்காமல் ஓடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | | 2 | | | 3 | 5 |
| | | 9 | | | | | 6 | 7 |
| 3 | | | | 1 | 8 | 2 | | |
| | 6 | | 2 | | 4 | 7 | 8 | 3 |
| | 3 | | | | | | 2 | |
| 5 | 4 | 2 | 3 | | 7 | | 1 | |
| | | 3 | 1 | 6 | | | | 2 |
| 1 | 2 | | | | | 6 | | |
| 6 | 9 | | | 4 | | | 7 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | 7 | 2 | 9 | 5 | 4 | 3 | 8 |
| 9 | 3 | 2 | 8 | 1 | 4 | 7 | 5 | 6 |
| 8 | 5 | 4 | 6 | 7 | 3 | 9 | 1 | 2 |
| 6 | 4 | 1 | 7 | 3 | 2 | 5 | 8 | 9 |
| 3 | 9 | 8 | 1 | 5 | 6 | 2 | 7 | 4 |
| 7 | 2 | 5 | 4 | 8 | 9 | 1 | 6 | 3 |
| 4 | 1 | 3 | 9 | 6 | 7 | 8 | 2 | 5 |
| 2 | 8 | 6 | 5 | 4 | 1 | 3 | 9 | 7 |
| 5 | 7 | 9 | 3 | 2 | 8 | 6 | 4 | 1 |

*நேற்றைய சுடோக்கின் விடை*


ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம் [illegible] இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## மைக்ரோசொப்ட்டின் புதிய தலைமை தகவல் அதிகாரியாக Jim DuBois



மைக்ரோசொப்ட் நிறுவனத்தில் கடந்த 6 மாதங்களாக தற்காலிக தலைமை தகவல் அதிகாரியாக இருந்த Jim DuBois தற்போது நிரந்தரமாக அந்தப்பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

இந்த தகவலை மைக்ரோசொப்ட் நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. அவர் கடந்த 20 வருடங்களாக மைக்ரோசொப்ட் நிறுவனத்தில் பணியாற்றி வருகின்றார். இக்காலகட்டத்தில் பல்வேறு முக்கிய பதவிகளை வகித்த அவர் தற்போது உலகளாவிய ரீதியில் 190 நாடுகளில் பணிபுரியும் 90,000 மைக்ரோசொப்ட் பணியாளர்களுக்கு தலைமை தாங்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சீதாப்பழம்

## அனைவருக்கும் நல்லது

சீதாப்பழத்தை, கர்ப்பிணிகள் சாப்பிட்டு வந்தால் உடல் வலிமையாவதுடன், பிறக்கும் குழந்தையின் வளர்ச்சியும் நல்ல நிலையில் இருக்கும். சருமத்தை அழகாக்கும். தோலுக்கும் முகத்துக்கும் பளபளப்பைக் கொடுக்கும். இதில் உள்ள மக்னீசியம், உடலில் நீர்ச் சத்தை தக்கவைக்கும். பக்கவாதம், மாரடைப்பு, புற்றுநோய் எதிர்ப்புச்செயல்களில் இந்தப் பழத்தின் பங்கு அதிகம். சீதாப்பழத்தைச் சாப்பிட்ட பிறகு தோல், விதைகளைத் தூக்கி எறியாதீர்கள்.

விதையை அரைத்து, பாசிப் பருப்பு மாவில் கலந்து தலையில் தேய்த்துவந்தால், பேன், பொடுகு நீங்கும். கூந்தல் மிருதுவாகும். பற்சிதைவு, ஈறுகளில் ஏற்படும் வீக்கம் மற்றும் வலிகளுக்கு பழத்தின் தோல் நல்ல நிவாரணி. மலச்சிக்கலைக் கட்டுப்படுத்தும்.

இந்த மரத்தின் பட்டைகள், நீரிழிவு நோய்க்கும் இதன் இலைகள் நோய்த்தடுப்புக்கு மருந்தாகவும் பயன்படு கிறது.

சீதாப்பழம் உடலுக்குக் குளிர்ச்சியைத் தருவதால், இரவு நேரங்களில் சாப்பிடும் போது, வெந்நீரில் சிறிது நேரம் ஊறவைத்து அதன் வெப்பநிலை சற்று உயர்ந்தவுடன் சாப்பிடலாம். சகல வயதினரும் உண்ணக் கூடியது. குறைந்த விலையில் கிடைக்கக்கூடியது.

# சிறந்த ஆண் பிள்ளைகளை வளர்க்கும் கடமை

பொதுவாக பெண் குழந்தைகள் பிறந்தால், தாய்மார்கள் கவலைப் படுவது வழக்கம். ஆனால் அந்தக் கவலை, குழந்தை பெண்ணாகப் பிறந்து விட்டதே என்பதற்காக அல்ல. இந்தச் சமுதாயத்தில் நாம் பட்ட பாட்டை எமது குழந்தையும் பட வேண்டுமா என்ற எண்ணத்தில் தான்.

இந்தக் கவலையில் இருந்து பெண்ணைப் பெற்ற தாய்மார்கள் விடுபட வேண்டும் என்றால், ஆண் குழந்தையைப் பெற்ற தாய்மார்கள் சில முக்கிய கடமைகளைத் தவறாமல் செய்ய வேண்டும். அதாவது, தாய்மார்கள், தங்களது பிள்ளைகள் மத்தியில், பெண்கள் குறித்து மரியாதையை ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்கு ஆண்கள் அளிக்க வேண்டிய மரியாதை என்ன என்பதை சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டும். "எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்லவன் ஆவதும், தீயவன் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே" என்று பாடல் ஒன்று உள்ளது. இந்தப் பாடல் முழுக்க முழுக்க உண்மையாகும். இந்தப் பாடலுக்கு உயிரூட்டும் வகையில் அனைத்துத் தாய்மார்களும், தங்களது பிள்ளைகளை சமு தாயத்தின் சொத்துக்களாக மாற்ற வேண்டும். பெற்றோர் அவர்களுக்கு சேர்த்து வைக்கும் முதல் சொத்தே, அவர்கள் சமுதாயத்தில் பெறும் நல்ல பெயர்தான் என்பதை தாய்மார்கள் கருத்தில் கொள்ள வேண்டும். பெண்கள் என்றாலே ஆண்களுக்கு கீழானவர்கள் என்ற எண்ணத்தை ஊட்டி ஒரு காலத்தில் ஆண் பிள்ளைகள் வளர்க்கப் பட்டனர். ஆனால் அந்த எண்ணத்தை எமது பிள்ளைக ளுக்கு ஏற்படுத்தக் கூடாது. சமுதாயம் என்பது ஆணும் - பெண்ணும் சேர்ந்ததே. பெண்ணுக்கு இந்த சமுதாயத்தில் அனைத்து உரிமைகளும் உள்ளன. அவற்றை ஆண் எந்த வகையிலும் தடை செய்யக் கூடாது என்ற எண்ணம் பிள்ளைகளிடத்தே ஏற்பட தாய்தான் வழி செய்ய வேண்டும்.

சமீபத்தில் நடந்த போராட்டத்தில் பெண்கள் வைத்திருந்த ஒரு வாசகப் பலகையில், 'இதுபோன்ற பலாத்கார சம்பவத்துக்குப் பிறகு உங்கள் பெண்களை வெளியே அனுப்ப பெற்றோர் தடை விதிக்கக் கூடாது. மாறாக, உங்கள் வீட்டில் இருந்து வெளியே செல்லும் ஆண் பிள்ளைகளுக்கு, பெண்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று கற்பியுங்கள்' என எழு தப்பட்டிருந்தது. இது எந்த அளவுக்கு சிந்திக்க வேண்டிய விடயம். ஒரு தவறு நடக்கிறது என்பதற்காக, அதில் பாதிக்கப்படுபவர்களுக்கு அல்லவா இந்த சமுதாயம் கட்டுப்பாடுகளை விதிக்கிறது. அதற்கு மாறாக, தவறு செய்பவர்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டியது தானே சரியான முறை. இதனைச் சமுதாயத்தில் நடைமுறைப்படுத்த வேண்டிய சரியான நேரம் இதுதான்.

இதனை மறவாமல், ஒவ்வொரு ஆண் குழந்தைகளும், பெண்களை மதிப்பவர்களாவும், அவர்களை யும் தங்களைப் போல ஒரு மனித ராக பார்ப்பவராகவும் மாற்ற வேண்டிய கடமை ஒவ்வொரு தாய்மாரது கைகளிலும் தான் உள்ளது. இதனைச் சரி செய்துவிட்டால், பெண் குழந்தைகள் தெருவில் வீசப்படுவதும், பெண்கள் காமுகர்களால் பலாத்காரம் செய்யப்படுவதும் தானாகவே குறைந்துவிடும்.

# கயிறு அடியுங்கள்

## உடல் ஆரோக்கியத்துக்கு

இன்று தொப்பை பிரச்சினையால் அவதிக்குள்ளாகும் பெண்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்கள் தினமும் கயிறு அடித்தல் பயிற்சி செய்து வந்தால் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகள் கரைந்து, தொப்பைப் பிரச்சினையும் படிப்படியாக குறை யும். கயிறு அடிப்பதால் ஏற்படும் நன்மை கள் என்ன என்பதைப் பார்க்கலாம்.


முதலில் உடலில் உள்ள தேவையற்ற எடை குறைகிறது. சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் ஆரோக்கியத்தையும், வளர்ச்சியையும், உடலுக்குப் புத்துணர்வையும் தருகிறது. உள் உறுப்புகளுக்கும், நரம்புகளுக்கும் தக்க பயிற்சி கிடைப்பதால் அவற்றின் செயற் பாடுகள் சீராகின்றன. உடலின் ரத்த ஓட்டத்தை சீராக்குவதுடன், இதயத்துக்கும், நுரையீரலுக்கும் வலுவூட்டம் கொடுக்கிறது. கை, கால், தொடைப் பகுதி தசைகள் அதிக சக்தி பெறுகின்றன. மூட்டு வலி, கணுக்கால் வலி நீங்குகிறது. தொடர்ச்சியான இடுப்பு வலி உள்ளவர்களுக்கு அது குறைவதுடன், முதுகெலும்பின் எலும்பு முடிச்சுகள் பலம் பெறுகின்றன. இரத்த ஓட்டம் சீராகிறது. ஆரோக்கியம் மற்றும் அழகைப் பராமரிக்க கயிறு அடித்தல் உதவுகிறது. மிக முக்கியமாக ஆழ்ந்த உறக்கத்துக்கு இது அருமருந்தாகும்.

அதனால் கயிறு அடித்தல் தானே என எண்ணாமல் ஆரோக்கிய மான வாழ்வுக்கு இதனைச்செய்து பயன் பெறுவோம். ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் துள்ளிக் குதிப்பது கர்ப்பப்பை இறக்கத்துக்குக் காரணமாவதால் வயதானவர்கள் இதைத் தவிர்ப்பது நல்லது.



ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் துள்ளிக் குதிப்பது கர்ப்பப்பை இறக்கத்துக்குக் காரணமாகுவதால் வயதானவர்கள் இதைத் தவிர்ப்பது நல்லது.

# மாடுகளுக்கு மேய்ப்பர்கள் தேவை இல்லை




மாடுகளை மேய்த்து விட்டு மீண்டும் பத்திரமாக திரும்ப அழைத்து வரும் ரோபோவை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இவை 4 சக்கரங்களால் ஆனவை. இவற்றை ஆஸ்திரேலியாவை சேர்ந்த நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

இவை பண்ணைகளில் இருந்து பசுமாடுகளை மேய்ச்சல் நிலத்துக்கு பத்திரமாக அழைத்து சென்று கண்காணிக்கின்றன. மாடுகள் மேய்ந்தவுடன் மாலையில் அவற்றை மீண்டும் பத்திரமாக பண்ணைக்கு அழைத்து வருகின்றன.

இதற்கான பரிசோதனை முகாம் சிட்னி பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் முன்னிலையில் நடந்தது. இது விவசாயிகளின் பணிச்சுமையை குறைக்கும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்..

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

## தம்பையா கனகசபை

(பிரபல ஆயுள்வேத வைத்திய கலாநிதி)



அன்னை மடியில்
20.11.1934
அம்பிகை அடியில்
25.11.2013

**திதி: அட்டமி**

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.12.2013) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் இந் நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்)

பெற்றோரின் வழி நின்று பெருமையுடன் வாழ்ந்தீரையா
உற்றாரைப் பேணுவதில் உறவுகளுக்கு உதவுவதில்
புண்ணியம் பலவும் செய்து எமைப் புகழுடனே வாழ வைத்தீர்
கண்ணியமாக எம்மைக் கலங்காமல் காத்து நின்றீர்
நண்ணியதெங்கே அப்பா! நாள்தோறும் கலங்குகின்றோம்
வித்துவனாய் மருத்துவத்தில் விளங்கிய நின் திறமைகண்டு
எத்தனைபேர் உன்னிடத்தில் இன்புற்று வாழ்ந்தார்கள்
முத்தனைய பெறுமதியாய் முடிந்தாலும் உன் ஆயுள்
நித்தியமாய் வாழ்வில் அப்பா நிம்மதியாய் நீர் உறங்கும்
மூண்டுவிட்ட பெருந்துன்பம் முடிவில்லாத்துன்பம் அப்பா!!
ஆண்டுகள் பல சென்றாலும் அப்பா நாம் உமை மறவோம்
அம்பாளின் அடி நிழலில் சாந்திபெற
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி

(42878)(2.6.3)

எங்கள் குடும்பத்தலைவர் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து உடன் ஓடிவந்து துயரில் பங்கு கொண்ட அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், தொலைபேசிகள் வாயிலாக அனுதாபம் தெரிவித்த வெளிநாட்டு உறவினர்கள், நண்பர்கள், அஞ்சலிப்பாக்கள், பனர்கள், மலர்வளையங்கள் வெளியிட்ட அன்புள்ளங்கள், நோயுற்று இருந்தபோது சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதிமார்கள் அவர்களுடன் தோள்கொடுத்த அனைவருக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி உரைகள் நிகழ்த்திய திணைக்களத்தலைவர்கள், பேராசிரியர்கள், சமயப் பெரியோர்கள், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனத் தலைவர்கள், பெரியோர்கள் இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நீங்கா நினைவுடன்

கைதடி கிழக்கு,
கைதடி.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

யாழ்ப்பாணம் பாஷையூரைப் பிறப்பிடமாகவும் மன்னார் மூன்றாம்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## ஆசைத்துரை அமிர்தநாதர் (தவம்)



பிறப்பு
14.10.1942

இறப்பு
25.12.2012

பழகுதற்கு பாசமிகு நண்பனாக
ஆடுகளத்தில் அசத்தல் வீரனாக
சமூக வளர்ச்சியில் நல்ல ஆர்வலனாக
பிள்ளைகள் மகிழும் அன்புமிகு அப்பாவாக
பொறுப்புள்ள குடும்பத் தலைவனாக
அனைத்திலும் மேலாய் நல்ல மனிதனாக
வாழ்ந்த அப்பாவே! ஓராண்டு போனதுவோ
உமையிழந்து என்றும் எம்முன் வாழும் அப்பாவே!
உம் ஆன்ம இளைப்பாற்றிக்காக
இறைவனை இறைஞ்சி வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக (27.12.2013) வெள்ளிக்கிழமை மூன்றாம்பிட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மூன்றாம்பிட்டி,
மன்னார்.


தங்களின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(42981)(7.6.3)

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## நல்லதம்பி தர்மலிங்கம்



திதி: 25.12.2013

எம் இனிய அப்பா!

சோறு ஊட்டி உடை தந்து கல்வி தந்து
எமைப் பார்போற்ற உயர்த்தி
நாம் நிமிர்ந்தபோது
நாம் பார்க்காத நெடுவானம்
சென்றதேனோ?
ஈர் நான்கு ஆண்டுகளானாலும்
எம் துயர் தீரவில்லை அப்பா
அப்பா! அப்பா...! அப்பா.....
ஓம் சாந்தி!

தோற்றம்
05.03.1954

மறைவு
23.12.2005

(42891)(12.3.6)

பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.
சாவகச்சேரி.

## லைடன் புடவை நிலையம்

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
விசேட கழிவு பொங்கல் வரை நீடிக்கப்பட்டுள்ளது

லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# மறுக்கிறார் அரச அதிபர்

நேற்று முன்தினம் திங்கட் கிழமை 'உதயன்' முன்பக்கத்தில் "இடமாற்றம் செய்யப்பட்டார் பூந கரி பிரதேச செயலர்- புலன் விசாரணைகளை அடுத்து" என்ற தலைப்பில் வெளியான செய்தியில்-
தாம் கூறிய தகவல்களுடன் வேறு விடயங்களும் இடம் பெற்றிருக்கின்றன என்று கிளி நொச்சி அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். ஆனால் அந்தச் செய்தியில் வெளியாகியுள்ள தகவல்களை அரச அதிபர் மறுக்கவில்லை.
பூநகரி பிரதேச செயலர் பா.வசந்த குமார் இட மாற்றம் செய்யப்பட் டுள்ளார் என்றும் அவர் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்றும் 'உதயன்' செய்தியாளரிடம் தாம் தெரிவித்த தாகவும் அரச அதிபர் அனுப்பி வைத்துள்ள குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

வாடிக்கையாளர்கள் மற்றும் நண்பர்களுக்குத் தனது உளங்கனிந்த நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்கள்



## கலைமகள் மல்ற்றி சென்ரர் நிறுவனத்தினர்

(43564) (2.3.6)

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணப் பொருள்கள் மற்றும் தினசரி நாளிதழ்கள், பரிசுப் பொருள்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

கலைமகள் மல்ற்றி சென்ரர்
இல.420, ஹொரவபொதான வீதி, இறம்பைக்குளம், வவுனியா. T.P. 024 222 0414

## நெல் அழிவை பரிசீலிக்க காப்புறுதி சபையினர் வருகை

யாழ்ப்பாணம், டிசெ. 25
சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்புக்கு உட்பட்ட நெற் செய்கையாளர்களின் காப்புறுதி செய்யப்பட்ட நெற்செய்கை அழிவு தொடர்பாக பார்வையிட காப்புறுதி சபையினர் நாளை வியாழக்கிழமை வருகை தர வுள்ளனர்.
பயிர்க் காப்புறுதி செய்த அனை வரையும் வருகை தந்து தத் தமது வயல்களைக் காண்பித்து நட்ட ஈட்டுக்கு விண்ணப் பிக்கு மாறு அமைப்பின் செயலாளர் வி.கே.வேதநாயகம் அறிவித் துள்ளார். (ந-9)

## டெலிவரி Boy தேவை

எமது நிறுவனத்திற்கு டெலிவரி செய்யக்கூடிய யாழ். நகர எல்லைக்குள் வசிக்கும் 18 -30 வயதுடைய ஒருவர் தேவை.
தொடர்பு: 077 231 3186/021 222 2092
ஆச்சி பூட் சென்ரர்
இல.117, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

## கார் சாரதி தேவை

தற்காலிக அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 500/= சம்பளம் வழங்கப்படும்.
40 வயதுக்கு மேற்பட்டவர்கள் மாத்திரம் நேரில் வரவும்
திசைகாட்டி (பிறைவேற்)லிமிட்
175 பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம். 021 7904941

## தென்மராட்சியில்...

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதிய மற்றும் பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கான
கணனி, ஆங்கிலம், சிங்கள வகுப்புக்கள் ஆரம்பம்
முதலில் பதிவுசெய்யும் 75 மாணவர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கவுள்ளோம்
A/L 2016 Technology Stream வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன
யாழ் ரெக்
கண்டி வீதி, சாவகச்சேரி, 0772543989

## IELTS A1 B1 B2 KU Education

ஸ்போக்கன் இங்கிலீஷ் வகுப்பும் Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் சந்திக்கு அருகில் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு:078 739 6778
(42840)(4.6.3)

## உடனடி வேலைவாய்ப்பு

சர்வதேச கம்பனிக்கு உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. உடன் தொடர்பு கொள்ளவும். ஆண், பெண் இருபாலாரும்
O/L பரீட்சையில் சித்தியில்லையா?
கணிதபாடத்தில் சித்தியில்லையா?
A/L பரீட்சையில் சித்தியில்லையா?
எம்முடன் உடன் தொடர்பு கொள்ளவும்.
இறுதி சந்தர்ப்பம், நழுவ விடாதீர்கள்.
077 376 9813 (43021)(2.6.3)

## வீடு வாடகைக்குண்டு

கே.கே.எஸ். வீதி உபதபாலகத்துக்கு அருகில் 3 அறைகள், 2 குளியலறை, வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: கரன் - 077 347 2628/077 661 9927 (42838)(45.3.6)

## வீடு வாடகைக்கு தேவை

4பேர் உள்ள குடும்பத்துக்கு பிறவுண் றோட், நாவலர் வீதியில் தொடங்கும் இடத்துக்கு 500 மீற்றர் சுற்றுவட்டத்துடன் இருப்பது மிகவும் விருப்பத்துக்குரியது.
தொடர்பு இல : 077 0864155


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

## 31 ஆம் நாள்கண்ணீர்அஞ்சலி



யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலய முன்னாள் ஆரம்பபிரிவு ஆசிரியை
செல்வி கந்தையா பற்குணசோதி
அவர்களின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அதிபர்,ஆசிரியர்கள், பாடசாலைச்சமூகம்,
யா/புனித சாள்ஸ் ம.வி.
(42830)(4.6.3)

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் கனகராசா நாகேஸ்வரன் (ஈசன்)
கடந்த 25.11.2013 திங்கட் கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்தியம் இன்று (25.12.2013) புதன்கிழமை மு.ப.11.00மணியளவில் சித்தன்கேணி பெரியவளவு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயில் பொது மண்டபத்தில் நடைபெறும் - இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு சகல வழிகளிலும் உதவி புரிந்து ஆறுதல் தெரிவித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், மற்றும் அஞ்சலி உரையாற்றியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
சிவன்கோயிலடி, சித்தன்கேணி. (#10664(12.6.3) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அமரர் வைத்தி கணபதிப்பிள்ளை
பிறப்பு 06.06.1929
இறப்பு 05.01.2013
திதி: அட்டமி

ஐயா என்று அழைத்தோமே - அன்போடு இன்று ஐய்யோ என்று அழுகிறோமே உம் ஆறாத பிரிவால் ஓராண்டு ஆனதே ஐயா உம்மை ஒரு நாளும் நினையாது இல்லையே ஐயா - எம் பார்வையில்
குழந்தை போல் பாசாங்கு காட்டினீர் இன்று பாதியில் எம்மைவிட்டுப் போனது ஏன் ஐயா எத்தனையோ எழுத்துக்கள் எழுதியும் வலிக்காத என் கைகள்
உம் நினைவு அஞ்சலி எழுதும் போது கையோடு சேர்ந்து நெஞ்சமும் வலிக்கிறது
மண்டைதீவில் பிறந்த மணிச்சுடரே! அணையா விளக்கைப்போல் எம்மை அன்போடு பாதுகாத்தீரே
இன்று நீர் அணைந்து ஓராண்டு ஆகியும் அணையாத்தீயை நெஞ்சில் சுமக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று (25.12.2013) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும், அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இல.16, மடம் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



நயினாதீவு இரட்டங்காலி முருகன் ஆலய அறங்காவலர் சபை உறுப்பினரும் சமய சமூகத்தொண்டனுமாகிய குமரகுரு அவர்களின் அன்புத்தந்தையார்
அமரர் பொன்னம்பலம் சோமசுந்தரம்
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இரட்டங்காலி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.
அறங்காவலர்சபையினர், இரட்டங்காலி முருகன், ஆலயம் நயினாதீவு

## 50 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆசிர்வாதம் அமிர்தநாதர்
பிறப்பு 20.04.1911
இறப்பு 25.12.1963
இல்லறமாம் நல்லறமாய் அன்பிலும் அரவணைப்பிலும் வாழ்ந்து யேசு பாலன் பிறந்தநாள் அமரர் இறந்த நாளன்றோ!
அவரின் ஆன்ம சாந்திக்காக செபிக்கிறோம் செபித்துக்கொண்டிருக்கிறோம்
அன்னாரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.
நற்கருணை ஆலயம், தாமோதரம்பிள்ளை வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
தகவல்; மனைவி மேரியோசவின் அம்மம்மா

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ந.சிதம்பரேஸ்வரன்
(நூலகபிரிவு உத்தியோகத்தர், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்)
பிறப்பு : 07.03.1952 இறப்பு : 04.01.2013
ஆண்டு ஒன்று ஆனதப்பா - ஆனாலும்
ஆறவில்லை நம் துயரம்
ஆயிரம் உறவுகள் உடனிருந்தும்
அவர்களெல்லாம் உங்களுக்கு ஈடாகுவார்களா?
அன்புத் தெய்வமே! உங்கள் நினைவுகள்
என்றென்றும் எங்களுள் நிறைந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
அம்மா, மனைவி, மகள், பேரமக்கள்.
மாஜிப்பால் வீதி, இணுவில் மேற்கு, இணுவில்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி சரோஜினி நவரட்ணம்
மண்ணில் 13.01.1952 விண்ணில் 25.11.2013
கடந்த 25.11.2013 இறைபதமடைந்த எமது குடும்பத் தெய்வம் திருமதி சரோஜினி நவரட்ணம் அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (25.12.2013) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். இதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகக் கலந்துகொண்டும் தந்தி மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
குடும்பத்தினர்.
021 222 1981
103/1. கோயில் வீதி. நல்லூர்.
(42941)(2.6.3)

**வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி கோருதல்**
**மாகாணப் பணிப்பாளர் அலுவலகம்,**
**கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம் யாழ்ப்பாணம்.**

மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணத்தின் கீழ் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அலுவலகங்களுக்கு வாடகை அடிப்படையில் வான் பெற்றுக்கொள்வதற்கான கேள்வி கோரலை **இல.40, றக்கா லேன், கண்டுக்குளியில்** அமைந்துள்ள எமது அலுவலகத்தில் விளம்பரப் பலகையில் பார்வையிட்டு கேள்விப்பத்திரங்களைப் பெற்று 2013.12.31 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு முன்னராக அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

எந்திரி செ.மோகனதேவன்
தலைவர்,
பெறுகைக் குழு,
கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்,
இல.40, றக்கா ஒழுங்கை, யாழ்ப்பாணம்,
தொ.பே.021 222 8091/ 021 320 2638 (சி.10665) (45.6.3)

# கௌரவிப்பு விழா

அல்வாய் தெற்கு சமுர்த்திச் சங்கங்களாலும் அல்வாய் தெற்கு அபிவிருத்தி ஒன்றியத்தாலும் சாதனை படைத்தோருக்கான கௌரவிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டு தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த 6 மாணவர்களுக்கும், பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகிய 14 பேருக்கும், இலக்கியத்தில் கலாபூஷணம் விருது பெற்ற அல்வாய் தெற்கைச் சேர்ந்த சின்னையா - தேவராஜசிங்கம், கணவதிப்பிள்ளை எதிர்வீரசிங்கம் ஆகிய இருவருக்கும் இந்தக் கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

கிராம சேவகர் தி.வரதராஜன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, சிறப்பு விருந்தினராக தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் பா.நிர்மலன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந-422)

# வழிகாட்டல் செயலமர்வு

*ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை எழுதியோருக்கான*

தென்மராட்சி, டிசெ.25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு வழிகாட்டல் செயலமர்வுகளை நடத்த கல்வி வலயத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். வலயப் பாடசாலைகளில் பரீட்சைக்குத் தோற்றிய ஆயிரம் மாணவர்களுக்கு நான்கு நிலையங்களில் ஜனவரி மாதத்தில் 24, 25,26 ஆகிய திகதிகளில் நடத்தவுள்ளனர்.

இதற்கான அனுசரணையை வேள்ட் விஷன் நிறுவனத்தினர் வழங்கமுன்வந்துள்ளனர். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இரு நிலையங்களிலும், சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி ஆகியவற்றிலும் செயலமர்வுகள் துறைசார் உயர்தரப் பாடப்பிரிவினரால் நடத்தப்படவுள்ளன.

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் தெரிவுசெய்யப்படும் பாடத்துறைகளும் பாட செயல்மானங்களும் தொழில்நுட்ப பாட அறிமுகமும், உயர்கல்வி வாய்ப்பும் தேசிய கல்வியியல் கல்லூரியில் மேற்கொள்ள வேண்டிய பாடத்துறைகளைத் தெரிவு செய்யும் போது அடைய வேண்டிய பரீட்சைப் பெறுபேறுகள் சமூக இசைவாக்கங்களுக்கும் தேவையான நுட்பங்களும், மனவளக்கலை, ஆங்கில மொழியின் தகுதியும் உயர்கல்வி வாய்ப்பும் போன்றவை தொடர்பாக செயலமர்வுகள் நடத்தப் படவுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களையும் செயலமர்வில் பங்குபற்றுவதற்கு பெற்றோரும், ஆசிரியர்களும் ஒத்துழைப்பு வழங்கு மாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)

**தென்மராட்சி கல்வி வலயம்**
**அதிபர் பதவி வெற்றிடம்**

தென்மராட்சி கல்வி வலயத்தில் பின்வரும் பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கு தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றுவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பாடசாலையின் பெயர் | தரம் | தகைமை |
|---|---|---|
| 01.யா/மீசாலை விக்னேஸ்வரா வித்தி. | IC | SLPS I, SLTS 2-1, SLTS I(பயிற்றப்பட்ட பட்டதாரி) |
| 02.யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி. | II | SLPS I, SLPS 2-1, SLPS 2-II , SLTS I,SLTS 2-I |
| 03.யா/மீசாலை காலாம்பிகை வித்தி. | III | SLPS2-II, SLPS III, SLTS I,SLTS 2-I |

நிபந்தனைகள்:-

01.விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவு திகதியிலிருந்து ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் கடமையாற்றக்கூடிய வயதெல்லையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
02.இலங்கை அதிபர் சேவை வகுப்பு/தரம் என்பவற்றின் வரிசைப்படி முன்னுரிமை அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த பொருத்தமானவர்களது விண்ணப்பங்கள் கிடைக்காத பட்சத்திலேயே ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை வலயக்கல்வி அலுவலக நிர்வாகக் கிளையில் பெற்றுப் பூரணப்படுத்தி 2014.01.10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சு.கிருஷ்ணகுமார்,
வலயக்கல்விப் பணிப்பாளர்.
(சி/7819)(4.6.3)

## மாற்று வலுவுள்ளோர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.25

"பெதஸ்தா விஷன்" மாற்றுவலுவுள்ளோர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாற்றுவலுவுள்ளோர் தினம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் ஆடிய பாதம் வீதி கருவேலடி ஒழுங்கையில் நடைபெறவுள்ளது. (ஒ-14)

## அகத்தியர் தோத்திரத் திரட்டு முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் நடத்தி வரும் "அகத்தியர் தோத்திரத் திரட்டு முற்றோதல்","பன்னிருதிருமுறைப் பாராயணம்" இன்று புதன் கிழமை 7 மணிக்கு மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்தி ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது. (ஒ)

# ஆடை வடிவமைத்தல் கைவேலை பயிற்சி

வடமாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டுக்கான "ஆடை வடிவமைத்தலும் கைவேலைக்குமான பயிற்சி நெறி" எதிர்வரும் ஜனவரி மாதம் மகளிர் அபிவிருத்தி நிலையங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தரம் -9 தொடக்கம் க.பொ.த.சாதாரண தரம் வரை கல்வி கற்றவர்கள் இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுடையவர்கள் நாளை வியாழக்கிழமைக்கு முன்னதாக பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

**றெலிபோன் ஓடர்**
உங்கள் இடத்துக்கு
நிப்போன் சிமெந்து
றோயல் ஹாட்வெயார்
T.P:021 221 9300 (41058)(4.6.3)

**காணி விற்பனைக்கு**
வடலியடைப்பில் உள்ள பரப்பு 6 குழி3.8 காணி உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு:
076 686 4939
சின்னையா 021 321 8557

# மரண அறிவித்தல்



## திருமதி செல்லம்மா சண்முகநாதன்

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சண்முகநாதன் 21.12.2013 சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு, தம்பு மற்றும் மரகதம், செல்லக்குட்டி (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராமச்சந்திரன் (கல்வயல்), அருட்செல்வன் (சுவிஸ்), சத்தியமூர்த்தி (லண்டன்), கிருபானந்தன் (ஆசிரியர், யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை), சிவநங்கை (சுவிஸ்), லோகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், சுகந்தி (ஆசிரியை - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), தேன்மொழி (சுவிஸ்), நளினி (லண்டன்), ஜெகதீஸ்வரி (ஆசிரியை - யா/வரணி மத்திய கல்லூரி), பரஞ்சோதிராஜா (சுவிஸ்), ஜெகதாம்பிகை (லண்டன்) ஆகியோரின் மாமியும், திருவாசகி, அக்ஸயன், விதுஷா, புவிதா, மிதுலா, சயன், துபிதா, ஜதுரிகன், கோபிகன், வர்ணா, வர்ணன், பாரத், ஜஸ்மினா, வினுசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2013) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்வயலில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய பாடசாலை வீதி,
கல்வயல், சாவகச்சேரி.
(சி.7818) (45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புவனேஸ்வரி சின்னத்தம்பி

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், இறம்பைக்குளம், ஓமந்தையை வசிப்பிடமாகவும், தற்போது மகாஇறம்பைக்குளம், வவுனியாவில் வசித்தவருமாகிய திருமதி புவனேஸ்வரி சின்னத்தம்பி நேற்று (24.12.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு - கனகம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சலைப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், சின்னத்தம்பியின் (முன்னாள் பிரதேசசபை ஊழியர் - ஓமந்தை)மனைவியும், செல்வராசா, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், ஜெயந்தினி (அதிபர், வ/புதுக்குளம் பண்டிதமணி கணபதிப்பிள்ளை வித்தியாலயம்), சிவதர்சன் (பாபு - லொறி உரிமையாளர்), ஜெயக்குமாரினி(மாலா), சிவசங்கர் (நிதி), சிவகரன் ஆகியோரின் பாசமிகு தாயும், தவசுந்தரம், சிவரூபி ஆகியோரின் அன்பு மாமியும், கோபிகன், கஜானன், திசாளினி, சுபிசனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.12.2013) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.2.00 மணியளவில் வவுனியா, பூந்தோட்டம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகா இறம்பைக்குளம் வீதி,
பூந்தோட்டம், வவுனியா.077 333 0125
(12831)(12.6.3)

தகவல்:
பிள்ளைகள்.

## ராமசாமி ரூபசிங்கம்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ராமசாமி ரூபசிங்கம் 2013.12.22 ஞாயிற்றுக் கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இணுவில் தெற்கு, இணுவிலில் உள்ள அவரின் இல்லத்தில் நாளை (26.12.2013) வியாழக்கிழமை மு.ப.10.00 மணி அளவில் இடம்பெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ரு.சிவசீலன் (மகன்)
இணுவில் தெற்கு.

# வாழ்த்தி வரவேற்கின்றோம்

**கணிதப்பிரிவு**

மாவட்ட மட்டம் முதலாமிடம்

Jaffna Hindu College



செல்வன் இராஜசேகரம் யதுசன்

**விஞ்ஞானப்பிரிவு**

மாவட்டமட்டம் முதலாமிடம்

J/ Hartley College



செல்வன் சிவஞானச்செல்வம் தினேஸ்

**வர்த்தகப்பிரிவு**

மாவட்டமட்டம் முதலாமிடம்

J/ Vembadi Girls High School



செல்வி நிதுஷா ஜெயக்குமார்

**கலைப்பிரிவு**

மாவட்டமட்டம் முதலாமிடம்

J/ Hindu Ladies college



செல்வி துளசி உமாகரன்

2013 A/L பரீட்சையில் கணித, விஞ்ஞான, வர்த்தக மற்றும் கலைப்பிரிவு ஆகிய நான்குதுறைகளிலும் யாழ்மாவட்டத்தில் முதலிடங்களைப் பெற்ற நால்வரும் Spectra வின் CIMA பயணத்தில் தங்களை இணைத்துக்கொண்டதையிட்டு Spectra Skills பெருமையடைவதுடன் அவர்கள் நால்வரையும் மேன்மேலும் பலசிறப்புக்களைப் பெற வாழ்த்துவதுடன் அவர்களைக் கௌரவித்து CIMA கல்வியினை எமது நிறுவனத்தில் கற்பதற்கு 100 % புலமைப்பரிசில்களையும் வழங்கி வாழ்த்துகின்றது.

**Spectra Skills**
**No: 19, Stanley Road, Jaffna**
**021 222 1422, 021 320 2728**

**Foundation**
Full Time Batch Starts on - 02 Jan 2014 (8.30 AM)
Week End Batch Starts on - 05 Jan 2014 (8.30 AM)

(சி/10669)


# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் தம்பித்துரை

(ஓய்வுபெற்ற உடற்பயிற்சி ஆசிரியர், மல்லாகம் இந்துக்கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, உரும்பிராய் இந்துக்கல்லூரி)



யாழ்.சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் தம்பித்துரை (21.12.2013) சனிக் கிழமை இறைவனடி சேர்ந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - சின்னாச்சி தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-நாகம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சின்னம்மாவின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், பத்மாசனி (கனடா), தயாளன் (கனடா), சிவரூபன் (ஹொலண்ட்), சுமதினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கனகசபை, கந்தையா, சரஸ்வதி, செல்லம்மா, செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சீவரெத்தினம் (கனடா), சாந்தினி (கனடா), வனஜா (ஹொலண்ட்), தயா பரன் (கனடா) ஆகியோ ரின் அன்பு மாமனும், பிரகாஷ், பிறிந்தா, அபிராம், சாருஜன், பிரணவன், அஸ்வினி, யாழினி, அகாஷ், பாதுஷா, விபுஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.12.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியா லடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (42842) (2..45,6,3)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# ஆவணங்களை எரியூட்டிய சம்பவம் மன்றில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது

கொழும்பு.டிசெ.25

கொழும்பு மாநகர சபையின் ஆவணங்கள் சில பொரளை கனத்தை மயானத்தில் எரியூட்டப்பட்ட சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனு தொடர்பில் மேல் மாகாண சபையின் ஆளுநர், கொழும்பு மாநகர சபை மேயர், நகர ஆணையாளர் உள்ளிட்ட 45 பேரை எதிர் வரும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் சிசிர டி அப்றூ உத்தரவு பிறப்பித்தார்.

இந்தச் சம்பவம் மாநகர சபையின் சில உத்தியோகத்தர்களின் மோசடி, ஊழல் நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதாக மனுதாரரான சம்பத் திஸாநாயக்க சார்பில் முன்னிலையான சட்டத்தரணி எம். எம் சுஹைர் நீதிமன்றத்தில் விடயங்களை தெளிவுபடுத்தியபோது குறிப்பிட்டார்.

மாநகர சபையில் காணப்படும் 126 ஆவணங்களை அழிப்பதற்கு நகர ஆணையாளர் அனுமதி வழங்கியதாகவும், அதனைப் பயன்படுத்தி உத்தியோகத்தர்களுக்கு எதிராக காணப்படும் சில ஆவணங்களை எரித்துள்ளதாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி தெரிவித்தார்.

எவ்வாறாயினும், விடயத்தை கேள்வியுற்ற மாநகர சபை உறுப்பினர் ஒருவர் அங்கு சென்று சில ஆவணங்களை மீட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆவணங்களில் மனுதாரரின் ஆவணங்கள் சிலவும் காணப்பட்டதாகவும் நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டப்பட்டது. (எ)

# குளவி கொட்டியதில் 16 பெண்கள் காயம்

கொழும்பு.டிசெ.25

பொகவந்தலாவ எல்பிட மேல் பிரிவு தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த 16 பெண் தொழிலாளர்கள் குளவிகளின் கொட்டுதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணி அளவில் இடம் பெற்றுள்ளது.

இவர்களில் 9 பேர் பொகவந்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதுடன் மிகுதி 7 பேர் சிகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ளதாக பொகவந்தலாவ வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி எ.எஸ்.கே ஜயசூரிய தெரிவித்தார். (எ)


## அமைதியின் சொற்கள்
## Words of Peace

" It all about joy.
This is the one life you have
Get it right
Now
Now is never too early and never too late"

**Contact No : 0117 250001**
**நேரம் :3Pm - 10Pm**


# 57 பட்டதாரிகளுக்கும் கிடைத்தது நியமனம்

*காரைதீவு பிரதேச செயலகத்தில்*



மட்டக்களப்பு.டிசெ.25

காரைதீவு பிரதேச செயலகத்தில் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட 57 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை காலை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் திரு.எஸ். ஜெகராஜன் தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேன, கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரச அதிபர் திரு. கே. விமலநாதன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஜனாப். எஸ். அன்வாடீன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட பிரதித் திட்ட மிடல் பணிப்பாளர் எஸ். விவேகானந்தராஜா. ஜனாப். ஐ. எல். தௌபீக் ஆகியோர் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனச் சான்றிதழ்களை வழங்கினர். (வ)

## கடலுக்குச் செல்லும் நீரை குளத்துக்குத் திருப்ப நடவடிக்கை

திருகோணமலை.டிசெ.25

திருகோணமலை-கோமரங்கட வெல பிரதேசத்தில் உள்ள கல்யாணபுர விவசாயிகளும் சிவில் பாதுகாப்பு திணைக்களமும் ஒன்றிணைந்து பன் குளம் ஆற்றின் ஊடாக கடல் பகுதிக்கு செல்லும் நீரை குளத்துக்கு திருப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

திருகோணமலை- ஹொரவப் பொத்தான பிரதான வீதியில் உள்ள பன்குளம் ஆற்றுப் பகு தியால் செல்லும் நீர் குச்சவெளி கடலுக்கு செல்வதாகவும் தங்களுக்கு விவசாயத்தை மேற்கொள்ள குளத்தில் தண்ணீர் இல்லாமையால் விவசாயிகள் ஒன்றிணைந்து இந்தப் பணி யில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிராம மக்கள் இந்த ஆற்றை மறைப்பதற்கு ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட பைகளை வழங்கி உள்ளதாகவும் இவ்வருடம் மழை பெய்யாததால் குளத்துக்கு தண் ணீர் வரவில்லை என்றும் பிரதான தொழிலாக விவசாயத்தை தொடர்ச்சியாக செய்ய இந்த அணைக்கட்டு போடப்பட்டு வருவதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே மஹிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் இந்த அணைக் கட்டை கொங்றீட் இட்டு செப்பனிடப்பட வேண்டும் என்று விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (வ)

# குரங்குகளால் பாதிப்பா? ஆய்வுக்கு தீர்மானம்

கொழும்பு.டிசெ.25

நாட்டிலுள்ள குரங்குகளால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக் கள் தொடர்பில் ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

குரங்குகளின் பெருக்கம் தற்போது அதிகரித்துள்ளதாக திணைக்கள வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலைமையைத் தடுப்பதற்கு அந்தக் குரங்குகளை காட்டுக்குள் விடுவிப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

குரங்குகளின் இருப்பிடங்கள் மக்களினால் அழிக்கப்படுவதனால், அவை குடியிருப்புகளுக்கு வருகின்றன. இதனால், பொதுமக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ)


## 2014 ஆம் ஆண்டுக்குரிய வரவு - செலவுத்திட்டத்தை பார்வையிடல்

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தினை பிரதேச சபைத் தலைமை அலுவலகம் மற்றும் மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய உப அலுவலகங்களிலும் வலி. தென்மேற்கு பிரதேச செயலகம் சண்டிலிப்பாயிலும் 26.12.2013 தொடக்கம் 01.01.2014 வரை அனைவரும் பார்வையிட்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ளலாம்.

திரு. ச. சிவகுமாரன்
தவிசாளர்
வலி .தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.


## மரண அறிவித்தல்

### கந்தையா தங்கவடிவேல்



அல்லாரையைப் பிறப்பிடமாகவும் மீசாலை தெற்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தங்கவடிவேல் நேற்றுமுன்தினம் (23.12.2013) திங்கட் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வ. கந்தையா மற்றும் சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் அன் புக் கணவரும், நகுலானந்தத்தின் (இத்தாலி) பாசமிகு தந்தை யும், சுயந்தினியின் அன்பு மாமனும், இந்திராணி, காலஞ் சென்ற மல்லிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நவரத்தினம் காலஞ்சென்ற ரதீஸ்வரன் மற்றும் குணமணி, கோமதி, சரஸ்வதி, நாகேஸ்வரி, மயில்வாகனம், தர்மலிங்கம் ஆகியோரின் அன்புமைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2013) புதன் கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்க ள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை தெற்கு, மீசாலை — தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கரத்தினம் தில்லையம்பலம்



யாழ். இணுவிலைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் ஜேர்மனியில் வசித்து வந்தவருமான திருமதி தங்கரத்தினம் தில்லையம்பலம் நேற்று முன்தினம் (23.12.2013) திங்கட் கிழமை ஜேர்மனி காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம் பலத்தின் அன்பு மனைவியும், அகிலாண் டேஸ்வரி, தயாளினி (ஜேர்மனி), குணாளினி (சுவிஸ்), சக்திதாசன் (ஜேர்மனி) அபிராமி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், மனோகரன், சபாரட்ணம் (ஜேர்மனி), வசந்தகுமார் (சுவிஷ்), யோகராணி (ஜேர்மனி), சுகுணானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மனோகரன்- 0777 486991, பண்ணாகம். — தகவல்: அகில (மகள்), மனோகரன் (மருமகன்)

## மரண அறிவித்தல்

### முருகர் மகேசன்

**(ஒய்வு பெற்ற சாரதி, நிலஅளவைத் திணைக்களம் யாழ்ப்பாணம்)**



வரணி வடக்கு வரணியைப் பிறப்பிடமாகவும், வெள்ளாம்போக்கட்டி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் மகேசன் நேற்று (24.12.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகர் - பார்வதி தம்பதியரின் அன்புமகனும் கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் அன்ன பூரணத்தின் அன்புக்கணவரும் கோகிலா (எழுதுநர் -தென்கிழக்கு ப.நோ.கூ.சங்கம்), சகீலா (கனடா), கபிலா ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவகுமாரன், வாசுதேவன், கோகிலன் ஆகியோரின் அன்புமாமனும் பிரதீபா, நதுர்சனா, தர்மிகன், தக்சன், நிகிர்தன் ஆகியோரின் பேரனும் பாலசிங்கம், மகேஸ்வரி, நீலலோசனி ஆகியோரின் அன்புச்சகோதரனும் அருட்சோதி காலஞ்சென்ற வசந்தசோதி, சிவசோதி, மகேந்திரசோதி, உதயசோதி (நியூசிலாந்து) ஆகியோரின் சிறிய தந்தையும் காலஞ்சென்ற மகேஸ்வரி, நாகலிங்கம், பேரம்பலம் (இ.மி.சபை சாவகச்சேரி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2013) புதன்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலாவித் தாழ்வு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளாம்போக்கட்டி
கொடிகாமம் — தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மை செல்லையா



புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வ்திவிடமாக வும் கொண்ட திருமதிவள்ளியம்மை செல்லையா நேற்று (24.12.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதி செல்லையாவின் அன்பு மனைவியும், தர்மலிங்கம் காசிப்பிள்ளை (ஓய்வுநிலை, உதவி அரசாங்க அதிபர்), சிவசுந்தரம், நல்லையா, இலட்சுமி (லண்டன்), கேதுசிகாமணி, சரஸ்வதி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, மற்றும் குலபூபதி (லண்டன்), கனகேஸ்வரன் (லண்டன்), யோகேஸ்வரன் (லண்டன்) ஆகியோ ரின் அன்புத் தாயும், தங்கம்மா, சிவபாக் கியம், பரமேஸ்வரி, புஸ்பராணி, விமலேஸ்வரி, பேரின்பநாயகம் (ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்), தர்மலிங்கம், சிவபாத சுந்தரராசா (லண்டன்), ஜெயலலிதா (லண்டன்), சுதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.12.2013) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் புதுக்குடியிருப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. — தகவல்: குடும்பத்தினர்.

# முதல்வர் வேட்பாளர் ஹர்ஷவா? ரவியா?

## ரணில் நாடு திரும்பியதும் அறிவிக்க ஐ.தே.க. முடிவு

கொழும்பு, டிசெ. 25

ஐ.தே.கவின் மேல்மாகாண முதலமைச்சர் வேட்பாளராக கொழும்பு அரசியலின் முக்கிய புள்ளிகள் சிலரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதால் முதலமைச்சர் வேட்பாளராக எவரை நியமிப்பது என்பது தொடர்பில் கட்சியின் தலைமைத்துவ சபை தீவிர கவனம் செலுத் தத்தொடங்கியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரும், கட்சியின் தேசியத் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, வெளிநாட்டுசுற்றுப்பயணத்தை நிறைவுசெய்து அடுத்தமாதம் நாடு திரும்பியதன் பின்னர் மேல் மாகாண முதல்வர் வேட்பாளர் என்ற உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நடந்து முடிந்த வடமத்திய, மத்திய மாகாணசபைத் தேர்தல்களில் பின்னடைவைச் சந்தித்த பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கிய தேசியக் கட்சிக்கு மேல் மாகாணசபைத் தேர்தல் பலப்பரீட்சை யாகவே அமையும் என்று அரசியல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையில், மேல்மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.க. முடிந்தால் வெற்றிபெற்றுக் காட்டட்டும் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த நாடாளு மன்றில் பகிரங்கமாக சவால் விடுத்தார்.

இவ்வாறான பின்னணியில் மேல் மாகாணத் தேர்தல் வெற்றியை இலக்குவைத்து ஐ.தே.க. காய் நகர்த்தி வருகிறது. கட்சியின் தலைமைத்துவ சபை அதற்கான திட்டங்களை வகுத்துச் செயற்படுகின்றது எனத் தலைமைத்துவ சபையின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

மேல்மாகாணத் தேர்தலில் ஐ.தே.கவின் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்கத் தான் தயார் எனக் கொழும்பு மாவட்ட ரவி கருணநாயக்க அண்மையில் அறிவித் திருந்தார். இந்நிலையில் ஐ.தே.கவின் மேல்மாகாணசபை முதலமைச்சர் வேட்பாளராக கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும், பொருளாதார நிபுணருமான ஹர்ஷ டி.சில்வாவை நியமிக்க வேண்டும் எனக் கட்சியின் தேசியத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 22ஆம் திகதி கொழும்பு மாவட்ட இளைஞர் முன்னணியில் தீர்மானம் நிறைவேற றப்பட்டது.

இதன்போது தலைமைத்துவ சபைத் தலைவர் கரு ஜயசூரிய, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டுள்ளனர்.

மேல்மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக கொழும்பு மாவட்ட ரவி கருணாநாயக்க, தேசியப் பட்டியல் கலாநிதி ஹர்ஷ டி.சில்வா ஆகியோரின் பெயர்கள் இதன்போது பரிந்துரைக் கப்பட்ட நிலையிலேயே ஹர்ஷியை முதல்வர் வேட்பாளராக நியமிக்க வேண்டும் எனக் கொழும்பு மாவட்ட இளைஞர் முன்னணியினர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

எது எவ்வாறிருப்பினும், கட்சியின் மேல்மாகாணசபை முதல்வர் வேட்பாளர் குறித்த இறுதித் தீர்மானம் இது வரையில் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்த தலைமைத்துவ சபைத் தலைவர் கரு ஜயசூரிய, இறுதித் தீர்மானத்தை தலைமைத்துவ சபையே எடுக்கும் என்றும் தெரிவித்தார். அத்துடன், மேல்மாகாண சபைத் தேர்தலுக்காகத் தாம் எதிர்பார்த் ததைவிட கட்சி உறுப்பினர்களிடமிருந்து பெருந்தொகையான விண்ணப் பங்கள் கிடைத்துள்ளன. இந்த விண்ணப்பங்களை கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டத்தரணிகள், ஊழியர் சங்கத்தினர், சிவில் அமைப்பினர், ஊடகத்துறை அமைப்பினர் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய குழு வொன்று பரிசீலித்து வருகின்றது. மேலும் நேர்முகத் தேர்வுகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

# மீனவர்கள் பிரச்சினைக்கு ஜெயலலிதாவே காரணம்

## அமைச்சர் ராஜித குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ 25

இலங்கை - இந்திய மீனவர்கள் தொடர்பான பிரச்சினை மோசமடையத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அண்மைய காலங்களில் முன்னெடுத்திருந்த சில தீர்மானங்கள் தான் காரணம் என்று மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வரின் நடவடிக்கைகள் காரணமாகவே இந்திய மீனவர்கள் உற்சாகமடைந்து இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைவதாகவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இந்த ஆண்டில் மட்டும், இலங்கைக் கடற்படையின் கண்காணிப் பின்படி, 43 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்திருக்கின்றன.

தமிழக முதல்வர் ஜெயலலிதான் இந்தப் பிரச்சனைக்கு கடந்த காலங்களில் அடித்தளமிட்டார். அவர் எடுத்திருந்த சில தீரமானங்கள் காரணமாகத்தான் இந்தப் பிரச்சினை மோசமடைந்திருக்கிறது. இந்திய எல்லைக்குள் மீன்பிடிக்க போகவேண்டாம், அது சட்ட விரோத நடவடிக்கை என்று நாங்கள் எங்கள் மீனவர்களுக்குக் கூறியிருக்கிறோம். ஆனால் அப்படியான அறிவிப்பு தமிழக அரசிடமிருந்து வந்திருக்கவில்லை.

தமிழக முதல்வர் ஒரு பக்கத்தில் தமிழ் மக்களின் உரிமைகள் பற்றிப் பேசுகிறார். ஆனால் மற்ற பக்கத்தில் அவர்களின் மனித உரிமைகளை மீறுவோருக்காகவும் அவர் குரல் கொடுக்கிறார். அதனால் தான் அந்த மீனவர்கள் இலங்கை கடல்பரப்புக்குள் வருவதற்கு உற்சாகம் பெறுகின்றனர் - என்றார்.

தமிழக முதல்வர் அழைப்பு விடுத்தால், மீனவர் பிரச்சினை தொடர்பில் தமிழக முதல்வருடன் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (த)

# வவுனியா வயல்களில் புற்களின் ஆதிக்கம்

வவுனியாவிலுள்ள வயல் வெளிகளில் நெல்லைவிடப் புற்கள் அதிகளவில் காணப்படுவதால் இந்த முறை பெரும் போக நெல் அறுவடையில் வீழ்ச்சி ஏற்படுமென விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் நெல் அறுவடைக்கு முன்பதாகவே கடும் மழை பெய்ததால் அழிவுகள் ஏற்பட்டு விவசாயிகள் நட்டத்தை எதிர்கொண்டனர். இந்த நிலையில் இந்த ஆண்டு குறைந்த அளவில் மழை பெய்ததால் நெற்பயிர்கள் அழிவடைந்து வருவதுடன் புற்கள் வயல்களில் அதிகளவில் காணப்படுகின்றன. இந்தப் புற்களை அழிப்பதற்கும் பெருமளவுகளை நாசினிகள் பயன்படுத்தப்படுவதால் விவசாயிகள் மேலும் நட்டத்தை எதிர்கொண்டு வருகின்றனர். இதேவேளை நெல்லுக்கு மாற்றீடான மாற்றுப் பயிர்கள் பயிரிடுவதற்குத் தேவையான நிதி வசதியும் விவசாயிகளிடம் இல்லை. மேலும் குளங்களுக்கான வடிகால் அமைப்புக்கள் புனரமைக்கப்படாமையால் சிறுபோகப் பயிர்ச் செய்கையும் பாதிப்படையுமென விவசாயிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (க-402)

# நாகை மீனவர்களின் போராட்டம் முடிவுக்கு

## முதல்வரின் உறுதியை அடுத்து

சென்னை,டிசெ 25

நாகையில் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த 3,000 மீனவர்கள், முதலமைச்சரின் உறுதி மொழியை ஏற்று தங்களின் போராட்டத்தை நேற்றுக் கைவிட்டுள்ளனர்.

இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 210 தமிழக மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி நாகை மற்றும் புதுவையைச் சேர்ந்த 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடந்த சனிக்கிழமை முதல் காலவரையற்ற உண்ணா விரதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இந்த நிலையில், மீனவப் பிரதிநிதிகள் சென்னையில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசினர்.

அப்போது முதல்வர், மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக அளித்த உறுதிமொழியை ஏற்று, நேற்றுத் தமது போராட்டத்தைக் கைவிடுவதாக அவர்கள் அறிவித்துள்ளனர். (த)

# துணுக்காய்ப் பிரதேசத்தில் மீள் விதைப்பு நடவடிக்கை

துணுக்காய், டிசெ.25

துணுக்காயில் மீள் விதைப்பு நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மழை இல்லாததால் நெற்பயிர்கள் அழிந்ததால் விவசாயிகள் மீள் விதைப்புக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

குளங்களின் நீர்மட்டம் ஓரளவு அதிகரித்துள்ள நிலையில் இந்த மீள் விதைப்பு இடம்பெற்று வருகின்றது.

அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் மட்டுமே 50 ஏக்கர் வரையான நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன.

ஆனால் மீள் விதைப்புகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் விதை நெல்லைப் பெறுவதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மழை பொய்த்ததால் நெற்பயிர்கள் அழிவடைந்த விவசாயிகளுக்கு அரசு இழப்பீடு வழங்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## செய்தியாளரை

தவராசா, நந்தன் ஆகியோர், ஈ.பி.டி.பியின் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷயனின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யசிந்தனின் நெருங்கிய உறவினர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் கந்தசாமி கமலேந்திரனுக்கு உதவியதாக யசிந்தன் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

செய்தியாளர் கிருஷ்ணகுமாரை தாக்கியவர்கள், 'இனிமேல் செய்தி எழுதினால் உன்னைக் கொலை செய்வோம். நாங்கள் அடித்ததையும் செய்தியாக எழுதிப்போடு' என்று கூறியே தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கைதான மூவரில் ச.செந்தில் நாதன் என்பவர் மாகாண சபைத் தேர்தல் காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாருடன் இணைந்து பணியாற்றியவர் என்று சாட்சிகள் பலர் தெரிவித்தனர்.

தாக்கப்பட்ட செய்தியாளரான கிருஷ்ணகுமாரிடம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைத்து வாக்குமூலம்பெற்ற பொலிஸார், செய்தியுடன் தொடர்புபடுத்தி எந்த வாக்கு மூலமும் எடுக்கமுடியாது என்று அவரிடம் கூறியதாக தெரிவிக்கப்பட்டது. (த)

## சமாதானத்தின்

என்ற உயரிய போதனையில் பிறப்பைக் குறிக்கிறது. இலங்கையில் உள்ள கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாது எல்லோரும் நிலையான சமாதானத்துடன் வாழ வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தனது நத்தார் தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெத்லஹேமில் தொழுவமொன்றில் இடம்பெற்ற இயேசுவின் பிறப்பா னது எளிமையான வாழ்க்கை, எல்லோருக்கும் அன்பு, இயற்கை உட்பட இந்த உலகை எம்முடன் பகிர்ந்து கொள்ளும் எல்லோர் மீதும் அக்கறை என்ற முக்கிய செய்தியைக்கொண்டுவருகிறது.

இதுவே வரலாறு நெடுகிலும் இலட்சக்கணக்கான உள்ளங்களை ஆட்கொண்டதும் இன்று உலகில் மிகப் பெரும் பெறுமானமாக நிலைத்திருப்பது மான பிரபஞ்ச அன்பு. இது எல்லா மக்கள் மத்தியிலும் சமாதானம் என்ற கிறிஸ்தவப் போதனையின் ஆரம்ப மாகும். இந்த நன்நாளில் நத்தார் மணி எழுப்பும் நாத ஓசை சமாதானம், மகிழ்ச்சி, நல்லெண்ணம் என்ற செய் தியை எல்லோருக்கும் கொண்டு வருகி றது.

இலங்கைவாழ் கிறிஸ்தவ மக்கள் கடந்தகால மரபுகளுக்கேற்ப தங்களின் சமய ஸ்தாபகரின் பிறப்பை மகிழ்ச்சியோடு கொண்டாடுவதற்கான சுதந்திரமான சூழலைப் பெற்றுள்ளனர். உங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியும் அமைதியும் நிறைந்த நத்தார் வாழ்த்துகள் - என்றும் ஜனாதிபதி னது நத்தார் வாழ்த்தில் தெரிவித்துள்ளார். (ங-சி)

## தீர்வுக்காக

தொடரில் இலங்கைக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள பல தரப்புகள் எதிர்பார்ப்புடன் இருக்கின்றன. இதன்போது நாடு அபாயத்தில் வீழ்வதைப் பார்த்துக் கொண்டிருக்காமல், அதற்கு முன்னர் அனைவரும் ஒன்றுபட்டு அவதானத்துடன்செயற்படவேண்டும். தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உண்மையான பேச்சுகளை முன்னெடுப்பதற்கு அரசியல் கட்சிபேதங்களைக் கடந்து ஒன்றுபட வேண்டும். அவ்வாறானதொரு நடவடிக்கைக்கு ஆதரவு வழங்க நான் தயா ராகவே உள்ளேன்" - என்றார். (12)

## அரசுடன்

அத்துடன் வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோரை மீளவும் கூட்டி கலந்துரையாடல் நடத்தி அதில் பேச்சுக்குச் செல்வதென்று முடிவெடுக்கப்பட்டால் மாத்திரமே பேச்சுக்களில் கலந்து கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் காலம் நீடிக்கப்பட்டுள்ள போதும், அதில் இணைந்துகொள்வதில்லை என்றும் தெரிவுக்குழுவை நிராகரிப்பதாகவும் இதன்போது முடிவு எட்டப்பட்டுள்ளது. (ங-5-402)

## இரணைமடுத்

னுக்கும் இடையில் கருத்து மோத லும் ஏற்பட்டிருந்தன.

இத்தகைய நிலையில், இரணைமடுக் குடிதண்ணீர் திட்டம் தொடர்பில் ஆராய்வதற்கு வடக்கு முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனால் சுயாதீன நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் இறுதி அறிக்கைக்கு அமைவாகவே வடக்கு மாகாணசபை இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இந்தக் குழு தனது செயற்பாடுகளை முழுவீச்சில் ஆரம்பித்து விட்டதாகவும் தெரிய வருகிறது. (ங-5)

## மாகாணசபை

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்களின் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் நடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் விநோனோதராதலிங்கம் ஆகியோரும் மாகாணசபை உறுப்பினர்களில் கே.சயந்தன், ச.சுகிர்தன், விந்தன் கனகரட்ணம், பிறிமுஸ் சிராய்வா, க.குணசீலன் ஆகியோரும் கலந்து கொள்ளவில்லை.

சுமார் 8 மணிநேரம் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளை ஆக்கிரமித்திருக்கும் இராணுவம் வெளியேற்றப்படுவது தொடர்பிலும், வலி. வடக்கு மற்றும் சம்பூர் மீள்குடியமர்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால், மாகாணசபை நடத்துவதில் ஏற்படுத்தப்படும் நிர்வாகரீதியிலான முட்டுக்கட்டைகள் மற்றும் அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மை தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், "மேற்படி விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அவர் சாதகமாகப் பரிசீலிப்ப தாகக் கூறியுள்ளார். எதிர்வரும் தைப்பொங்கலுக்கு முன்னர் நல்ல முடிவு கிடைக்கும். அவ்வாறு கிடைக்காவிட்டால் வேறு விதமான நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டியிருக்கும்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ங-5-402)

## அரசின்

மையான பாதிப்புக்கள் தொடர்பிலான தகவல்களை கூட்டமைப்பு திரட்டவுள்ளது.

வவுனியாவில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் என்போருக்கிடையே நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக போர்க்கால உயிரிழப்பு மற்றும் சொத்தழிவு தொடர்பில் இலங்கை அரசால் மதிப்பீட்டுப் பணிகள் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கைகளில் போது ஒருவர் கூட மிஞ்சாமல் முற்றாக அழிந்துபோன குடும்பங்கள் குறித்த தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

உண்மையான புள்ளிவிபரங்களை இருட்டடிப்புச் செய்வதற்காகவே அரசு இவ்வாறானதொரு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மேற்படி நடவடிக்கையை நிராகரிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத் தொடருக்கு முன்னதாக மேற்படி தகவல்களை, வடக்கு - கிழக்கில் கூட்டமைப்பே திரட்டுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ங-5)

## மென்பந்து கிரிக்கெட் இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், டிசெ.25
உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்குபற்றும் 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இறுதியாட்டத்தில் உடுவில் கிங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இணுவில் யுத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# நியூட்டன், உடுப்பிட்டி யுத் அணிகள் அபார வெற்றி



யாழ்ப்பாணம், டிசெ.25
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் நேற்று முன்தினம் அல்வாய் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின.
இதில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் நியூட்டன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து டைமன்ஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதிக் கொண்டது.
இதில் நியூட்டன் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் சென்.சேவியர் விளை யாட் டுக் கழக 'பி' அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதிக் கொண்டது.
இதில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக 'ஏ' அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## 9 கோல்களைப் போட்டு அசத்தியது ஞானமுருகன்

யாழ்ப்பாணம், டிசெ.25
சூராவத்தை நியூ வொரியர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கந்தன் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 5 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மின்னொளியில் நியூ வொரியர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

**5 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மின்னொளியில் நியூ வொரியர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.**

அதில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி 9:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## மெய்சிலிர்க்க வைத்த சகீர்கான்



இந்தியா- தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.
இது குறித்து இந்திய அணியின் அணித்தலைவர் டோனி கூறுகையில், இந்த டெஸ்டில் நாங்கள் தோற்று விடுவோம் என்ற நிலை ஏற்பட்டது. இன்னும் சிறப்பாக வீசி இருக்க வேண்டும், எங்களது வேகப் பந்து வீரர்களுக்கு நல்ல அனுபவம் கிடைத்து இருக்கும். இந்திய வீரர்களின் செயல்பாடு எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.
இந்த டெஸ்டுக்காக நாங்கள் தயார் நிலையில் இருந்தோம். ஒருநாள் போட்டியில் விளையாடியதால் ஆடுகளத்தைப் பற்றி நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது. இந்தியாவுக்கு வெளியே 3 வேகப் பந்து வீரர்கள், ஒரு சுழற்பந்து வீரருடன் தான் விளையாடுவோம். இதனால் வேகப்பந்து வீரர்களுக்கு அதிக நெருக்கடி இருக்கும். சகீர்கானின்

**அவரது பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. வேகப்பந்து வீரர்களில் அவர் தான் முன்னிலையில் உள்ளார்.**

அனுபவம் மிகவும் உதவியாக இருந்தது. அவரது பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. வேகப்பந்து வீரர்களில் அவர் தான் முன்னிலையில் உள்ளார். அவரது உடல் தகுதி மெய்சிலிர்க்க வைத்தது. டர்பனில் நடைபெறும் 2ஆவது டெஸ்ட் சாதகமாக அமையும் என்று நம்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.




யாழ்ப்பாணம், டிசெ.25
சூராவத்தை நியூ வொரியர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கந்தன் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் 5 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மின்னொளியில் நியூ வொரியர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
அதில் இன்று புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவிண்டில் விளையாட்டுக் கழக அணி மோதவுள் ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.25
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கீன் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-
பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கருணாகரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.25
யாழ்.மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் வலி.தெற்கு பிரதேச இளைஞர் சம்மேளனம் மின்னொளியில் நடத்தும் இளைஞர் வெற்றிக் கிண்ணத்துக்கான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று புதன்கிழமை இடம்பெறும் அரையிறு தியாட்டத்தில் தையிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## வென்றது அல்- இக்பால்



யாழ்ப்பாணம், டிசெ.25
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அல்-இக்பால் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அம்மன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் அல்-இக்பால் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)




டைமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டு விழா நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்ற மன்னார் பள்ளிமுனை சென்.லூஸியஸ் விளையாட்டுக்கழ அணி வீரர்கள் விருந்தினர்களுடன்.

## இறுதியாட்டம் இன்று



யாழ்ப்பாணம், டிசெ.25
யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று புதன்கிழமை புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# யாழ்.சதுரங்க விழா வியாழனன்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், டிசெ.25
யாழ்.மாவட்டச் சதுரங்கச் சங்கம் நடத்தும் 3 ஆவது யாழ்.சதுரங்க விழா நாளை வியாழக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் ஆரம்பமாகி எதிர்வரும் 31 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.
இதில் 9 வயது, 11 வயது, 13 வயது, 15 வயது, 17 வயது பிரி[illegible] ஆண், பெண் இருபாலாருக்குமான போட்டிகள் இடம்பெறவுள்ளன.
இதில் வயது பிரிவினருக்காக மிதவேக சதுரங்கப் போட்டியும், திறந்த பிரிவுக்கான மின்னல் வேகச் சதுரங்கப் போட்டியும் இடம்பெறவுள்ளன.
போட்டியில் பங்குகொள்ள விரும்பும் போட்டியாளர்கள் ய[illegible] மாவட்டச் சதுரங்க சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டா[illegible]கள் தெரிவித்துள்ளனர். (த-23)



## எட்டு ஓட்டங்களால் தவறிய உலக சாதனை

இந்திய மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் நிறைவு பெற்றுள்ளது.

இந்தப் போட்டி இரு அணிகளுக்கும் வெற்றியைத் தரும் ஒரு போட்டியாக இறுதிவரையில் சுவாரஷ்யமாக இடம்பெற்றது.

458 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, ஒரு தருணத்தில் 197 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்திருந்தது. பின்னர் ஜோடி சேர்ந்த டுபிளசிஸ் மற்றும் ஏ பி டி வில்லியர்ஸ் ஆகியோரின் சதங்களுடன், வெற்றி இலக்கை நோக்கி சென்றது. எனினும் இவர்கள் ஆட்டமிழக்க, போட்டியில் இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 16 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், எட்டு ஓட்டங்கள் பெறப்பட்டன. இறுதிப் பந்தில் டேல்ஸ்ட் டேன் ஆறு ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், இந்த போட்டியில் தென்னாபிரிக்க அணி, 8 ஓட்டங்களால் ஒரு சாதனையை தவறவிட்டது. டெஸ்ட் போட்டி ஒன்றில் இரண்டாவதாக துடுப்பெடுத்தாடி வெற்றி இலக்கை அடைந்த பெருமை மேற்கிந்திய தீவுகள் அணிக்குக் காணப்படுகிறது. ஆஸ்திரேலிய அணியுடனான போட்டியில் 418 ஓட்டங்கள் என்ற இலக்கை இந்த அணி பெற்றது.

இதுவே மிகச்சிறந்த வெற்றி இலக்காகக் கருதப்படுகிறது. எனினும் இந்தியாவுடனான போட்டியில் தென்னாபிரிக்க அணி 450 ஓட்டங்களை பெற்ற போதிலும், 8 ஓட்டங்களால் இந்தச் சாதனையைத் தவற விட்டமை குறிப்பிடத்தக்கது. (த)



## பிலாந்தர் முதலிடம்

சர்வதேச டெஸ்ட் தரவரிசையில் பந்துவீச்சாளர்களுக்கான பிரிவில், தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் பிலாந்தர் முதலிடம் பிடித் துள்ளார்.


டெஸ்ட் அரங்கில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டி யலை சர்வதேசக் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இதில், பந்து வீச்சாளர் கள் வரிசையில், 2009ஆம் ஆண்டு முதல் தரவரிசையில் முதலிடத்தில் இருந்த தென்னாபிரிக்காவின் வேகப் புயல் ஸ்ரெயினைப் பின்னுக்குத் தள்ளி, பிலாந்தர் முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இலங்கையின் முரளிதரனுக்குப் பின், சர்வதேச அளவில் நடைபெற்ற 186 டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து முதலி டத்தில் இருந்து வந்த ஸ்ரெயினுக்கு இது பின்னடைவே.

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் ஸ்ரெயின் 1 இலக்கு மட்டுமே வீழ்த்தினார். இதுவே அவரது சறுக்கலுக்குக் காரணம். ஆனால், பிலாந்தர் இரண்டு இன்னிங்ஸிலும் சேர்த்து 7 இலக்குகள் வீழ்த்தினார்.

முதன் முறையாக பிலாந்தர் முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளார். இதன் மூலம் தரவரிசையில் முதலிடம் பிடித்த ஏழாவது தென்னாபிரிக்க பந்து வீச் சாளர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். (த)



## மோதிக் கொண்ட கோஹ்லி- ஸ்மித்

இந்தியா- தென்னாபிரிக்காவுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி சமநிலை ஆனது மோதிக் கொண்டனர். முதல் இன்னிங்சில் 119 ஓட்டங்களும், 2 ஆவது இன்னிங்சில் 96 ஓட்டங்களும் எடுத்த விராட் கோஹ்லி ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் கூறுகையில், தென்னாபிரிக்காவுக்கு ஒரு கட்டத்தில் வெற்றி வாய்ப்பு இருந்தது. ஆனால் வெற்றிக்காகப் போராடாமல் முன் எச்சரிக்கையுடன் பாதுகாப்பான ஆட்டத்தில் ஈடுபட்டனர், தென்னாபிரிக்காவின் இந்த ஆட்டம் ஆச்சரியம் அளித்தது. பரபரப்பான இந்த டெஸ்ட் சமநிலை ஆனது நல்ல முடிவு தான் என்று தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய தென்னா பிரிக்க அணியின் அணித்தலைவர் ஸ்மித், தென்னாபிரிக்கா பாதுகாப்பான ஆட்டத்தில் ஈடு பட்டது என்று கோஹ்லி ஆச்சரியமாகச் சொல்கிறார். ஆனால் என்னைப் பொறுத்த வரை இந்திய அணி தான் கடைசி நேரத்தில் சமநிலை செய்யும் வகையில் ஆடியது. கடைசி இலக்குகளைக் கைப்பற்றும் வகையில் வியூகம் அமைக்காமல், ஓட்டங்கள் எடுக்கவிடாமல் வியூகம் அமைத்து இருந்தது.

> *இதற்குப் பதிலளித்துப் பேசிய தென்னா பிரிக்க அணியின் அணித்தலைவர் ஸ்மித், தென்னாபிரிக்கா பாதுகாப்பான ஆட்டத்தில் ஈடுபட்டது என்று கோஹ்லி ஆச்சரியமாகச் சொல்கிறார் - என்றார்*

கடைசி 3 பந்துப்பரிமாற்றத்தில் ஸ்ரெய்ன்- பிலாந்தர் ஓட்டங்கள் எடுக்காமல் ஆடியது சரியான முடிவுதான். கடைசி 4 நாள்களும் இந்திய அணியின் செயற்பாடு சிறப்பாக இருந்தது.

இக்கட்டான நேரத்தில் டுபெலிசிஸ், டிவில் லியர்ஸ் சதம் அடித்தனர். 458 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயித்தும் வெற்றி பெற முடியாமல் போனதால் டோனி மிகுந்த ஏமாற்றம் அடைந்து இருப்பார். இந்த டெஸ்ட் சமநிலை ஆனது எங்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சி தான் என்று தெரிவித்துள்ளார். (த)

### பாகிஸ்தான் வீரர்

## அஹமட், டில்ஷானுடன் வாய்த்தர்க்கம்



பாகிஸ்தான் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அஹமட் ஷேஷாட் டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள் ளது.

சார்ஜாவில் நடைபெற்ற இலங்கை அணிக்கெதிரான போட்டியின் போது திலகரத்ன டில்ஷானை தள்ளிவிட்ட சம்பவம் தொடர்பில் போட்டிக் கட்டணத்தில் 50 வீத அபராதம் அவருக்கு விதிக்கப்பட்டுள்ளது. சர்வதேச கிரிக்கெட் போட்டி விதிமுறைகளை மீறியமை தொடர்பில் அஹ மட் ஷேஷாட் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார்.

வெற்றியிலக்கை நோக்கி இலங்கை அணி துடுப்பெடுத்தாடிய போது 19 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் டில்ஷானுக்கும் ஷேஷாட்டுக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டிருந்தது. இதன்போது டில்ஷானை அஹமட் ஷேஷாட் தள்ளிவிட்டிருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது. (த)

# பாகிஸ்தானுக்கெதிரான இலங்கை டெஸ்ட் அணி

ஐக்கிய அரபு இராச்சியத்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்டடெஸ்ட்தொடரில்பங்குபற்றவுள்ளஇலங்கை டெஸ்ட் குழாம் அறிவிக்கப்பட் டுள்ளது.

அஞ்சலோ மத்தியூஸ் தலைமையில் 16 பேர் கொண்ட குழாமாக இக்குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள குழாமில் 2012



ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிரசன்ன ஜெயவர்த்தன முதன்முறையாகச் சேர்க்கப்பட்டுள்ளார். துடுப்பாட்டத்தில் போதுமான திறமையை வெளிப்படுத்தாததன் காரணமாக அவர் அண்மைக்காலத்தில் சேர்க்கப்படாத போதிலும், அண்மைக்காலத்தில் உள்ளூர்ப் போட்டிகளில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியதன் காரணமாக இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தவிர, சுழற்பந்து வீச்சாளரான சச்சித்திர சேனநாயக்க, சகலதுறை வீரரான டில்ருவான் பெரேரா, வேகப்பந்து வீச்சாளரான விஷ்வா பெர்ணான்டோ ஆகியோர் இதுவரை டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றாத வீரர்களாக இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளனர். அண்மையில் ஓய்வு பெற்ற திலகரட்ண டில்ஷானுக்குப் பதிலாக இலக்குக் காப்பாளரான கௌஷால் சில்வா இக்குழாமில் இணைக்கப்பட்டுள்ளார். டிசெம்பர் 31ஆம் திகதி அபுதாபியில் ஆரம்பிக்கவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டியுடன் இந்தத் தொடர் ஆரம்பிக்கவுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்


அஞ்சலோ மத்தியூஸ், டினேஷ் சந்திமால், குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, கௌஷால் சில்வா, திமுத் கருணாரத்ன, லஹிரு திரிமன்ன, பிரசன்ன ஜெயவர்தன, நுவான் குலசேகர, சுரங்க லக்மால், ஷமிண்ட எராங்க, நுவான் பிரதீப், சச்சித்திர சேனநாயக்க, ரங்கன ஹேரத், டில்ருவான் பெரேரா, விஷ்வா பெர்னாண்டோ. (த)

**A/L 2016**
பௌதீகவியல் (நவீன முறையில்)
By. M. கருணாநிதி B.Sc (Spl)
(077 6183064)
30.12.2013 திங்கள்
Mind Vision Technology Campus
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**German institute**
German Swissமொழிகள், தமிழ் மொழி பெயர்ப்புடன் Goethe Institute exam இற்கு ஏற்றவாறு நடைபெறுகிறது. அடுத்த புதிய வகுப்புகள் 03.01.2014 அன்று ஆரம்பம்.
தொடர்பு: 077 160 4823
Priyanthan Kajenthini,
No.10, Palaly Road Jaffna ஆரியகுளத்தடி.

**Diploma in Mobile Phone Repairing**
சகல வகையான கைத்தொலைபேசிகளையும் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி
முல்லைத்தீவு, நெல்லியடி, மானிப்பாய் ஆகிய இடங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளதால் இக் கற்கைநெறியில் இணைய விரும்பும் மாணவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். முடிவில் அரச சான்றிதழ் வழங்கப்படும். (காலம் - 2 மாதங்கள்)
இன்றுவரை என்னிடம் 2000 மேற்பட்ட மாணவர்கள் கற்றுவெளியேறி உள்ளதுடன் உரிய தொழில் வாய்ப்பையும் பெற்றுள்ளனர். பிரிவு 01ஆரம்பமாகி 20 மாணவர்கள் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.
மேலதிகவிபரங்களுக்கு :- 0777 110 862
Https://www.facebook.com/selvajaffnamobile.repairthas

# இங்கிலாந்து அணியில் இரண்டு புதுமுகங்கள்



இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் கிறேம் சுவான் ஓய்வு பெற்றுள்ளதையடுத்து, இடம்பெற்றுவரும் ஆஷஸ் தொடரின் இறுதி 2 போட்டிகளுக்குமான குழாமில் இரண்டு சுழற்பந்து வீச்சாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி முதல் 3 டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியடைந்து ஆஷஸ் தொடரை இழந்துள்ள நிலையில், நேற்று முன் தினம் கிறேம் சுவான் தனது ஓய்வினை அறிவித்திருந்தார். சர்வதேசப் போட்டிகளிலிருந்தும், முதற்தரப் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அவர் அறிவித்திருந்தார்.

34 வயதான கிறேம் ஸ்வானுக்கு நீண்ட காலமாகக் காணப்பட்டு வந்த முழங்கை உபாதை காரணமாக அவரால் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்த முடியவில்லை என்ற உணர்வு ஏற்பட்டதன் காரணமாகவும், தொடர் தோல்வியடைந்துள்ள நிலையில், புதிய வீரர் ஒருவருக்கு வாய்ப்பினை வழங்கும் முகமாகவும் தொடரில் நடுவே ஓய்வு பெறுவதாக அவர் அறிவித்தார்.

இந்நிலையில், அடுத்த 2 போட்டிகளுக்குமான குழாமில் ஸ்கொட் போர்த்விக், ஜேம்ஸ் ட்ரெட்வெல் இருவரும் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் ஸ்கொட் போர்த்விக் புறச்சுழல் பந்துவீச் சாளர் என்பதோடு, துடுப்பாட்டத் திறமையை யும் கொண்டவர் என்பதுடன், அவர் டிசெம்பர் 26ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள 4ஆவது போட்டியில் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பையும் கொண்டுள்ளார். ஜேம்ஸ் ட்ரெட்வெல் அண்மைக்காலமாக இங்கிலாந்து ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றி வந்த வீரர் என்பதோடு, அவர் நான்காவது போட்டியின் போதே இங்கிலாந்து அணியில் இணைந்து கொள்வார் என்பதால், ஐந்தாவது போட்டிக்கான தெரிவுக்கே வாய்ப்புக்களைக் கொண்டுள்ளார். (த)

**FALC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH**
**FRENCH CLASSES**
French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Belgium, Swiss திருமணம் முடித்து செல்வோர், வேலை தேடுவோர் இலகுவாக பெறலாம்.
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007)
இது வரைக்கும் 750 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்..
கடந்த International French Diploma exam இல் வடமாகாணத்தில் எமது மாணவர்கள் மட்டுமே சித்தி.....
Deutsch & Sinhala Classes உம் நடை பெறுகிறது...
No. 40, Palaly Road, ஆரியகுளம். | No.181, 1st Floor, Main Street, Nelliady. | 0779 789 456

**NEW SCIENCE WORLD**
VICTORY MUST
Navalar road junction, Brown road, Jaffna.
Web : www.physicsocean.com Email : info@physicsocean.com

**2016 A/L SCIENCE**
ஆரம்பம்
28.12.2013
7.30 A.M
பௌதீகவியல்
திரு. R. குமரன்
திரு. R. குகன்
இரசாயனவியல்
திரு. டயஸ்
Tamil & English Medium
திரு. T. சிவகுமார்
உயிரியல்
திரு. S. பொன்திவாகரன்
திரு. V. உமாசங்கர்


**PHYSICS 2015 A/L R.KUMARAN M.SC**
**மாதாந்த தொடர் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள்**

NEW SCIENCE WORLD

| FULL NAME | SCHOOL | MARK | RANK |
|---|---|---|---|
| PARAMANAYAKAM VARATHEEPAN | ST. JC | 88 | 1 |
| SIVAKUMARAN SARUKRKGANAN | J/H.C | 86 | 2 |
| RATHNESWARAN SIVESWARAN | J/H.C | 84 | 3 |
| SRITHAS THANUSAN | J/K H.C | 82 | 4 |
| THIRUVARANKAN VENURAJH | J/V.C | 82 | 4 |
| SIVANESAN NAVANEETHA | J/V.G.H.S | 80 | 6 |
| JNANUYA THIRUCHCHELVAM | J/V.G.H.S | 80 | 6 |
| NAVARADNARAJAH SUTHARSAN | J/H.C | 80 | 6 |
| REGITHA MANOKARAN | J.C | 78 | 9 |
| LAXSIYA PREMANANTHAN | J/C.H.C | 78 | 9 |
| SUJANIE KUMARAMOORTHI | J/V.G.H.S | 78 | 9 |
| SANTHIRAKUMAR KAYAN | J/H.C | 78 | 9 |
| JEYAKUMAR JOHNY JENARTHAN | ST J.C | 78 | 9 |
| KANAKARAJH SATHURSAN | J/K.H.C | 78 | 9 |
| KARTHIKAGINI VARKULARAJAH | J/V.G.H.S | 76 | 15 |
| RASARATHNAM SUTHARSAN | J/H.C | 76 | 15 |
| ROBERTDEAN OSBERT | ST J.C | 76 | 15 |
| RASTHURAI SIVARAM | J/V.C | 76 | 15 |
| RAYAKOPALASARMA JEYARAMAN | J.H.C | 76 | 15 |
| SATHANANTHAN SABESAN | J/H.C | 74 | 20 |
| KUKANATHAN PIRIYATHARSAN | J/ H.C | 72 | 21 |
| VIYAYAPASKARAN VIYAYATHARAN | J/A.C | 72 | 21 |
| SIVARASA LAVANARAJ | J/ H.C | 72 | 21 |
| JEYAPALASINGAM INKARAN | J/ H.C | 72 | 21 |
| THIYAKARASA NIROSAN | J/H.C | 72 | 21 |
| THAYAPARAN NINUYAN | J/H.C | 72 | 21 |
| THANKAVADIVEL SOBITHAN | J/ H.C | 72 | 21 |
| DIJEERTHANA JEYANANTHARAJH | J/H.L.C | 70 | 28 |
| ANANTHARAJA RAGATHEEPAN | ST J.C | 70 | 28 |
| KANNANATHAN PIRANAVAN | J/ H.C | 70 | 28 |
| VITHTHIJA SIVASANKARANATHAN | J/V.G.H.S | 70 | 28 |
| SUKIRTHA SIVASUPRAMANIYAM | J/V.G.H.S | 70 | 28 |
| PANSALINGAM THINESAN | J/H.C | 70 | 28 |
| PASILVIJAYARANJAN STEEPAN | J/C.C | 70 | 28 |
| RAJAKULASINGAM USHANTHAN | J/C.H.C | 70 | 28 |
| THARMALINKAM NARTHANAN | J/C.H.C | 70 | 28 |
| SIVAPATHASUNTHARAM KAJANAN | J/C.H.C | 70 | 28 |
| KIRISNANTHALINKAM THARMIKAN | J/C.H.C | 70 | 28 |
| SARMILA PARAMESHWARAN | J/M.H.C | 68 | 39 |
| THNUSIYA MAKENDRAM | J/V.G.H.S | 68 | 39 |
| RAVILOYAN HISHO | J/H.C | 68 | 39 |
| PIRAPAKARAN PIRAVINTH | JC | 68 | 39 |
| SATKUNARASA KAJANTHAN | J/ H.C | 68 | 39 |
| THANKAVEL VIBESAN | ST J.C | 68 | 39 |
| THANUSIYA KARUNAKARAN | J/V.G.H.S | 68 | 39 |
| THEVAKARAN LUXMAN | J/ H.C | 68 | 39 |
| MAHALINGAM MATHUSANTH | J/H.C | 68 | 39 |
| KANAKARAH VIMOSAN | J/C.H.C | 68 | 39 |
| SUVASTHIKA PUVANENTHIRARAYA | J/V.G.H.S | 68 | 39 |
| VISHNUYA SANTHARUPAN | J/V.G.H.S | 68 | 39 |
| SANMUKASUNTHARAM ANMEKAN | J/C.H.C | 68 | 39 |
| THAVAPIRAKASAM PIRAKASH | J/C.H.C | 68 | 39 |
| SIRUSDIKA RAVEENDRAN | J/C.H.C | 68 | 39 |
| ANCHALA SIVASUPRAMANIYAM | J/V.G.H.S | 66 | 54 |
| VAISHNAVI KANAKASAPAI | J/V.G.H.S | 66 | 54 |
| SRINAKASAJINI SOORIYAKUMAR | J/V.G.H.S | 66 | 54 |
| SREEKARAN ENIYAVAN | ST J.C | 66 | 54 |
| PAVITHRA MURUKANANTHSARMA | J/V.G.H.S | 66 | 54 |
| SRIRANKANATHAN ARAVINTHAN | J/H.L.C | 66 | 54 |
| NAVALAGINI THIRUSELVAM | J/C.H.C | 66 | 54 |
| RAYAMANOKARI RAYALINGAM | J/C.H.C | 66 | 54 |
| JUNAITHEN MUHAMAD NAJIHEEN | T/K.C.C | 66 | 54 |
| SIVARASA SANJAKUMAR | J/K.H.C | 66 | 54 |
| PUSPARASA KAYAMUKAN | J/H.C | 66 | 54 |
| ANANTHAMOORTHI HARIJEYAN | J/H.C | 66 | 54 |
| JEYACHANDRAN MAJURAN | J/M.C | 66 | 54 |
| SUPAKARAN HARIVARTHAN | J/H.C | 66 | 54 |
| SIVABALASUPRAMANIYAM ARUNRAM | J/H.C | 66 | 54 |
| PANNEERSELVSM DILAKSANA | J/V.C | 66 | 54 |
| AJITHTHA THAVATHURAI | J/C.H.C | 64 | 70 |
| INTHIRAMOHAN KUYILINIYAN | ST J.C | 64 | 70 |
| ABDEEN HAMMAHEY MUHAMMEDH | A/K.M.C.C.A | 64 | 70 |
| SRIRAMACHANTHIRAN LAYAPRATHEEPAN | J/K.H.C | 64 | 70 |
| SRIUTHAYAMOHAN MERUJON | J/A.C | 64 | 70 |
| JOTHINI THIRUNAVUKKARASU | C.G.C | 64 | 70 |
| SULAXSANA MURUGADAS | J/V.G.H.S | 64 | 70 |
| SRITHARAN NIROJITHAN | J/H.C | 64 | 70 |
| VISHNUGA KIRUBAKARAN | J/M.C | 64 | 70 |
| MURUGATHAS MAYOORAN | J/C.H.C | 62 | 79 |
| NAMASIVAJASAJON KANARUPAN | J/C.H.C | 62 | 79 |
| PUVITHARAN PRASHATHAN | J/C.H.C | 62 | 79 |
| THANESWARAN NIJANTHAN | J/P.S.S.H.C | 62 | 79 |
| ARTHY VISAKALINGAM | J/C.H.C | 62 | 79 |
| EDWIN DONALDSON | ST P.C | 62 | 79 |
| KOSIKA RAGUNATHAN | J/V.G.H.S | 62 | 79 |
| SHAGITHTHIYA SELVARAJAH | J/V.G.H.S | 62 | 79 |
| SIVASOTHY MAYARAN | J/M.H.C | 62 | 79 |
| BALCHANDRA THINESH | J/U.C | 62 | 79 |
| ARUNAKIRINATHAN KANUSHAN | ST J.C | 62 | 79 |
| SATHAYATHAS RAVIVARMAN | J/P.S.S.H.C | 62 | 79 |
| R.ERTHAN | J/H.C | 62 | 79 |
| THARMALINKAM ANEEKARAN | KN/C.C | 62 | 79 |
| THIRUNAVUKKARASU ANOJAN | J/V.C | 62 | 79 |
| MATHANGI SIVANANTHAN | J/V.G.H.S | 62 | 79 |
| ARUMUKAM AINKARAN | J/C.H.C | 60 | 95 |
| A.LAVANYAN | J/C.H.C | 60 | 95 |
| SIVASUBRAMANIYAM THIRUKKUMARAN | J/C.H.C | 60 | 95 |
| NALLAIH KALISTAN | D/D.C | 60 | 95 |
| NAVARATNAM SUTHANS PREMARUBAN | ST P.C | 60 | 95 |
| KRISHNANANTHA KEERTHANAN | J/H.C | 60 | 95 |
| GANESALINGAM THARSHIGAN | J/H.C | 60 | 95 |
| SRIBALAN THEVATHARSAN | ST P.C | 60 | 95 |
| YALINI KAILAYAPATHY | J/V.G.H.S | 60 | 95 |
| J.JOHNFORY | ST A.C | 60 | 95 |
| THEVARAJAH THENUSHAN | ST P.C | 60 | 95 |
| P.KAJAVATHANI | J/V.G.H.S | 60 | 95 |
| SUHENTHIRAN ANUJAN | J/H.C | 60 | 95 |
| PIRAPUDATHEVAN PIRASHANTH | J/V.H.C | 60 | 95 |
| KARTHIGESU KOWSIKAN | ST J.C | 60 | 95 |
| RAVINDRAN KOBISHANTH | J/H.C | 60 | 95 |
| SELVARATNAM SUJEEPAN | J/K.H.C | 60 | 95 |

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மிருசுவில்
தமிழ்தாசன்



# கேளுங்கள் தரப்படும்

"இதெல்லாம் ! ஆர் தந்தது?" "எண் டைக் குமே அறிமுகமில் லாத ஒரு தாத்தா கொண்டு வந்து தந்திட்டு மறைஞ் சிட்டார். அவர் போன வழியே தெரிய யில்லை"

டேய் ! விக்டர் ! இந்தா ! இந்தக் கயித்தை எடுத்து ஒவ்வொரு மூலைக்கும் ஒவ்வொரு கட்டுப்போடு. குறுக்குத் தடியளை நான் கட்டுறன்". பிறக்க விருக்கும் பாலன் பிறப்பைக் கொண் டாடு வதற்காக அன்ரனுடன் தம்பி விக் டரும் இணைந்து உற் சாக மாகத் தங்களின் வீட்டிலே பாலன் கொட்டில் அமைத்துக் கொண்டிருந்தனர். பக்கத்து ஊருக் குச் சென்று சவுக்க மரங்களை வெட்டிக் கொய்து கொண்டு வந்து வீட்டை அழகாக அலங்கரித்துப் பாலன் கொட்டில் அமைத்து அதற் கான சோடனைகள். அலங்காரங் கள் செய்து கலர் கலராக மின்குமிழ் கள் பொருத்தி... அப்பப்பா ! ஏரா ளமான முயற்சிகளைக் கொண்டே அந்தக் கொட்டில் அழகாக உரு வாகத் தொடங்கியது. மறுபுறத்தில் தாய் திரேசம்மாவும் மகள் ரீட்டாவும் பலகாரச் சூட்டில் தங்களை மும்மு ரமாக ஈடுபடுத்திக் கொண்டி ருந்தனர். அமலனும் தங்கை றெசிந்தாவும் பட்டாசுகளையும் வாணங்களையும் கொளுத்தி மகிழ்ந்து கொண்டிருந்தனர். பக் கத்து வீட்டு வேலியோரத்தில் ஒளிந்து நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் மருசலின். பல காரங்களின் வாசனை மூக்கைத் துளைக்க அவனையுமறியாமல் வாயில் நீரூறியது. வாயைச் சப்புக் கொட்டியபடி தம்பி தங்கைகளையும் அழைத்து அவர்கட்கும் தான் பார்த் துக் கொண்டிருக்கும் வேடிக்கை களைக் காண்பித்து மகிழ்ந்தான்.

மருசலினுக்கு இப்போது வயது பத்து. அவனுடைய வாழ்நாளில் அறிவு தெரிந்த நாளிலிருந்து நத்தார்ப் பண்டிகையையோ, புது வருடத்தையோ அல்லது உயிர்த்த ஞாயிறையோ அவன் அனுபவித் ததே கிடையாது.

"கவலைப்படாதை மோனை ! இந்த முறை போனால் போகட்டும். அடுத்த வருச நத்தாருக்கெண்டா லும் குஞ்சுகளுக்கு புதுச்சட்டையெல் லாம் வாங்கிப் பலகாரம் சுட்டு மற் றப் பிள்ளையள் மாதிரி உங்களை யும் கோயிலுக்கு அனுப்புவன்- ஆண்டவர் யேசப்பா எப்பிடியும் அருள் புரிவர். கவலைப்படா தேங்கோ பிள்ளையள்".

நினைவு தெரிந்த நாள் முதல் இப் படியே ஆறுதலும் தேறுதலுமாகக் காலங்கள் ஓடியோடி இப்போது பத்து வயதையும் பூர்த்தி செய்து விட்டான். மருசலின் " பாலன். பஞ் சம். பத்து வயது. " இந்த வயதில் ஓரள வுக்குப் புத்தி பிறக்க வேண் டும். மருசலினும் அது வேண்டும் இது வேண்டுமென்று இப்போதெல் லாம் அடம்பிடிப்பதில்லை. குடும் பத்தின் கஷ்ட நிலைமை புரிந்ததே காரணம்.

சவுரிமுத்துவுக்கும் ஞான மலருக் கும் பிறந்த பிள்ளைகளில் மூத்த வன் தான் மருசலின். அடுத்து அலெக்ஸ், ரெஜினா, ஜெனி என்று ஒரு தம்பியு டன் இரு தங்கைகள்! எல்லாமே சின்னஞ் சிறிசுகள். சவுரிமுத்து குடித் தனத்தை மறந்து குடியிலேயே மூழ்கிப் போயிருந்தான். ஆரம்பத் தில் கொஞ்சமாக மதுவை அருந்திய வன், காலப் போக்கில் மிகப் பயங்கர மான குடிகாரனாகிவிட்டான்.

மனைவி ஞானமலரின் உடலில் அவனடித்த காயங்கள் ஒன்றா இரண்டா! யாருடைய புத்திமதி களையும் கேட்காத சவுரிமுத்து கோயிலுக்குப் போவதில்லை. பூசை ஆராதனைகளில் கலந்து கொள்வ தில்லை. பங்குக் குருவின் வார்த் தைகளுக்கு மதிப்பளிப்பதில்லை. மொத்தத்தில் கிறிஸ்தவனல்லாத ஒருவனாக கிறிஸ்துவின் அருட் கொள்கைளுக்கு முரணானவ னாகவேயிருந்தான்.

எத்தனையோ கெட்டவர்களையும், துட்டர்களையும் தனது அருட் பிரசங் கத்தாலும் ஆன்மிக வலிமையினா லும் திருந்தச் செய்தவர்தான் ஃபாதர் நீக்கிலஸ். அப்படிப்பட்ட அருட் தந்தையினால் கூட சவுரி முத்து என்னும் இந்த பாவியை நல்வழிப்படுத்த முடியாமலிருந்தது உண்மையிலேயே துர்அதிஷ்ட மானதே !

பக்கத்துப் பாவுலுப் பிள்ளையர் வீட்டில் டமார் டமார் எனப் பட்டாசு கள் முழங்கின. மருசலின் ஆர் வத்துடன் பார்த்து ரசித்துக் கொண்டி ருந்தான். என்ன நினைத்தானோ! அவனுடைய தம்பி அலெக்ஸ் ! "டோம் ! சடப்புடடோம் !" தனது இயலாமையின் வெளிப்பாடாகவும் வெடிக்கும் வெடியோசைக்குப் போட்டியாகவும் வாயினால் வெடித் துத் தன்னைத் திருப்திப்படுத்திக் கொண்டான். மருசலினின் கண்கள் பனித்தன. தம்பியை வாஞ்சை யுடன் கட்டியணைத்துக் கொண்டான்.

"என்னடி பெரிய கிறிஸ்மஸ் ! இப்ப கிறிஸ்மஸ் கொண்டாட்டில் என்ன குறையப் போகுது ! அவன் ஆரேன் காசு பணமுள்ளவன் கொண்டா டட்டுமன். நீ ஏன் இதுக்கெல்லாம் ஆசைப்படுறாய். பொத்தடி வாயை!"

கடந்த வருடத்து நத்தாருக்கும் இதே வார்த்தைகளைச் சொல்லி தன் கணவன், தன்னையும் பிள்ளை களையும் அடக்கியதை நினைத்துப் பார்த்தாள் ஞானமலர். விழிகள் ஈரமாகிக் கொண்டன. "ஆண்ட வரே! இயேசுவே !" என்று சொல்லியபடி வீட்டுத் திண்ணையிலே துணியை விரித்து விட்டு ஒருக்களித்துப் படுத்திருந்தாள்.

இந்த வாரம் முழுவ துமே எந்தவிதமான கூலி வேலை களும் அகப் படவில்லை. மிகவும் கஷ்டத்திலும், கவலையிலும் உழன் றான் சவுரிமுத்து. ஊரிலே பாவுலுப்பிள் ளையர், பத்தி நாதர், பிலிப்பையர் என்று கல்வி, பணம், செல்வாக்கில் கொடிகட்டிப் பறந்த

ஆனானப்பட்ட புள்ளிகளா லேயே செய்ய முடியாத ஒரு நல்ல விடயத்தைச் சாதாரணமான ஒரு தேவதாசன் மாஸ்டரினால் செய்ய முடிந்தது அந்த ஊருக்கே ஆச்சரி யமாயிருந்தது.

சவுரிமுத்து இப்போதெல்லாம் மது வைத் தொடுவதே கிடையாது. ஞாயிறு விடிந்தால் அந்தோனியார் தேவா லயம். குருவானவருக்கு வேண்டிய அத்தனை பணிகளையும் தனியொ ருவனாக நின்று செய்து முடிப்பான். பூசை தொடங்கியதும் வரவேற்புப் பாடலுடன் ஏற்கெனவே தயாராக வைத்திருந்த வாசகங்களை பைபிளி லிருந்து வாசிப்பான். முழந் தாளிட்டு ஆண்டவர் இயேசுவை மன்றாடி மனமுருகச் செபிப்பான். ஞாயிறல் லாத தினங்களிலும் ஓய்வு கிடைக் கும் வேளைகளில் மறைத் தொண்டிலே தனது நேரத் தைச் செலவிட் டான். மொத் தத்தில் சவுரிமுத்து இப்போது தேவதாசன் மாஸ்ரரினால் புடம் போட்டுக் கிறிஸ்தவ சமூகத்துக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பத்தரை மாற்றுத் தங்கம் , சாக்கடைக்குள் வீழ்ந்து கிடந்த ஒரு சாமான்யன் இன்று கிறிஸ்தவச் சான்றோர்களால் வெகுவாக மதிக்கப்படும் உயர்வான மனிதனாகிவிட்டான். ஏன் ! புனிதன் என்று கூடச் சொல்லலாம்.

"ஆண்டவரே ! இயேசுவே ! இந்த முறையென்றாலும் கிடைக்கிற உழைப்பிலை என்ரை மனிசிக்கும், குஞ்சுகள் நாலுக்கும் புது உடுப்பு வாங்கிக் குடுத்து வாய்க்கு ருசியாய்ப் பலகாரம் செய்து குடுத்துச் சந்தோஷமாய் இந்த நத்தாரைக் கொண்டாடலாமெண்டால்...! ஒரு கிழமையாய் ஒரு சதத்துக்கும் உழைப்பேயில்லையே !"



நத்தார் சிறப்பிதழ்

மனம் வருந்தினான் சவுரிமுத்து. சந்தையிலிருந்து சைக்கிளில் வந்து கொண்டிருந்த பேதுறுப் பிள்ளை யர் சவுரிமுத்துவைக் கண்டவுடன் 'சடன்' பிரேக் போட்டு சைக்கிளை விட்டுப் புன்முறுவலுடன் இறங்கினார்.

"என்னடா மோனை சவுரிமுத்து ! எப்படிச் சுகமாயிருக்கிறியே ! விடிஞ்சால் நத்தார். எப்படிக் கொண் டாட்டங்கள் எல்லாம் போகுது".

ஏதோ ஒரு சம்பிரதாயத்துக்காகப் பேச்சைத் தொடங்கினார். முன் பெல்லாம் சவுரிமுத்துவை ஒரு மனிதனாக மட்டுமல்ல பொருட் டாகவே மதிக்காத வர் இன்று இத் தனை மரியாதையுடன் அள வளாவியது சவுரி முத்துவுக்கு உள்ளூர மகிழ்ச் சியாயிருந்தது. மனதுக் குள் ஆண்டவருக்கு நன்றி சொல்லிப் 'பிதாச் சுதன்' போட்டுக் கொண்டான்.

எப்படியாவது நாளைக்கு நத்தார் கொண்டாடியே ஆக வேண்டு மென்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தான். யாரிடமா வது கடன் வாங் கியாவது ..! அதற்கு மனம் இடம் கொடுக்க வில்லை. மூளை யைக் குழப்பிச் சிந்தனை களைச் சிதறவிட்டும் நடந் தது எதுவுமில்லை. மாலைப் பொழுது மங்கி இருள் சூழ்ந்து கொள்கின்றது.

எங்கேயோ ஆடல்பாட்ல்கள் ! மத்தள வாத்தியங்கள், சிறுவர் சிறுமியர், வயது வந்தோர் புடைசூழ நத்தார் தாத்தா ! ஆமாம் 'கரோல்' ! கண்ணன் பிறந்தான் எங்கள் கண்ணன் பிறந்தான் என்னும் பழைய எம்.ஜி.ஆர். பாடலின் மெட் டில் பாலன் பிறந்தான் யேசு பாலன் பிறந்தான் என்று தேவனின் புகழ்பாடிப் பாடிய பாடல்கள் காற் றிலே கலந்து தெய்வீகக் களையைப் பரப்பிக் கொண்டிருந்தன.

"இந்த முறை சுவாம்பிள்ளை யற்றை மருமோன் தான் நத்தார் தாத்தா போலை ! உவன் மனித னும் ஒரு காலத்திலை என்னைப் போல ஒரே குடியும் கும்மாளமுமா யிருந்தவன். இண்டைக்குத் திருந்தி வந்து நல்ல வசதியளோடை நல் லாயிருக்கிறான். என்னைத் தான் ஆண்டவர் நல்லாய்ச் சோதிக்கிறார். ஃபாதரிட்டைப் பாவ மன்னிப்பு எண்டு 'கொம்பிசம்' எடுத்தான். மன் னிப்புக் கேட்டால் பாவங்கள் தீரு மெண்டார். தன்னிடத்திலை விசு வாசமாயிருக்கச் சொன்னார். எல் லாம் செய்தும்... ! ஆண்டவரே ! யேசுவே !"

கண்கள் கலங்கிய நிலையில் நீண்ட பெரும் விரக்தியுடன் வெறுங் கைகளுடன் வீட்டுக்குள் நுழைந் தான் சவுரிமுத்து. வீட்டு முகப்பில் அழகான பாலன் பந்தல் ! வண்ண வண்ண நிறங்களில் அழகிய மின் குமிழ்கள் பளிச்சென்றிருந்தன. பந்தலை மீண்டும் அழகாக்கிக் கொண்டிருந்தான் மூத்தவன் மருச லின். வீட்டின் பின்புறத்தில் அடுத்த வன் அலெக்ஸ் பட்டாசு கொளுத்தி மகிழ்ந்து கொண்டிருந்தான். ஜெசிந் தாவும் ஜெனியும் மத்தாப்பு வெளிச் சத்தில் மகிழ்ந்து கொண்டிருந்தனர். மனைவி ஞானமலர் முகம் மலர வரவேற்றாள். அவளுடைய முகத்தில் இப்படியான ஒரு புத்தொளி யையும் மலர்ச்சியையும் என்றைக்குமே பார்த்ததில்லை. கையில் ஒரு பெரிய பார்சலுடன் வந்தாள். அதற்குள் ஏராளமான அழகிய புத்தாடைகள் ! வகை வகையாய்ச் சிற்றுண்டிகள் ! கட்டுக் கட்டாய் பண நோட்டுக்கள்.

சவுரிமுத்துவுக்குத் தன்னுடைய கண்களையே நம்ப முடியவில்லை. "ஞானம் ! எங்காலை இதெல்லாம் ! ஆர் தந்தது?" "எண் டைக் குமே அறிமுகமில்லாத ஒரு தாத்தா கொண்டு வந்து தந்திட்டு மறைஞ்சிட்டார். அவர் போன வழியே தெரியயில்லை" ஆச்சரியத்தோடு சொன்னாள் ஞானமலர். "யேசுவே ! உம்மை விசுவா சித்தவரை ரட்சிப்பேன் என்டீரே ! என்னை விசுவாசியாய் ஏற்று ரட்சித்து விட்டீரே !" ஆனந்தக் கண்ணீர் மல்க பிதாச்சுதன் போட்டுக் கொண்டான் சவுரி முத்து.

# பாவத்தில் இருந்து மீட்க வந்தார் ஆண்டவர்



"உலகம் உய்ய இறைவன் தனது திருமகனை உலகிற்கு அனுப்பினார்" (யோவா 3:16) வடக்கில் வாழும் மக்கள் இடப்பெயர்வு, மீள்குடியேற்றம் என்ற பல்வேறு துன்ப நிலையில் ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழாவை மீண்டும் ஒரு முறை சந்திக்கின்றனர். வறுமையும், பொருளாதார நெருக்கடியும் நிறைந்த இந்தக் காலகட்டத்தில் முழுமனித சுதந்திரமின்றி, மனித உரிமைகள் மதிக்கப்படாத நிலையில் மனித மாண்பையே இழந்து வாழ்கின்றனர். சமூகத்தின் உயிர் நாடியாகிய குடும்பங்கள் இன்று சின்னா பின்னமாக சீர்குலைந்து வாழ்ந்து வருகின்றன. குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் மனித நேயத்துடன் மனித மாண்பினை மதித்து வாழ முனைகின்றபோதுதான் அங்கே இறை அன்பு மலர்கின்றது. இதையே பாலன் இயேசு பிறந்து வாழ்ந்த திருக்குடும்பத்தில் காண்கின்றோம்.

நான் என்ற சுயநலம் விடுத்து நாம் என்ற நல் மனத்துடன் பகிர்ந்து வாழ்ந்து மகிழ்ந்து நத்தார் விழாவை கொண்டாடி மகிழ்வோம். கிறிஸ்தவர்கள் அனைவரும் தமது துன்பங்கள், துயரங்கள் அனைத்தையும் மறந்து ஓர் புதுப்பொலிவுடன் ஒவ்வொரு வருடமும் வெகு விமர்சையாக கிறிஸ்து பிறப்பு தினத்தை கொண்டாடுகின்றார்கள். பாவத்திலிருந்து மீட்க வந்த நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு ஒவ்வொரு மாந்தருக்கும் சிறப்பான நாளாகும்.

ஆகவே கிறிஸ்தவர்கள் அனைவரும் மகிழ்ச்சியாக, நத்தார் பண்டிகையை கொண்டாடும் இந்நாளில் நானும் எனது ஆசீருடன் உங்கள் அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேரருட்திரு இ.தோமஸ் சவுந்தரநாயகம்,**
*யாழ். ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.*

# மனித அன்புக்கும் மாண்புக்குமான விழா சிறக்கட்டும்



" நாம் வாழ்வு 'பெறும் பொருட்டு கடவுள் தம் ஒரே மகனை உலகுக்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் கடவுள் மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல, மாறாக அவர் நம்மீது அன்பு கொண்டு தம் மகனை எமது பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார் என்பதில்தான் அன்பின் தன்மை விளங்குகிறது". கடவுள் இவ்வாறு நம்மீது அன்பு கொண்டார் என்றால், நாமும் ஒருவர் மற்றவர்மீது அன்பு கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். (1 யோவா. 4:10-11) கிறிஸ்து பிறப்பு விழா, கடவுள் நம்மீது கொண்ட அன்பை நாம் உணர்ந்து கொள்ளவும், ஒருவர் மற்றவர் மீது நாம் செலுத்த வேண்டிய அன்பை வாழ்வாக்கவும் கொடுக்கப்பட்டிருக்கின்ற உயர் அழைப்பாகவும், அறைகூவலாகவும் அமைந்திருக்கின்றது.

எமது அரிய தாய் நாட்டிலே உள்ள நான்கு மறைகளும் பெரிய கட்டடங்கள், அமைப்புக்கள், கோவில்கள், கொண்டாட்டங்களைக் கொண்டவையாக அமைந்திருப்பதை நாம் காண்கிறோம். இவ்வனைத்து மறைகளும் மனிதனின் அன்பு வாழ்வையே இலக்காகக் கொண்டவையாக அமைந்திருந்தும், மக்களினங்கள் மத்தியிலேயும், மதங்களிடையிலேயும் பகைமை உணர்வு தலைவிரித்துத் தாண்டவமாடுவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. எமது நாட்டின் அரசியல் அமைப்பிலேயே சமயங்கள் மத்தியிலே சமத்துவம் பேணப்படாத நிலை உள்ளது.

இந்த நிலை, "சமயங்கள் யாவும் சமத்துவம் கொண்டவையே. ஆனால் மற்றச் சமயங்களிலும் பார்க்க ஒரு சமயம் கூடிய சமத்துவம் கொண்டது" என்று விபரிதமாகக் கூறும் நிலை இங்கு உள்ளது. "ஓர் இனம் மற்ற இனங்களிலும் பார்க்க உயர்ந்தது, உரிமைகளும் அப்படியே" என்று ஒரே நாட்டின் பிரஜைகளாகிய எம் மத்தியிலே உயர்வு, தாழ்வுகளும், சமூக வேறுபாடுகளும் ஓங்கி நிற்கின்ற வேளையிலே, கிறிஸ்து பிறப்பு விழா, எத்துணை அர்த்தம் பெறமுடியும் என்று நாம் ஆழமாகச் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

எம் மத்தியிலே இருக்கும் இந்த ஏற்றத் தாழ்வுகளை இல்லாதாக்கிச் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் நோக்கி நடை போடுகின்ற மக்களாக இருந்தால் தான் அன்பின் அவதார விழாவை நாம் கொண்டாட முடியும். இந்த உண்மையைத் தான் பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்திலே தூய பவுல் அழுத்திக் கூறுகின்றார். " கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாய் இருக்கும் நிலையை பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை". ஆனால் தம்மையே வெறுமையாக்கி மனிதருக்கு ஒப்பானார். (பிலி 2:6-7).

மனிதரைக் கடவுள் தம் உருவில் படைத்து (தொ.நூ 1:27) மாட்சியையும், மேன்மையையும் அவனுக்கு முடியாகச் சூட்டினார். (தி.பா 8:5). பாவத்தால் மாண்பிழந்த மனிதரை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனை பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார். (கலா 4:5) . எனவே யேசுவின் மானிட ஏற்பு மனித மாண்பை மீண்டும் மகிமையுறச் செய்து கிறிஸ்து பிறப்பு விழா மனித அன்புக்கும் மாண்புக்கும் நாம் எடுக்கும் விழாவாக அமைகின்றது.

எனவே, மனித நேயத்தை அணிகலனாகக் கொள்வோம். "மனித உரிமைகளைப் பேணுவோம். அவர் தம் மாண்பைக் காப்போம்", உங்கள் அனைவரினதும் வாழ்விலும் இந்தப் பெருவிழாவின் செய்தி வேரூன்றிப் பயன்தர வாழ்த்துகிறேன். வேண்டுகிறேன்.

மேதகு இராயப்பு யோசெப்,
மன்னார் ஆயர்.




# நம்பிக்கையை விதைப்போம்

இயேசு பிரான் பிறப்பு சம்பந்தமான வரலாறுகளிலே முக்கியமானதொன்று லூக்கா நற் செய்தி நூலிற் காணப் படுகின் றது. குழந்தை இயேசுவின் சுத்திகரிப்புச் சடங்குகள் முடிந்த பின் னர், அவருடைய பெற்றோர்கள் தமது நேர்த்திக் கடனை நிறை வேற்று வதற்காக எருசலேமி லுள்ள பெரிய கோயிலுக்கு எடுத்துச் சென்றனர்.

அந்தப் பெரிய கோயிலில் ஒரு முதியவரும் ஒரு மூதாட்டியும் வாழ்ந்து, திருப்பணிகளைச் செய்து கொண்டிருந்தனர். முதியவரின் பெயர் சிமியோன்; மூதாட்டியின் பெயர் அன்னாள். குழந்தை இயேசுவைக் கண்ட சிமியோன்,

**"புறஜாதிகளுக்குப் பிரகா சிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமா கிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனாங் களுக்கு முன்பாக ஆயத்தம் பண்ணின இரட்சண்யத்தை என் கண்கள் கண்டன"**

என்றார். அன்னாள் கர்த்தரைப் புகழ்ந்து பாடி எருசலேமிலே மீட்பு உண்டாக காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்துப் பேசினார்.



கிறிஸ்து ஜெயந்தி காலத்தில் இந்த இரண்டு முதியவர் களும் நமக்கு அரிய பாடத்தைப் போதிக்கின்றனர். முதலாவதாக அவர்கள் இஸ்ரவேலின் பண்டைக் காலப் பெருமைகளை மறந்துவிடவில்லை. இன்று கொக்கரிக்கும் வல்லரசுகளின் பெருமை எல்லாம் பொய்யாய், பழங்கதையாய் கனவாய்ப் போய் விடும்.

ஆனால் நீதியின் அடிப்படையில் கட்டப்பட்ட அரசுக்கு அழிவே இல்லை. இம் முதியவர்கள், ஆபிரகாம், மோசே, சாமுவேல் போன்ற சிறந்த ஆன்மிகவாதிகளையும், யோசுவாகிதியோன், தாவீது போன்ற மகாவீரர்களையும் மனதில் இருத்தியிருந்தனர். சீரழிந்தும் சிறுமைப்பட்டதுமாக இஸ்ரேல் சமுதாயம் இருந்தாலும் தமது கால உலக அரங்கினைக் கண்டு, தமது முன் னோர் தமக்களித்த அருஞ்செல்வங்களை மறந்து விட வில்லை.

இவ்வரிய காட்சியை மனதிலே இருத்தியதோடு அமையாது அந்தப் பொற்காலம் திரும்ப வருமென்ற எதிர்நோக்கோடு வாழ்ந்து வந்தனர். என்றோ ஒரு நாள் தமது மக்கள் கண்ணியமாகவும் சுதந்திரமாகவும் சகல வளங்களுடனும் வாழும் காலம் வரும் என்று திடமாய் நம்பினார்கள்.

இந்த தன்னம்பிக்கையோடு அந்தப் பொற்காலத்தை அடையச் செயற்பட்டுக் கொண்டும் இருந்தனர். திருப்பணி, தீர்க்கதரிச னம் உரைத்தல், மக்களுக்கு உற்சாகமூட்டல் என் பன இவர்களின் வாழ்க்கையின் இலட்சணங் கள்.

இவையே நாம் இன்று கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விதிகள். நல்ல எதிர் நோக்கை வளர்ப்பதே ஆண்டவரின் அடியார்களின் தலையாய கடன். இன்றைய பிரச்சினைகள் தற்காலிகமானவை.

**"எனினும் இவையெல்லாம் இறைவன் அருளால் நீங்குவன வன்றி நிலைப்பன வல்ல"** என்றார் பாரதியார். இந்த நன்னாளில் நம்பிக்கையை விதைப்போம். கிறிஸ்து ஜெயந்தியின் குதூகலம் எப்பொழுதும் உங்களுடன் இருப்பதாக.

**அதி வண.கலாநிதி எஸ்.ஜெபநேசன்,**
முன்னாள் பேராயர், தென்னிந்திய திருச்சபை.

# மனிதநேயம் வளரட்டும்



இம் மண்ணில் பல்லாயிரக் கணக்கான மனிதர்கள் தினமும் பிறக்கின்றனர். ஒரு நாள் இறந்து விடுகின்றார்கள். ஒரு சிலர் வரலாற்றில் சாதனை படைத்து நினைவு கூரப்படுகின்றனர். ஒரேயொருவரின் பிறப்பை மட்டும் அகில உலகம் பரந்த ரீதியில் கொண்டாடுகின்றது. அவர்தான் இயேசு. ஏனெனில் அவர் வாழும் முன்பே வரலாற்றை வகுத்தவர். வரலாற்றில் நுழைந்து வரலாற்றையே மாற்றி அமைத்தவர். விண்ணையும், மண்ணையும் படைத்தவர், விண்ணுக்கும், மண்ணுக்கும் பாலம் அமைக்க வந்தவர்.

இறைவன் மனிதரைத் தேடி வந்த விழா மனிதரைச் சந்தித்த விழா-கடவுள் மனிதரோடு தொடர்பு கொண்ட விழா-இதுதான் கிறிஸ்மஸ் விழா அவர் தம் பிறப்பால் ஒரு புதிய சகாப்தம் தொடங்குகின்றது. வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடி கொண்டார். நாம் கடவுளைக் கண்ணால் கண்டோம்! அவரை கையால் தொட்டோம்! அவரது வாக்கைக் காதால் கேட்டோம் என்ற வார்த்தைகள். இனி நமக்கு கடவுள் அந்நியர் அல்ல, நம்மிலே ஒருவர் என்ற அனுபவத்தை ஆழப்படுத்துகிறது.

இந்த கிறிஸ்து பிறப்பு விழா இன்றைய பரபரப்பான உலகுக்கு கடவுளின் அன்பைக் காட்டும் காலக் கண்ணாடி. அன்பு என்பது கண்ணிலே பிறந்து, இதயத்தில் விழுந்து, உயிரோடு கலக்கின்ற உறவு! இந்த உறவை வளர்த்துக் கொள்ளத்தான் கடவுள் மனிதரைத் தேடி வந்தார். அவரது பிறப்பு அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொண்டு வந்தது. "காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்" என்ற இறைவாக்கினரின் கூற்று உண்மையாகிறது.

**அவரது பிறப்பினால் உலகின் இருள் விரட்டப்படுகின்றது. அவரது பிறப்பினால் அனைவரும், அனைத்தினின் றும் விடுதலை பெறுகின்றனர். அவரது பிறப்பினால் உலகெங்கும் அமைதி உண்டாகிறது. அவரது பிறப்பினால் விண்ணிலும் மண்ணிலும் மகிழ்ச்சி ஏற்படுகின்றது.**

மனிதன் மனிதனை மனிதனாக மதிக்க வேண்டும். மனித மாண்பு போற்றப்பட வேண்டும். மனித நேயம் பேணப்பட வேண்டும் என்பதைக் கற்பித்து வாழ்ந்து காட்டினார். நான்கு நற்செய்தியாளர்களும் அவரை ஒதுக்கப்பட்டவரோடு உறவாடுபவராக, நோயுற்றவருக்கு நலம்வழங்குபவராக, பாவிகளை மன்னித்து அரவணைப் பவராக, இறந்தோரை உயிர்த்தெழச் செய்பவராகக் காட்டுகின்றனர். கிறிஸ்துவைப் பின்பற்றி அவர் அறிவித்த நற்செய்தியை வாழ முற்படும் போதுதான் அவரது பிறப்பின் மகிழ்ச்சியைக் கொண்டாட முடியும். 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பதை உணர்ந்து இருப்பதை வைத்துக் கொண்டு திருப்தியுடன் வாழ்வதில் மகிழ்வோம். கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட ஒவ்வொருவரிலும் கடவுள் வாழ்கிறார் என்ற உணர்வுடன், வேறுபாடுகளைத் தாண்டி மனிதரை மனிதராக மதிப்பதில் மகிழ்வோம். இவ்விதமாக கிறிஸ்துவின் பதிப்பீடுகளான உண்மை, அன்பு, நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் நிறைந்த சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதில் எம்மை அர்ப்பணிப்போம்.

*உங்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்.*

**மேதகு பொன்னையா யோசெப்**
மட்டக்களப்பு ஆயர்





# கிறிஸ்துவின் பிறப்பின் நிகழ்வுகள் அர்த்தம் உள்ளனவாக அமையட்டும்

ஆதாமும், ஏவாளும் செய்த பாவங்களினால் மனுக்குலம் யாவும் சீரழிந்து கெட்டுபோயிருந்த போது அம் மனுக்குலத்தை மீட்டு உலகிற்கு அமைதியையும் சமாதானத்தையும் அருள பூவுலகில் கடவுள் தம் ஒரே மகன் இயேசுவை அனுப்ப திட்டமிட்டு அன்னை மரியாள் மூலமாக அதனை நிறைவேற்று கின்றார். இயேசுவின் பிறப்பு என்பது ஆன்மிக, உடல், ரீதியாக இரட்டை அற்புதங்களைக் கொண்டவையாக அமைகின்றது. ஒன்று இறைவன் மனிதனானார். இது ஆன்மிக அற்புதம். மற்றையது கன்னிப் பெண் (மரியாள்) கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுக்கின்றாள். இது உடல் ரீதியான அற்புதம். இரண்டு அற்புதங்களும் ஒரே நேரத்தில் எவரும் அறியாத மறைமுக நிகழ்வாக நடைபெற்றி ருக்கின்றன. (லூக்2:1-7) இந்த இரண்டு அற்புதங்களும் எதனை எமக்கு சுட்டிக் காட்டுகின்றதென்றால் நாமும் ஆன்மிக உடல் ரீதியான பாவ இருளை களைந்துவிட்டு ஒளியைப் போன்று தூய்மை வாழ்வு வாழ வேண்டும் என்பதையே ஆகும். இந்த மறைமுகமாக நடைபெற்ற இயேசுவின் பிறப்பின் செய்தியை உடனடியாகவே வான தூதர்கள் எல்லா மக்களுக்கும் அறிவிக்கின்றார்கள். (லூக்2:17) இதன் மூலமாக இயேசு வின் பிறப்பின் செய்தியை அனைவரும் அறிந்து பேரு வகை கொள்கின்றனர். இந்த வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வையே கிறிஸ்தவ மக்களாகிய நாம் கிறிஸ்மஸ் பெருவிழாவாக வருடா வருடம் கொண்டாடி மகிழ்கின் றோம். அதேவேளை இந்த விழாவை நாம் எந்த மனநிலை யில் கொண்டாடுகின்றோம் என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

காரணம் அன்று வறுமையில் வாடிய இடையர் கூட்டம் வான தூதுவர்களின் அறிவிப்பை முதலில் கேட்டவுடன் அதனை சரிவரப்புரிந்து கொண்டதினால்தான் ஆர்ப்பரித்து மகிழ்ந்தார்கள். (லூக்2:13-14) ஆனால் இன்று நாம் இயேசுவின் பிறப்பின் நோக்கத்தை சரிவர புரிந்த நிலையில் கிறிஸ்மஸ்ஸை அனுசரிக்கிறோமா...? அன்று நா கட்டவிழ்க்கப்பட்டதுடன் செக்கரியா தூய ஆவியால் ஆட் கொள்ளப்பட்டு இருளிலும், இறப்பின் பிடியிலும் இருப் போருக்கு ஒளிதர விடியல் நம்மைத்தேடி வருகின்றது. (லூக்1:78-79)என்று யேசுவின் பிறப்பைப்பற்றி தீர்க்கதரிசனம் பாடினான். ஆனால் இன்று நாம் பாவ இருளில் இருந்து விடுபட்டு ஒளியாகிய இயேசுவை பற்றிக் கொண்ட மன நிலையோடு கிறிஸ்மஸ்ஸை அனுசரிக்கிறோமா....? அன்று இயேசுவின் பிறப்பின் செய்தியை விண்மீனை வைத்து கணித்த ஞானிகள் அரசராக அவரை எண்ணித் தரிசிக்க வந்த போது மாளிகையில் இல்லாது மாட்டுத் தொழுவத்தில், பஞ்சணை மீது இல்லாது புல்லணையில் அவரைக்கண்ட போது தங்கள் உயர் நிலையைத் தூக்கி எறிந்து தம்மை தாழ்த்தி நெஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார்கள். (மத் 2:1-11) ஆனால் இன்று நாம் தாழ்ச்சி உள்ள மனநிலை கொண்டவர்களாக கிறிஸ்மஸ்ஸை அனுசரிக் கின்றோமா? அன்று சிமியோன், குழந்தை இயேசுவை கையில் ஏந்தி கடவுளைப் போற்றி இனி தான் இவ்வுலகில் இருப்பது பயனற்றது பரத்துக்கு போகத் தயாராக இருப்பதாக கூறினான். (லூக்:2-29) ஆனால் இன்று நாம் இயேசு விற்காக இதையெல்லாம் தியாகம் செய்தோம் என்ற திருப்தியான மனநிலை கொண்டவர்களாக கிறிஸ்மஸ்ஸை அனுசரிக்கின் றோமா? இத்தகைய மனநிலை எம்மிடம் இல்லை என்றால் கிறிஸ்மஸ் வெறும் களியாட்ட நிகழ்வாகவே முடியும்.

இன்று நாம் கிறிஸ்துவின் இரண்டாவது வருகை பற்றி பேசிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் அவரின் முதல் வருகை பற்றி இன்னும் தெரியாத மக்கள் பலர் உள்ளனர். ஆனால் கிறிஸ்மஸ் பவனிக்குழுக்கள் (Carol) கிறிஸ்தவர்கள் வாழும் பகுதிகளில் தான் கிறிஸ்துவின் பிறப்பைப்பற்றி ஆடிப்பாடி எடுத்துச் சொல்கின்றார்கள். இந்த நிலை முற்றிலும் மாற்றி அமைக்கப்பட வேண்டும். ஏனெனில் "இம் மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி" என்று செக்கரியா தீர்க்கதரிசனம் பாடினார் (லூக் 2:32). இதனைக் கருத்திற்கொண்டு கிறிஸ்தவர்கள் வாழாத பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய நிகழ்ச்சிகளை நடத்தி இனிப்பான




உணவுவகைளை அவர்களுக்கு அளித்து அவர்களை மகிழ்விக்க வேண்டும். இப்படியான நிகழ்வுகள் ஏற்படும் போது அவர்கள் கிறிஸ்துவைப்பற்றி அறிய வாய்ப்புக்கள் உருவாகும்.

வட்டத்துக்கு வெளியே அவர்களை நிறுத்தி விட்டு வட்டத்துக்குள்ளே நாம் நின்று கொண்டு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் நிகழ்வுகள் கடவுள் முன் அர்த்தமற்றதாகிவிடும். கிறிஸ்துவின் பிறப்பை தேவையற்ற முறையில் ஆடம்பரமாக கொண்டாடுவதை நாம் இயன்றவரை தவிர்த்து, கடந்த கால போரினால் உருவாகிய கைம்பெண்கள், அநாதைகள், கைவிடப்பட்டோர், வலுவிழந்தோர் ஆகிய நிலைகளில் வாழும் மக்களுக்கு உதவி செய்ய முன்னிற்போம். அனைவருக்கும் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்.

**க.அருள்நேசன், குருநகர்**

## சமாதான சகவாழ்வு நீடித்து நிலைக்க வேண்டும்

*நத்தார் வாழ்த்தில் டக்ளஸ்*

யாழ்ப்பாணம், டிசெ. 25

அவலங்களையும் துயரங்களையும் சுமந்து நிற்கும் நம்தேசத்தில் சமாதான சக வாழ்வின் நிரந்தர ஒளி நீடித்து நிலைக்க வேண்டும் என ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். நத்தார் வாழ்த்து செய்தியிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மனித குலத்தின் மீட்சிக்காகவே கருணை மைந்தன் இயேசு பிரான் பிறப்பெடுத்து வந்தார் என்ற தளராத நம்பிக்கையில், உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்கள் நத்தார் தினத்தை கொண்டாடி மகிழ்கின்றார்கள். அந்த மகிழ்ச்சியை எமது தேசத்தில் வாழும் மக்களோடு இணைந்து நாமும் கொண்டாடி மகிழ விரும்புகின்றோம்.

இது எமக்கென்று வாக்களிக்கப்பட்ட பூமி. இங்கு சகலரும் சரி நிகர் சமன் என்ற சமத்துவம் நிலவ வேண்டும். சமாதானம் இங்கு பூப்பூத்து குலுங்கு வேண்டும். அதை நிறைவேற்றவே நாம் இங்கு வரவழைக்கப்பட்டவர்கள். கருணையும் அன்பும், பிற மனிதர்கள் மீதான நேசிப்பும், அதற்கான சூழலும் இங்கு நிலவ வேண்டும்.

வாடி நின்று, வருத்தப்பட்டு, பாரம் சுமப்பவர்கள் என்று இங்கு யாரும் இருப்பதற்கு அனுமதிக்க முடியாது. சொந்த நிலங்களை இழந்தவர்கள் அந்த நிலங்களுக்கே திரும்ப வேண்டும். எமது நிலம் எமக்கே சொந்தம் என்ற உரிமை இங்கு வாழ வேண்டும். இல்லாமையில் இருந்தும் வறுமையில் இருந்தும் எல்லோரும் இங்கு விடுபடல் வேண்டும் - என்று தெரிவித்துள்ளார்.

## அனைத்துலக அரசர் ஏழ்மையில் அவதரித்தார்

இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப் பார். அந்தக் குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர். இம்மானுவேல் என்றால் 'கடவுள் நம்முடன் இருக்கிறார்' என்று பொருள் (எசாயா 7:14)

என்றும் எம்மோடு வாழ்ந்து எம்மை நெறிப்படுத்தி வழிகாட்டி, பாதுகாத்து இறையரசின் விழுமியங்களை நோக்கி அழைத்துச் செல்லும் இறைமகன் பிறந்த மகிழ்வின் விழாவை இன்று நத்தார் வாழ்த்துக்களை பகிர்ந்த வண்ணம் அனைத்துலகும் கோலாகலமாக கொண்டாடுகிறது.

கண்கவர் அலங்காரங்கள் வர்ண மின் விளக்கு ஜாலங்கள், நத்தார் தாத்தா, கிறிஸ்மஸ்மரம் குடிவகைகளுடன் கூடிய பெருவிருந்துகள் என இயேசு பாலகனின் முக்கியத்துவம் இழக்கப்பட்ட நிலையில் ஆடம்பரக் கொண்டாட்டங்கள் நீண்டு செல்கின்றன. ஆனால் இயேசு பாலகனின் பிறப்புச் சூழல் முற்றிலும் மாறுபட்ட ஏழ்மையும், எளிமையும், தனிமையும் அமைதியும் நிறைந்ததாக காணப்படுகிறது. தெய்வீக வல்லமைமிக்க தேவன் விண் மகிமையைத் துறந்து மனிதனால் விழைந்த பாவத்தை நீக்க மனித சாயல் பூண்டு மீட்பின் குழந்தையாக அவதரித்தார்.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் சிரிய நாட்டில் குரேனியு என்பவர் ஆளுநராக இருந்தபோது பேரரசர் அகஸ்து சீசர் தனது பேரரசு முழுவதும் மக்கள் தொகை யைக் கணக்கிடுமாறு கட்டளையிட்டார். அதற்கமைய அனைவரும் தத்தமது சொந்த ஊருக்கு செல்ல வேண்டிய தாயிற்று. தாவீதின் வழிமரபினரான யோசேப்பும் தமக்கு மண ஒப்பந்தமாகி தூய ஆவியின் வல்லமையால் கருவுற்றிருந்த மரியாவோடு கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து யூதேயாவிலுள்ள பெத்தலகேம் என்னும் சிற்றூருக்குப் போனார்கள்.

ஏற்கெனவே அங்கு சென்ற வசதி படைத்த மக்கள் கூட்டத்தினால் வீடுகள், வீடுதிகள், சாலைகள் நிரம்பி வழிந்தன. தங்க இடம் தேடி அலைந்து சோர்வுற்ற வேளை யில் மரியாளுக்கு பிரசவ வேதனை உண்டாயிற்று. நகருக்கு வெளியேயுள்ள மாட்டுத் தொழுவத்தில் தஞ்சம டைந்து குழந்தையைப் பெற்றெடுத்து தீவனத் தொட்டியில் கிடத்தினர். அந்தப் பகுதியில் மந்தைக் காவலில் இருந்த பாமரரான இடையர்கள் திருக் குழந்தையை முதலில் சென்று வணங்கினர்.

இன்று ஆடம்பர கேளிக்கை விழாக்களுடன் கிறிஸ்மஸ் தினத்தை எதிர்கொண்டாலும், இயேசு எவ்வாறான குடிலில் பிறக்க விரும்புகிறார்.கள்ளம் கபடமற்ற ஏழை இடையரின் தூய உள்ளமாக எமது இதயங்களை மாற்றி இயேசு பிறக்க இடம்கொடுப்போம்.

பசித்தோருக்கு உணவையும் சிறைப்பட்டோருக்கு விடுதலையயும், அடிமைப்படுத்தப்பட்டோருக்கு உரிமை யயும், பகைவருக்கு அன்பையும், வறியோர்க்கு செழுமை யையும், அநீதியை ஒழித்து நீதியையும், உறவுகளைத் தேடுவோரின் கண்ணீருக்கான பதிலையும், புறக்கணிப் பற்ற சமத்துவத்தையும் வழங்கும் கருவிகளாக எம்மை உருமாற்றி இயேசு பிறந்த இந்த நன்னாளில் அமைதியின் ரதுவன் காட்டிய வழியில் நடக்க உறுதி பூணுவோம்.

**எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.**

# இம்மானுவேல் தேவன் நம்மோடிருக்கிறார்

அவன் இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அக்குமாரனுக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் 'தேவன் நம்மோ:ருக்கிறார்' என்று அர்த்தமாம். மத்தேயு -1:23. இங்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பைத் தேவதூதர் முன்னறிவிப்பதைக் காண்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு 'இம்மானுவேல்' என்று பெயரிடப்பட்டது. 'இம்மானுவேல்' என்றால் தேவன் நம்மோடிருக்கிறார்.



ஏன் இயேசு பிறந்தார்? பல காரணங்களை நாம் கூறிக்கொண்டே போகலாம். இருப்பினும், இங்கு நமக்காய் பிறந்தவர் நம்மோடு இருக்கவே பிறந்தார். ஆம். இயேசு நம்மோடு இருக்கிறார். இன்று மனிதனை வாட்டும் பெரிய வேதனை தனிமைதான். தனித்து விடப்பட்டு விட்டேனே என்ற தவிப்பு. குடும்பத்தை இழந்து, உறவை இழந்து தனித்து வாழும் மக்கள் ஏராளம். ஏராளம். எனக்காகப் பேச யாருமில்லையே...... எனக்காக உதவி செய்ய யாருமில்லையே....... யாராவது எனக்கு உதவி செய்யமாட்டார்களா என்ற தவிப்பு உங்களுக்கு இருக்கலாம்.

ஆனால், 'இம்மானுவேல்' தேவன் உங்களோடு இருக்கிறார். இனி நீங்கள் தனிமையில் இல்லை. தனித்து விடப்படுவதுமில்லை. கர்த்தர் உங்களோடு இருக்கிறதைக் காண்பீர்கள்.

அவர் உங்களுக்குத் தூரமாக அல்ல உங்களோடு இருக்கிறார். இயேசு உங்களோடு இருப்பதை இந்நாளில் நீங்கள் மட்டுமல்ல, முழு உலகமுமே காண உங்களை மனதார வாழ்த்துகிறேன்.

'இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர். நான் அல்பாவும் ஒமேகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம் பற்றுகிறார். வெளி - 1:8

இருந்தவர் இருக்கின்றவர் என்று வேதம் சொல்லுகிறது. அப்படியானால் ஏதோ 2000 ஆம் ஆண்டுகளாக அல்ல, 'இயேசு ஆதியிலேயே தேவனோடு இருந்தார். ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். யோவான் -1:1,2. ஆபிரகாமுக்கு முன்னே இருந்தார். அதற்கு இயேசு, ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். யோவான் 8:58.

ஆகையால் இவ்வுலகத்துக்கு மனிதனாக வரமுன்னமே நம் முற்பிதாக்களோடு பழைய ஏற்பாட்டில் இருந்த... இருந்தவர் இன்னும் இருக்கிறார்.

நமக்காகப் பிறந்தவர் 'நம்மோடு எவ்விதமாக இருக்கிறார் என்பதை இங்கு காண்போம்.

### 1. ஆதியும் அந்தமுமாயிருக்கிறார்

"இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர். நான் அல்பாவும், ஒமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்' வெளி 1:8

"நான் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்" என்று இயேசு திருவுளம் பற்றுகிறார். ஆதியும், அந்தமும் என்றால் ஆரம்பமும் முடிவும்தான் என்பதே. இயேசு ஆதியிலே இருந்தார். அவர் ஆதியிலேயே தேவனோடு இருந்தார். தேவனாக இருந்தார். யோவான் -1:1,2

"சகலமும் அவர்மூலமாய் உண்டாயிற்று. உண்ட[illegible]ன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" யோவான் - 1:3

பார்த்தீர்களா சகலமும் அவர் மூலமாக உண்டாயிற்று: சகலமும் ஆதியாகமம் 1ஆம், 2ஆம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். அவரே ஆதியில் எல்லாம் உண்டாக்கினார். அவரே ஆதியும் (ஆரம்பமும்) அந்தமுமானவர் (முடிவும்) இன்று இந்த 'இம்மானுவேல்' புதிய காரியங்களை உங்களுக்காக ஆரம்பிக்கப் போகிறார். ஒரு வேளை நான் ஆரம்பித்தவைகள் இடையில் தடுத்து நிறுத்தப்பட்டு விட்டதே என்று கலக்கமா? இதோ அவரே ஆதியும் அந்தமுமானவர். வெற்றியாய் முடிக்க வல்லவர். உங்கள் ஆரம்பமும் இனி வெற்றியே உங்கள் முடிவும் இனி வெற்றிதான். இனி ஒருபோதும் தோல்வியாக எதுவும் முடியாது. தடைப்பட்ட காரியங்களைக் கர்த்தரே வெற்றியாக ஆரம்பித்துத் தருவாராக. ஆரம்பித்த குடும்ப வாழ்வு, வியாபாரம், தொழில் வெற்றியாக முடியப்பண்ணுவாராக.

அவர் உங்களோடு இருக்கிறார். அவர் ஆதியும் அந்தமுமாகவே இருக்கிறார்.

### 2. உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார்

இயேசு அவளை நோக்கி: "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" யோவான் 11:25

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன் என்கிறார். நமக்காகப் பிறந்தவர் இருக்கிறார். நம்மோடு இருக்கிறவர் எல்லா சூழ்நிலையிலும் இருக்கிறவர்.

இங்கு மிகவும் துக்ககரமான சம்பவம் ஒன்றைக் காண்கிறோம். யோவான் 11ஆம் அதிகாரம் லாசர் வியாதிப்பட்டு மரித்துப்போனான். மரித்து 4 நாள்களும் ஆயிற்று. இனி எல்லாம் முடிந்துவிட்டது என்ற மார்த்தாள், மரியாளின் அழுகை, நாறுமே மரித்து நாலுநாள் ஆயிற்று என்ற அவநம்பிக்கை. சுருக்கமாகச் சொன்னால், "எல்லாம் முடிந்து விட்டது" இனியொன்றும் செய்ய முடியாதென்ற நிலை.

பிரியமானவர்களே:

உங்கள் நிலையும் இதுவா? எல்லாம் முடிந்துவிட்டதே. வாழ்க்கை நாறுகிறதே. இனி யாராலும் எனக்கு உதவி செய்யவே முடியாது என்கிறீர்களா?

ஆண்டவர் என்னோடு இருந்தீரானால் இது நடந்திருக்காது என்கிறீர்களா? ஐயோ! 'இம்மானுவேல்' உங்களைவிட்டு எங்கும் போகவில்லை. உங்களோடு இருக்கிறார். மரித்த நிலையை மாற்றவல்லவர். இனி முடியாது என்ற காரியங்களை மீண்டும் எழுப்ப உங்களோடு இருக்கிறார்.

இவைகளைச் சொன்னபின்பு லாசருவே, வெளியே வா என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது மரியாளிடத்தில் வந்திருந்து இயேசு செய்தவைகளைக் கண்டவர்களாகிய யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்" யோவான் 11: 43,45

மரித்தவன் வெளியே வந்தான். சாதாரண ஆண்டவர் உங்களோடு இல்லை. உயிரையும், மீண்டும் ஜீவனைக் கொடுக்கக்கூடியவர் உங்களோடு இருக்கிறார்.

மரித்த அவயவம் எதுவானாலும் இப்பொழுதே ஜீவனையடையப் போகிறது. சாவை நெருங்கும் வியாதிகள் இப்பொழுதே உங்களை விட்டு ஓடிப்போகும். புதிய ஜீவன் உங்களுக்குள் இறங்கி வருகிறது. இயேசு உங்களோடு இருப்பதை இப்பொழுதே காண்பீர்கள். உங்களுக்குள் புதிய ஜீவன் இறங்குவதைக் காண்பீர்கள். இயேசு உங்களோடு இருக்கிறார். இயேசு உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார்.




### 3. திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்

"மரித்தேன், ஆனாலும் இதோ, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென். நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" வெளி 1:18

"பிலதெல்பியா சபையின் தூதனுக்கு எழுதவேண்டியது என்னவெனில், பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது" வெளி 3:7

ஆம். 'இம்மானுவேல்' தேவன் நம்மோடு இருக்கிறார். நமக்காகப் பிறந்தவர் நம்மோடு இருக்கிறார் என்று சொன்னேன்.

இங்கு 'திறவுகோலை' உடையவராயிருக்கிறேன் என்கிறார். உங்களோடும், என்னோடும் இருப்பவர் திறவுகோலைத் தன் கையிலுடையவராயிரக்கிறார். ஏன் திறவுகோலையுடையவராயிருக்கிறார்?

வெளி 3:7 பூட்டக்கூடாதபடி திறக்கவும், திறக்கக்கூடாதபடி பூட்டவும் உங்களோடு இருக்கிறார்.

"உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். உனக்குக் கொஞ்சம் பலம் இருந்தும் நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே இதோ திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அதை ஒருவனும் பூட்டமாட்டான்" வெளி 3:8 திறந்த வாசலை யாரும் பூட்டமுடியாது என்கிறார்.

ஆம். இந்தப் பண்டிகை நாள்களில் கர்த்தர் உங்களுக்காகப் புதிய வாசல்களைத் திறக்கப் போகிறார். உங்கள் வாழ்க்கையில் ஊழியத்தில் அடைக்கப்பட்ட வாசல்கள் திறக்கப்படப் போகின்றன.

அவர் திறந்த வாசலை (குடும்பம், வியாபாரம், வாழ்வு, ஊழியம்) இனி யாராலும் அடைக்கவோ... பூட்டவோ முடியாது. திறவுகோலை உடையவராகவே இயேசு உங்களோடு இருக்கிறார். எத்தனை ஆண்டுகள் சென்றும் திறக்கவே திறக்க முடியாது என்று போராடி மனம் தளர்ந்துபோன நீங்கள் கவலைப்படத் தேவையில்லை.

*(பாஸ்டர் வோல்டர் இராஜமணி)*

# புத்தாண்டில் மனம் கொள்வோம்

"இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்" என்ற இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறியது. 'இம்மானுவேல்' என்றால் 'கடவுள் நம்முடன் இருக்கிறார்' என்பது பொருள்.
எங்களைப் பாவத்துயரினின்றும் மீட்டு விண்ணரசை நெருங்க வைப்பதற்காக இறைதந்தை தமது மகனை எமக்காக அனுப்பினார். இயேசு பாலன் பிறந்த டிசெம்பர் 25 ஆம் நாளினையே நாம் நத்தார்ப் பண்டிகையாகக் கொண்டாடுகிறோம்.
இறைவனின் வருகைக்காக பல்வேறு ஆயத்தங்களைச் செய்கிறோம். ஒளி விளக்குகளை ஏற்றி வைக்கின்றோம். இல்லங்களையும் ஆலயங்களையும் தூய்மையாக்குகின்றோம். நள்ளிரவில் எழுந்து குளித்து புத்தாடை அணிந்து குடும்பங்களாய் இணைந்து திருப்பலிக்குச் செல்கிறோம். வழிபாட்டின் பின் மற்றவர்களுடன் கைகுலுக்கி வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்கிறோம். பட்டாசு வெடி கொளுத்தி நத்தார்ப் பாப்பாவின் நடனத்தையும் கண்டு மகிழ்கிறோம். உறவினர் வீடுகளுக்குச் சென்று பரிசுகளை வழங்கி உணவுப் பண்டங்களையும் பரிமாறிக் கொள்கிறோம். இது தானா நத்தார்ப் பண்டிகை?
இல்லங்களைத் தூய்மையாக்கிய நாங்கள் உள்ளங்களைத் தூய்மையாக்கினோமா? பகட்டாய் ஆடை அணிந்த எமக்கு பண்பாய்ப் பிறருடன் பழகத் தெரிந்ததா? அன்பாய் ஏழைகளுடன் உறவாடினோமா? குடும்பமாய் இணைந்து குதூகலித்த எமது உள்ளங்கள் உறவுகளை இழந்த மழலைச் செல்வங்களுக்கு உதவ முன்வந்ததா? சற்றுச் சிந்தித்துப் பார்ப்போமானால், எம் கொண்டாட்டங்கள் யாவும் புற அலங்காரங்கள் மட்டுமே, ஆத்மார்த்தமாக ஆண்டவர் வரவை நேசிக்கும் உள்ளங்கள் பகட்டை மறந்து பண்பையும் அன்பையும் ஏழைகள், அநாதைகள் மீது அன்புறவையுமே விரும்பும்.
"நீங்கள் மனம் மாறியவர்கள் என்பதை அதற்குரிய செயல்களில் காட்டுங்கள்" என்ற உண்மை நிலையை வெளிப்படுத்துங்கள். ஆண்டவர் பிறப்பை மகிழ்வுடன் வரவேற்று ஆடம்பர. தொடர்பூடகங்களின் மோகத்தில் மயங்கிக் கிடக்கும் எம்மனதை மாற்றி அன்பு, கருணை, விட்டுக்கொடுத்தல், உள்ளன்போடு உதவிபுரிதல் போன்ற நற்பண்புகளை வளர்த்து உண்மையான உன்னத மகிழ்வைப் பெறுவோமாக; இறைபாலனின் அருளில் நிறைவோமாக.

திருமதி ஜெ.நந்தினி,
கிளி/முருகானந்தா கல்லூரி.




## நத்தார் பாப்பா

வெள்ளை நீளத்தாடியும்
சிவப்புச்சட்டை தலையில் குல்லாவும்
நத்தார் பாப்பா வருகின்றார்
நல்ல கதை பல கூறுகின்றார்.
நாமும் அதைக்கேட்டிட்டே
அதுபோல் வாழப் பழகிடுவோம்..
கையிலொரு பையும் உண்டு
பைநிறையப் பரிசிலுண்டு
பாட்டுப்பாடி ஆட்டம்ஆடி
பாசத்தோடு என்னருகே வந்திடுவார்
அன்பால் என்னை அணைத்து அவர்
அழகிய பரிசு ஒன்று தந்திடுவார்.
என்மனமும் குளிர்கின்றது
மார்கழியில் வருகின்றது
உலகெங்கும் விடுமுறையாகிறது
பாலன் பிறந்த நன்னாளாம் இன்று
வாழும் மனிதருக்கெல்லாம் வாழ்த்துக்கள்
கூறிடுவோம். என்றும் யேசு
பாலன்போல் நன்மைகள் செய்திடுவோம்.





**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
*Learn French The French Way*
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில்
கற்றுக்கொள்ளுங்கள்

**யார் AF இல் French படிக்க முடியும்?**
திருமணம் மூலம் France, Canada... செல்வோர், வெளிநாடுகளில் தொழில் புரிய / கல்விகற்க செல்வோர், மாணவர்கள் மேலும் French கற்கவிரும்புவோர்...
இங்கு வடமராட்சி, வன்னி, வவுனியா, மற்றும் மன்னாரைச் சேர்ந்த பலரும் படிக்கிறார்கள்.

- Speaking, writing, listening & reading திறமைகளில் நன்கு தேர்ச்சிபெற்றிட...
- *Videos* for listening & speaking practice : "*Bienvenue en France*" Episode N°. 1,2,3,4...
- *Teaching materials* are given with *free* of charge. (ஆங்கில அறிவு அவசியமில்லை)
- Elementary level - 1 (6 Months, 100 Hours, அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATE ஐ பெறுங்கள்)
- Elementary level - 2 (4 Months, 80 Hours, அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியான CERTIFICATE ஐ யாழ்ப்பாணத்தில் AF இல் மட்டுமெ பெறமுடியும்) ஏற்கனவே கொஞ்சம் பிரெஞ் கற்றவர்களும் இங்கு படிக்கலாம்.
- International Diplomas : DELF A1, A2 - Af இல் கற்பவர்களுக்கு மட்டுமே குறைந்த கட்டணத்தில் அனுமதி. மேலும் இப்பரீட்சைகளை ஏதாவதொரு Af இல் மட்டுமே எழுத முடியும்.
- Letter in French : 6 மாதத்தினை நிறைவுசெய்யாதோருக்கு / Embassy க்கு (Free)
- Translations in French : பிறப்பு, இறப்பு, & திருமண சான்றிதழ்கள். மேலும் நூலக வசதி...

புதிய வகுப்புக்கள் விரைவில்
ஆரம்பமாகின்றன. உடன் பதிவுசெய்யுங்கள்
61, Kachcheri-Nallur Road, Jaffna
T.P. 021 222 8093 / நேரிலும் வரலாம்

*Just say "Yes, I can.. speak French"*
*AF is the only International Organization for French in Northern Province*

(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)
(39608)(10.6.3)

புதுவருடம், பொங்கலை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
**மது பான்சி**
யாழ் வீதி, மானிப்பாய்
24 ஆம் திகதியிலிருந்து தைப்பொங்கல் 15ஆம் திகதி வரை

★பாடசாலை உபகரணங்கள் அனைத்தும்
★பாடசாலை பாக் வகைகள்
★பிளாஸ்ரிக் பொருள்கள்
★R.P.Co மெத்தைகள்
★தம்ரோ மெத்தை, தளபாட பொருள்கள்
★பேபி மெத்தை
✱பேபி பொருள்கள் அனைத்தும்
✱டாம்ரா
✱கிடாரம்
✱பொங்கல் பானை
✱தாச்சி வகைகள்
✱எவர்சில்வர் பொருள்கள்
(C.10287)(10.14)

நேரடியாக கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட பொருள்களை யாழ் விலையில் சாவகச்சேரி நகரில் பெற்றுக்கொள்ள....
வாரீர் வந்து பெறுவீர்... தனங்கிளப்பு வீதியில்
**பொதிகை** புத்தகசாலை
கொம்பியூட்டர் கிராபிக்ஸ்
இல. 03, தனங்கிளப்பு வீதி,
சாவகச்சேரி.[நவீனசந்தை அருகாமை]
14-01-2014 வரை ஞாயிறுகளிலும் வியாபாரம் இடம்பெறும்
(39606)
பாடப்புத்தகங்கள் விசேட கழிவு விலையில்
வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்
Diary 2014
2014ம் ஆண்டு கலண்டர்கள், டயறிகள்...
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள் உண்மை புரியும்
T.P :0212270447
email : phothigai@gmail.com

**நம்பமுடியாத விலைக்கழிவு...**
வாடிக்கையாளர் நலன்கருதி எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதிவரை ஞாயிற்றுக்கிழமைகளிலும் வாடிக்கையாளர் சேவை இடம்பெறும்
புத்தகம் மற்றும் ஸ்ரேசணறி வியாபாரத்தில் என்றும் முன்னணியான நிறுவனம்
பிரமாண்டமான காட்சியறை
குறிப்பிட்ட தொகைக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு அழகிய கோப்பு (பைல்) இலவசம்.
கையிருப்பு உள்ளவரை மட்டுமே. முந்துங்கள்! வெல்லுங்கள்!
எண்ண முடியாத பரிசில்கள்
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சி.14517)(45.6.3)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

தித்திக்கும் புத்தாண்டை
சரவணாவின் ஆடைகளால்
அலங்கரியுங்கள்

சரவணா ரெக்ஸ்
SARAVANA TEX

இல. 526, 529 பருத்தித்துறை
வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.
(பின் வீதி, சிவன் கோயில் அருகில்),
T.P : 021 222 1723

இல. 770, 772, கே.கே.எஸ் வீதி,
(குட்டாதெரு சந்தி),
யாழ்ப்பாணம்.

(C/14513)(10.6.3)

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்!

பண்டிகைக்காலத் தெரிவுக்கு....

ஆடவர், நங்கையர், சிறுவர்கள் மற்றும் பெரியவர்களே!
உங்கள் விருப்பத்துக்கு ஏற்றவகையில்
ஆடைகளைத் தெரிவுசெய்ய நாடவேண்டிய இடம்:

பெஸ்ட் இன்
ரெக்ஸ்ரைல்
Best In's
Textiles

59/2, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

8V, பெரியகடை, யாழ்ப்பாணம்.

உலக நாடுகளுக்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை

* 220 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
* சகல நாடுகளுக்கும் 3 - 5வேலைநாள்களில் சேவை
* மிகக் குறைந்த கட்டணம் மிக விரைவான சேவை.

வாடிக்கையாளர்களுக்கான
விசேட சலுகை U.K. 3Kg
பொதிக்கு 2700/= ரூபா மட்டுமே

பல நாடுகளுக்கு
கட்டணங்கள்
குறைக்கப்பட்டுள்ளன

கிரிஷான்
Worldwide Courier Service
499/1, பருத்தித்துறைவீதி, நல்லூர், (நல்லூர் கோவில் முன்பாக)
Hot Line: +94770569642, +94770166746

(C/14514)

SABIN'S
MEGA PARTY

அல்லைப்பிட்டி கடற்கரையோரத்தில் இரவு நேரக் களியாட்டவிருந்து

Ticket
2000/=

Cossy Buffet Dinner with Soft Drinks
இவற்றுடன் Disco Night Cossy உடன்
யாழ் சபின்ஸ் புளூ ஓசன் ரிசோட் வழங்குகிறது.

இம்மாதம் 31ஆம் திகதி இரவு 7.00 மணி தொடக்கம்
மறுநாள் அதிகாலை 2.00 மணிவரை

* Attached Bathroom
* Swimming pool
* Wedding, Birthday & Conferance Hall
* Sea Bath

CALL US: 077 835 0478, 077 985 4359

சபின்ஸ் புளூ ஓசன் ரிசோட்
அல்லைப்பிட்டி.

(C/14509)(10.6.3)

கபிலா
பாதணியகம்
13, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

பாடசாலை மாணவர்களுக்கான
Bata DSI பாதணிகளைப்
பெற்றுக்கொள்ள

பொறித்த விலையைவிடக்
குறைவான விலையில்....
அசத்தலான தள்ளுபடி

கபிலா
காலணியகம்

24, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/14511)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

நத்தார், புதுவருட
விசேட விலைக்கழிவு!

➡220றகு மேற்பட்ட நாடுகளுக்கான மிகக் குறைந்த கட்டணம்.
➡வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், அன்பளிப்புப் பொருட்கள்
உணவுப் பண்டங்கள் என்பவற்றை மிகவிரைவாக அனுப்பிட.
11Kg மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம்

உங்கள் இல்லங்களில்
இருந்தவாறே பொதிகளை அனுப்பிட
தொடர்பு கொள்ளவும்
0766858509

3-5 வேலை
நாட்களில் உரிய
முகவரியில்
ஒப்படைக்கப்படும்

வெளிநாடுகளில் இருந்து
பொருட்களை இறக்குமதி
செய்துகொடுக்கப்படும்.

திருமுருகன் கொம் நெற்

இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
பிரதான வீதி, சங்கானை.

இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது)
021 222 7835

இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
(HNBவங்கிக்கு அருகாமையில்)

TCN EXPRESS

(C/14510)

## கிறிஸ்து பிறப்பின் நினைவு தினம் புதிய ஆண்டுக்கான ஒளிக்கீற்றாக அமையட்டும்

உலகில் உள்ள மதங்கள் ஒவ்வொன்றும் தத்தமது முக்கியமான திருவிழாக்களை பெருவிழாக்களாகக் கொண்டாடி மகிழ்ந்து வருகின்றன. அதேபோன்று அவ்வனைத்து மதங்களும் அன்பு எனும் அடிப்படையையே போதித்து நிற்கின்றன. அந்த வகையில் இன்று உலகில் வாழ் சகோதர கிறிஸ்தவ பெரும் மக்கள் தாம் மனதளவில் மீட்பராக ஏற்றுக்கொண்ட கிறிஸ்துவின் பிறப்பினை நினைவு கூர்ந்து கொண்டாடி வருகின்றனர். கிறிஸ்து பிறப்பினை பெருவிழாவாக நினைவு கூருகின்ற இந்நன்னாளிலே நாமும் அவர்களோடு இரண்டறக் கலந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். அதேவேளை, கிறிஸ்து பிறந்தார் என்பதை நினைவுகூருகின்ற ஒரு நாளாகவும், நமக்கு நாமே சந்தோஷம் தருவிக்கின்ற ஒரு நாளாகவும் அதனை மாற்றிவிடக் கூடாது.

தம்மையே முற்றிலும் தாழ்த்தி அடிமையின் கோலமாக வந்துதித்த கிறிஸ்துவின் அர்ப்பணிப்பு ஒவ்வொருவரினதும் வாழ்விலும் இருக்க வேண்டும். அந்தச் சிந்தனை இருக்கின்றவர்களுக்கு கிறிஸ்து பிறப்பு அர்த்தமுள்ளதாகவும் அவரது பிறப்பின் பண்டிகை பிறருக்குச் சான்றாகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை. கிறிஸ்து பிறப்பின் உண்மையான எதிர்பார்ப்பு மகிழ்ச்சி. ஆனால் அது புறத்தில் அல்ல, உள்ளத்தில் இருக்க வேண்டும். உன்னதங்களிலே இறைவனுக்கு மகிமையும் அவருக்கு உகந்தோருக்கு இவ்வுலகில் அமைதியும் உண்டாகுக! இதுதான் கிறிஸ்து பிறப்பின் செய்தி.

ஆகவே கிறிஸ்து பிறப்பின் பெருவிழாவினை கொண்டாடும் கத்தோலிக்க திருச்சபை அதன் தலைவர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவிகள் மற்றும் அனைத்து சகோதரர்களுக்கும் எம் இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**றிப்கான் பதியுதீன்,**
வடமாகாண சபை உறுப்பினர்.

## உடைபட்டவர்கள் முழுமையடைவதற்கு குணமாக்குதலின் கருவிகளாக மாறுவோம்

**"இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்கள் மேல் வெளிச்சம் பிரகாசித்தது" (ஏசாயா 9:2)**

இந்த கிறிஸ்மஸ் நாளில் மக்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். கிறிஸ்மஸ் என்பது கடவுள் கிறிஸ்துவில் மானுடத்தைத் தேடிவந்த நிகழ்வாகும். இது கடவுளுக்கு மானிடம் தேவை என்பதை சுட்டி நிற்கின்றது. மானிடக் கூட்டுறவில் கடவுள் கொண்டுள்ள வாஞ்சையையே இது எடுத்தியம்புகின்றது. மட்டுமல்ல, கடவுள் மானிடத்தைத் தமது சாயலில் படைத்தபடியினால், அந்த சாயல் மங்காமல் பாதுகாப்பதும் அவர் பணியாகின்றது. எனவே கதறியழும் மானிடத்தை அதன் சாயல் இழந்து போகாவண்ணமாகப் பாதுகாப்பதும் கடவுள் தமது குமாரனை அனுப்பியதன் இன்னொரு நோக்கமாகும். ஏசாயா இறைவாக்கினன் கூற்று கிறிஸ்மஸ் காலத்தில் படிக்கப்படும்போது இது உரைக்கப்பட்ட பின்னணியும் மனங்கொள்ளப்படுவது அவசியமாகின்றது. பொதுவாக இரண்டு எண்ணக்கருக்கள் உள. ஒன்று, தாவீதின் சிம்மாசனத்துக்கு இப்போது கிடைத்திட்ட வாரிசு குறித்த அறிவிப்பு. மற்றது, புதிதாக அரசன் ஒருவன் அரியணை ஏறுவது. எதுவாயினும் செய்தி இதுதான்: மக்களது நீண்டகால எதிர்பார்ப்புக்கள் இப்பொழுது நிறைவாக்கம் பெறுகின்றன. மட்டு மல்ல அவர்களது பெருமூச்சுக்கள் இப்பொழுது இறைவ னால் கேட்கப்படத் தொடங்கிவிட்டது.

இந்தச் செய்தியைத்தான் இரவிலே மந்தையைக் காத்துக்கொண்டிருந்த இடையர்களுக்கு விண்தூதர் கள் கூறியதாகும்: "பயப்படாதிருங்கள், எல்லா ஜனத்துக் கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தரக்கூடிய நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்" (லூக்கா 2:10). மக்களுக்கு ஏற்படக்கூடிய பெருமகிழ்ச்சி தங்களை வழிநடத்தக் கூடிய ஒரு புதிய ஆட்சியினால் இப்போது கிடைத்துள்ளது என்று சுட்டும் வேளையில், இருள் நீங்குகின்ற நிலைப்பாடும், அச்சம் மேற்கொள்ளப்படும் போக்கும், ஏற்படக்கூடிய தைரியமும் நம்பிக்கையும் எதிர்காலத்தைப் பார்க்கக்கூடியதான உற்சாகத்தையும் அது வழங்கி நிற்கின்றது எனலாம். இது மக்களது மகிழ்ச்சியின் அடிப்படையாகும். இஸ்ரவேல் மக்களைப்பொறுத்த வரையில் ஒருவேளை அவர்களது மகிழ்ச்சி அரியதொரு அறுவடையின் பயனாகக் கிடைத்தது போன்று (3ம் வசனம்) அல்லது எதிரி முறியடிக்கப்பட்டதால் ஏற்பட்ட அனுபவமாக (4ம் 5ம் வசனங்கள்) இருக்கலாம். ஏதுவாயினும் செய்தி ஒன்றே: கடந்தகாலத்தின் கொடிய யதார்த்தம் இப்பொழுது அற்றுப்போகின்றது. எதிர்காலத்துக்கான நம்பிக்கையின் அச்சாரம் இப்பொழுது வழங்கப்படுகின்றது.

ஏசாயா இறைவாக்கினின் செய்தி கூறும் அழுத்தம் யாதெனில் இப்பொழுது தோன்றியுள்ள புதிய யுகம் அல்லது ஆட்சி நீதியும் நியாயமும் நிறைந்ததாகக் காணப்படவேண்டும். மற்றும் அவ்விதமான தன்மை உண்மையிலேயே கடவுளின் நம்பிக்கைத்தன்மையின் வெளிப்பாடேயாகும்.

இன்று நீண்டகால பெருமூச்சுக்களும் அவலங்களும் நீங்கும்படியாகக் கடவுள் எம்மவருக்குப் பெரியதொரு சந்தர்ப்பத்தைக் கொடுத்துள்ளார் என்று நம்புவது கிறிஸ்மஸ் தருகின்ற முதலாவது செய்தி. அப்படியானதொரு சந்தர்ப்பத்தில் ஒட்டுமொத்தமான மக்களதும் அன்றாடகப் பெருமூச்சுக்கள் நீங்கும்படியாகவும், அவலங்கள் தீர்க்கப்படும் வகையிலும் கடவுளின் பண்புகளான அன்பும், நீதியும், அமைதியும் அனைவருக்கும் கிட்டக்கூடியவகையில் பொருத்தமான ஊடகங்களாக நாம் திகழுவது அவசியமாகின்றது. கடவுளது அருங்கொடைக்காக நன்றிசெலுத்தும் வேளையில், அவரது இந்தச் செயலுக்கு எம்முடைய பொருத்தமான துன்புறுவோரது துயர் நீங்கவும் உடைபட்டவர்கள் குணமடையவும்தக்கதாக குணமாக்கலின் கருவிகளாக நாம் மாறுவோம் வாருங்கள் என்று அழைக்கிறேன். கடவுள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

**பேரருட் கலாநிதி டீ.எஸ். தியாகராஜா**
பேராயர், தென் இந்திய திருச்சபை-யாழ்.பேராயம்




## கடவுள் நம்மோடு இருக்கிறார்

உங்கள் யாவருக்கும் இன்றைய கிறிஸ்து பிறப்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இன்று உலகமும், மனிதனும் மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் எதிர்பார்ப்பது போன்று கிறிஸ்மஸ்ஸின் எதிர்பார்ப்பும் அதுவே. ஆனால் அது ஒரு புறத்தில் இருந்தே உருவாக வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பதை விட அது எம் யாவரதும் மனதிலும் உருவாக வேண்டும்.

"உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை, அவருக்கு உகந்தோருக்கு இவ்வுலகில் அமைதியும் உண்டாகுக" இதுதான் கிறிஸ்து பிறப்பின் செய்தியாகும். அப்படியாயின் கடவுளுக்கு உகந்தோர் ஆவது எவ்வாறு? எமது உடைகளிலா? அல்லது உணவிலா? அல்லது அலங்கார சோடனைகளிலா? அல்லது கேளிக்கை விளையாட்டுக்களிலா? அல்லது அதிகார தோரணையாலும் அதிகார நிலையாலுமா? அல்லது நாம் கூறும் பரஸ்பர வாழ்த்துச் செய்திகளிலா? அல்லது நாம் மேற்கொள்ளும் வழிபாடுகள், தர்மங்களிலா? எவற்றுக்கூடாக நாம் இறைவனுக்கு உகந்தவராக முடியும்? இவற்றையும் கடந்து கடவுள் ஒவ்வொரு உயிருக்கும் கொடுத்திருக்கும் இயல்பான இயற்கை ஆற்றலைப் பயன்படுத்தி, உயிர்களை வாழவிடுதல் என்கிற செயல்தான் கடவுளுக்கு உகந்தவர்களின் செயல். இதனைத்தான் சுதந்திரம் என்பர். சுதந்திரம் என்பது சமத்துவத்துடன் தொடர்பானது, சமத்துவம் என்பது சகோதரத்துடன் தொடர்பானது, சகோதரத்துவம் என்பது மற்றவன் எனக்கு என்ன செய்ய வேண்டுமென நான் எதிரபார்க்கிறேனோ, அதே விதத்தில் நான் அவனை நடத்துவதில்தான் தங்கியுள்ளது. இதுதான் கிறிஸ்துவின் எதிர்பார்ப்பும் ஆகும்.

இதனைத்தான் நமது ஆண்டவர் (மத். 25:40) "மிகவும் சிறியவர் ஆகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்" எனக்கூறுவதில் இருந்து நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

மானிட துன்பத்திலும், பட்டினியிலும், நீதி, உரிமை மறுப்பிலும் மனித மாண்பு சிதைவுறும் தருணங்களிலும், வாழ்வுரிமை போராட்டங்களிலும் தானும் ஒருவராக மானிட மகனும் பங்கேற்பு செய்கின்றார். ஆகவே எவரொருவரும் மானிடத்தின் மீது அன்பு கூராமலும், அதில் தமது கரிசனையை (அன்பு, இரக்கம், பரிவு) காட்டிக் கொள்ளாமலும் இருந்து மானிட மகன் பிறப்பை நினைவு கூரவோ, கொண்டாடவோ, எதிர்பார்க்கவோ முடியாது. ஏனெனில் இறைவனின் மானிட அவதாரம் (Incannation) என்பது மனிதத்தை மையமாக வைத்தே இருக்கின்றது.

எனவே இந்த வருட கிறிஸ்துவின் பிறப்பின் திருநாளை நாம் நினைவுகூர்ந்து கொண்டாடுகின்றபோது இன்று எமக்குள் கண்ணீருடன் வாழ்கின்ற மக்களை நாம் நினைவு கூர்ந்து பார்க்க அழைக்கப்படுகின்றோம். மானிட வாழ்வின் சுதந்திரம், விடுதலை என்கின்ற இரண்டும் இழந்த எம்மவர்களை நினைத்துப் பார்ப்பதுடன் அவர்தம் உறவுகளையும், அவர்தம் கண்ணீரின் மௌனத்தின் வழிகளையும் எமக்குள்ளாக உணர்ந்து கொள்ள அழைக்கப்படுகின்றோம். ஆண்டவர் இயேசு முன்மொழிந்த விடுதலையின் வாழ்வு, சமத்துவ வாழ்வு, முழுமையின் வாழ்வு இந்தக் கிறிஸ்மஸ் காலத்தில் யாவருக்கும் கிடைக்க பாடுபடுவோம், பிரார்த்திப்போம்.

**"இறை ஆசீர் உங்கள் யாவரோடும் கூட இருப்பதாக"**

**அருட்பணி. இ. ராஜ்குமார்,**
நல்லாயன் ஆலயம், உடுவில்.



## கிறிஸ்மஸ் பரிசு

காண நீவீரும் வாருங்கள்
கிறிஸ்மஸ் வந்தால் பாடுங்கள்
கீதம் பாடி ஆடுங்கள்

குழந்தையாய் துள்ளி விளையாடுங்கள்
கூடி மகிழ்ந்து நேசியுங்கள்
கெட்டவ்வகளை மறந்திடுங்கள்
கேட்டால் கொடுப்பார் தேடிடுங்கள்

கைப்பை நிறைய பரிசு பெற்றிடுங்கள்
கொடுக்கும் இறைவனை வணங்கிடுங்கள்
கோடி நன்மைகள் அடைந்திடுங்கள்
கௌரவித்து யேசு கிறிஸ்துவை நேசியுங்கள்!

-அருளி

## ஆதவன் அவதரித்த அதிசய நாள்

மார்கழி மாதத்திலே
மாட்டுத் தொழுவத்திலே
கார் குளிர் காலையிலே
காரணமாய்
வார்த்தை ஒன்று
மனிதனாய் வடிவெடுத்து
வந்துதித்த நல்ல நாள்...!
தொழுவம் ஒன்று
தொழுகை பெற்ற
திருநாள்
பாலகனாய் வந்துதித்து
பாவகங்களை போக்கிய
இனிய நாள்
ஆழடைக் கூட்டில்
ஆதவன் அவதரித்த
அதிசய நாள்!



சிந்து சிவதாஸ்.

# நம்பிக்கையில் மலரட்டும்



எங்களுக்காக யார் வருவார்? என ஏக்க குரல் ஒலி, இன்று போல் அன்றும் ஒலித்தது. நம்பிக்கையின் குரலாக "உங்களுக்காக ஒரு மீட்பர் பிறந்துள்ளார்" என்ற செய்தி சாதாரண வயலில் காவல் காத்து வந்த இடையர்களுக்கே சொல்லப் பட்டது. அந்த நம்பிக்கை வரிகளை ஊர் எங்கும் பகிர்ந்து கொண்டனர். அதனை உலகெங்கும் 2013 ஆண்டுகளாக குடும்பமாக, சமூகமாக தேசமெங்கும் கொண்டாடி பாலக இயேசுவை நினைந்து புகழ்ந்து பாடி மகிழும் காலமே கிறிஸ்மஸ் விழா.

இன்று வாழும் ஒவ்வொருவரும் அந்த நம்பிக்கை வார்த்தைகளை உறவுகள், நண்பர்கள், சமூகமாக, ஜாதி, மத பேதம் கடந்து உககெல்லாம் பகிர்ந்து கொள்ளும் ஒவ்வொருவரும் இன்றைய இறை தூதுவர்களே. எந்த நல்ல செய்தியை பாலக இயேசு சொல்ல வந்தாரோ அவருக்கே அன்று பிறப்பதற்கு தன் சொந்த மண்ணில் "சத்திரத்திலும் இடமில்லை" என ஒதுக்கப்பட்டதால்தான் மாட்டுத் தொழுவத்தில் மரியின் மடியில்மனுமகன் இயேசுவின் பிறப்பு உதயமானது. சத்திரத்திலும் இடமில்லாதவர் சரித்திரநாயகனானார். சொந்த தேசத்தில் தம் பதிவை மேற்கொள்ள வந்த சூசை, மரியாளுக்கும் தங்குவதற்கு சொந்த ஊரில் இடம் தரவில்லை.

இன்றும் ஒதுக்கப்பட்டும் இல்லிடம் இன்றியும் வாழ்ந்த தேசத்தில் மீண்டும் வாழ முடியாது அலையும் மக்கள் உருவில் அன்றைய நினைவுகளே தொடர்கிறது. பால இயேசுவின் சாயலில் பச்சிளம் பாலகர்களை காணும் போதெல்லாம் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குடிலில் வாழும் சிறுவர்கள் துயரை துடைக்க முன்வரும் ஒவ்வொரு கணமும் பாலஇயேசும் எம் இதயத்தில் பிறப்பார் என்ற நம்பிக்கையில் ஒருவர் மற்றவருக்காக மனித மாண்பை மதிக்கும் பணிகளால் பிறக்கும் பாலஇயேசுவை வரவேற்று தரிசித்து கொண்டாடி மகிழ்வோம்.

செ.யோசப்பாலா,
செயலர் கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்.



## தேவ குமாரா துயர் களைவாயே!

சின்னச் சின்ன கண்கள் செவ்வதன வதனம்
மின்னும் தேவ சாயல் மேலாம் தந்தை போல
அன்னை மரி வயிற்றில் அவதரித்த பாலன்
அன்னவனைக் கண்டு ஆவினங்கள் மகிழும்.

வானில் தோன்றும் ஜோதி வல்ல மேய்ப்பன் பிறப்பை
விரைந்தெங்கும் பரப்பும் வினோத மிதுவென்று
கோமகனைக் காண கோவலர்கள் கூட்டம்
குதித் தோடி வருவார் கும்மாளத் தோடு.

கரும்பனைய மொழி பேசும் குழந்தைகள்
சிரந்தனைக் கொய்து வாவென்று சீற்றமுடன்
இருப்பனைய நெஞ்சன் ஏரோ தாணையிட்டான்
இறைவன் மகிமைதனை இருந்தறியா மூடன்.

தொல்லை தரு மிவ்வுலகில் சுகமில்லை யென்று
அல்லல்படுவோர் தினமும் ஆண்டவரைப் பணிந்தால்
எல்லையில்லா அன்பை எம்மீது சொரிவார்
ஏற்றுவரு புத்தாண்டை எதிர்நோக்குவோமே.

கலாபூஷணம் மு.தணிகாசலம், கற்கோவளம்.




## நத்தாருக்கு அர்த்தம் கொடுப்போம்

குடியிருந்த வீடுமில்லை கால்பதித்த மண்ணுமில்லை
போரின் வடுக்களோ உள்ளமதில் ஆறவில்லை
வேதனையும் மாறவில்லை தேடுதலும் முடியவில்லை
மகிழ்வுடனே கொண்டாட மனதோ வருகுதில்லை.

மாடி வீட்டுச் செல்வமெல்லாம் குடிசைக்கு கைகொடுத்தால்
வளமான கரமெல்லாம் ஏழையோடு உறவு கொண்டால்
முகாரி மறைத்துவிடும் கல்யாணி இசைபாடும்
பாலகனாம் இயேசு அங்கே மகிழ்வுடனே பிறந்திடுவார்.

உளமாற்றம் பெற்றிடுவோம் பாலகனை ஏற்றிடுவோம்
அன்பினைக் கொடுத்திடுவோம் இருப்பதைப் பகிர்ந்திடுவோம்
நாமும் மகிழ்ந்திடுவோம் மற்றவரை மகிழ்விப்போம்
நத்தார் விழாவுக்கு அர்த்தம் நாம் கொடுத்திடுவோம்.

இ.அ.அமலரட்ணம்
யாழ்ப்பாணம்

